செந்தமிழ்ச் சிலம்பு

CLS



செந்தமிழ்ச் சிலம்பு

ஆக்கியோர்:
வி. எஸ். வி. இராகவன்

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
(United Society for Christian Literature)
MADRAS BANGALORE MYSORE TIRUVALLA COLOMBO
1953

S.B.
COPYRIGHT

First edition, 1953

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1953. B8944

முன்னுரை

தமிழகத்தின் மும்மணிகளாய்த் திகழ்ந்து வருவன திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை. இதில் முன்னது திருவள்ளுவரால் ஆக்கப்பட்டு, உலகில் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. பின்னைய இருநூல்களும் ஐம்பெருங்காப்பியம் என்னும் பகுதியைச் சேர்ந்தன. அவையாவன: சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி. இவற்றில், சிலப்பதிகாரமும், மணிமேகலையும் கதைத் தொடர்பால் ஒன்றேயாகும். ஏனெனில், சிலப்பதிகாரம் கோவலன், கண்ணகி, மாதவி இவர்களைப்பற்றிக் கூறுகிறது. மணிமேகலை என்னும் நூல், மாதவியின் மகளாகிய மணிமேகலையின் வாழ்க்கை வரலாற்றை விவரித்துக் கூறுகிறது. இவ்வாறாக, இவ்விரு நூலும் ஒன்றையொன்று பின்னிச் செல்கின்றன. இவ்வரலாறுகள் பல நூறு ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்தனவாகும்.

சிலப்பதிகாரத்தை ஆக்கியவர் இளங்கோ அடிகள் ஆவர்.

ஓலைச்சுவடியில் அமைந்திருந்த இக்காவியம் பலருக்கும் பயன்படாமல் பன்னாட்கள் மறைந்திருந்தது. தனித் தமிழ்த் தலைவர் மகா மகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் அருளினால் இது செப்பனிடப்பட்டுப் புத்தக வடிவில் வெளிவந்தது. தமிழார்வம் கொண்ட பலரும் இதைப் படித்து இன்புறுகின்றனர். பிற சங்கநூல்களைக் காட்டிலும் இது எளிமையும் இனிமையும் வாய்ந்தது.

சிலப்பதிகாரத்தின் கதையை உட்கொண்டே, செந்தமிழ்ச் சிலம்பு என்று இந்நூல் பெயரிடப்பட்டுள்ளது.

இந்நூலினால் பொதுவாக, பண்டைக்காலப் போக்கு, அரசியல், மக்கட் பண்பு, அக்காலத்து நிலவிய மதக்

கொள்கைகள் முதலியவற்றையும் சிறப்பாக, கண்ணகியின் திண்ணிய கற்பும், துறவின் பெருமையும், தன்னலம் பாராட்டாப் பெருந்தகைமைகளையும் நன்கு அறிந்து கொள்ளலாம். மற்றும் சிலப்பதிகாரம் மூன்று பொருள்களைக் குறிக்கோளாகக்கொண்டு செல்வது அறிந்து இன்புறற் குரியது. அவையாவன:

"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றுவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்"

—பதிக-55-57

ஆம். இச்சிலப்பதிகாரம் முத்தமிழாகிய இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பகுதிகளும் இடையிடையே விரவப்பெற்று விளங்கும் காப்பிய நூல். இது தமிழ்நாட்டு மூவேந்தர்களையும் குறிப்பிடுகிறது. மூவேந்தர்களின் கோநகரங்களிலும் இக்கதை நிகழ்கிறது. தண்டமிழ் ஆசான் சாத்தன்,

"முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரியது
அடிகள் நீரே அருளுக"

என இளங்கோ அடிகளை வேண்டிக்கொள்ள, அவர் இந்த இன்சுவைக் காவியத்தை யாத்தார் என்பது யாவரும் அறிந்ததே.

கண்ணகிக்குக் கோயில் அமைத்தவர்கள் நம் தமிழ் நாட்டில் மட்டும் அல்ல, எங்கெங்கெல்லாம் தமிழர் இருந்தனரோ, அங்கெல்லாம் கண்ணகிக்குக் கோயில்கள் எழுந்தன. கண்ணகி வழிபாடு கற்பின் வழிபாடாகவே நம் நாட்டில் இன்றுவரை போற்றப்பட்டு வருகின்றது. எங்கெங்கெல்லாம் கற்புக்கு உயரிய இடம் அளிக்கப் படுகிறதோ, அங்கெல்லாம் கண்ணகி கோயில்களைக் காண்கிறோம். நம் தமிழ்மாதர் ஒவ்வொருவரும் தம் இதயத்தில் கண்ணகி கோயிலை வழிபட்டுக் கற்புக்கனலை வளர்த்து வருகின்றனர் என்பது முக்காலும் உறுதி. நம்

மாணவ, மாணவிகளின் இளம் உள்ளத்தில் இவ் வுண்மைகள் நன்கு ஊன்றிப்பதியுமாயின், அதுவே அவர்கள் வாழ்க்கைக்கு ஊன்று கோல் என உதவி புரியக்கூடும் அல்லவா? இன்னும் தேசீய கவி பாரதியார் இச்சிலப்பதிகாரத்தை

"............நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரம்என் றோர் மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு"

என்று புகழ்ந்திருப்பது வெறும் வெற்றுரையல்ல; பொருள் பொதிந்த சொற்களாகும்.

காவிய நயங்களெல்லாம் கனிந்தொழுகும் இச் சிலப்பதிகாரத்தை, மக்கள் முறையாகக் கற்கவேண்டும் என்ற நோக்கத்துடனேயே, அங்கங்கு முதனூலினின்றும் உளத்திற்கு இனிமைபயக்கும் அடிகள் பல கொடுக்கப் பட்டிருக்கின்றன. இதனால் தமிழ்மக்கள் அனைவரும் சிலப்பதிகாரம் என்னும் முதனூலை ஊன்றிப் படிக்க வேண்டும் என்பதே எனது அவா.

எனது நண்பரும், பேரன்பரும், பேராசிரியர், திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி.எல்., அவர்களிடம் பலகாலம் தமிழ் பயின்றுவருபவருமான வித்துவான் திரு. மு. சண்முகம்பிள்ளை அவர்கள், தமது பல வேலைகளுக் கிடையில், இதில் பல அரிய திருத்தங்களைச் செய்து உதவியுள்ளார். அவர்க்கு எனது உளங்கனிந்த நன்றி என்றும் உரித்தாகுக.

தமிழகம் இதை அன்புடன் ஏற்று, மேலும் இச் சிறுவனை இப்பணியில் ஊக்குவித்தருளின், அஃதொன்றே எனக்குப் பெரு மகிழ்ச்சியளிப்பதாகும்.

எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிக!

ஆக்கியோன்

பொருள் அடக்கம்

புகார்க் காண்டம்

பக்கம்

1. புகார்ப் பெருமை 1
2. மணப்பந்தலில் குணச் சித்திரங்கள் 5
3. இன்பம் நிறைந்த இல்வாழ்க்கை ... 8
4. அரங்கம் ஆடிய அணங்கு 10
5. கோவலனும் மாதவியும் 13
6. இந்திர விழாவும் இடர்ப்பாடும் 16
7. கண்ணகி கனவும் கோவலன் வரவும் ... 22
8. வாணிபஞ்செய்யக் கோவலன் வழிப்படல் ... 27
9. நாட்டு வழியும் நங்கை துயரமும் ... 28

மதுரைக் காண்டம்

10. காட்டுப்பாதையும் கடுவழி கடத்தலும் ... 37
11. ஐயை கோட்டமும் ஆவேச ஆட்டமும் ... 43
12. மதுரை மூதூரும் மாதரி அன்பும் ... 50
13. சிலம்பால் விளைந்த துன்பம் 60
14. குரவைக் கூத்தும் கண்ணகி துயரமும் ... 66
15. கண்ணகி புறப்பாடு 70
16. மன்னனிடம் வழக்குரைத்த கண்ணகி ... 73
17. வஞ்சின மாலையும் மதுரை அழிவும் ... 77
18. மதுரை மாதெய்வமும் வீரபத்தினியும் ... 81

வஞ்சிக் காண்டம்

19. குன்றக்குறவரும் வஞ்சிமாநகரும் ... 85
20. செங்குட்டுவனும் கண்ணகி கோட்டமும் ... 96

கட்டுரைப் பயிற்சி... 107

செந்தமிழ்ச் சிலம்பு

புகார்க் காண்டம்

1. புகார்ப் பெருமை

உழவ ரோதை மதகோதை உடைநீ ரோதை தண்பதங்
கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி!
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்தவெல்லாம் வாய்காவா
மழவ ரோதை வளவன்றன் வளனே வாழி காவேரி!

தமிழ்வளத்தோடு ஏனைய நீர்வளம், நிலவளம், மலைவளம், குடிவளம் என்னும் நால்வகை வளங்களும் நிறைந்து பொலிந்தது நம் தண்டமிழ் நாடு. அதனை, சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தரும் முறை திறம்பாது அரசாண்டு வந்தனர். இவர்களுள் சோழரது நாடே ஏனைய நாடுகளிலும் நீர்வளம் நிறைந்து, அதனால் பல்வகை வளங்களையும்பாங்குற மக்களுக்கு அளித்துப் புகழ் மிகுந்து விளங்கியது. இதற்குக் காரணம், வான்பொய்ப்பினும் தான் பொய்க்காமல், காலத்தில் பெருகி, மக்கள் உயிரை வளர்க்கும் காவிரியாறேயாகும். இதுபற்றியே இந்நாட்டிற்குப் புனல் நாடு, நீர் நாடு என்ற சிறப்புப் பெயர்களும் பிறந்தன.

சோழவளநாடு

"மேதக்க சோழ வளநாடு சோறுடைத்து"

என்ற ஔவை மூதாட்டியின் அமுத மொழியும் இச்சோழ நாட்டின் சிறப்பை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

காவிரியாறு கடலோடு கலக்கும் இடத்தே பெயர் பெற்றிலங்கியது காவிரிப்பூம் பட்டினம். இது முற்காலத்தில் சோழ மன்னர்களுக்குத் தலைமுறை தலைமுறையாகத் தலை நகராக அமைந்திருந்தது. பத்தினிப் பெண்டிர் பலரும், முத்தமிழ் வாணர் பலரும், அதைத் தம் உறைவிடமாகக்கொண்டு வாழ்ந்தனர். இதற்குப் புகார் என்றும், பூம்புகார் என்றும், காகந்தி என்றும் பல்வேறு பெயர்கள் உண்டு.

புகார் நகரம்

இக்காவிரிப்பூம் பட்டினம், மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்னும் இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டிருந்தது. இவ்வணிநகரின் மருவூர்ப்பாக்கத்தில் மாடமாளிகைகள் விண்வரை யெட்டின. கடற்கரையை அடுத்து வணிகர் வாழ்விடங்கள் வானத்தை முட்டின. "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற தொன்மொழிக்கிணங்க, தம் சொந்த நாட்டை விட்டு, செல்வம் தேடும் பொருட்டுச் செம்மை மிக்க செந்தமிழ்நாட்டுக்கு வந்து புகுந்த அயல் நாட்டார் பலர். அவர்கள் எல்லாரும் தமிழ்மக்களுடன் கருத்தொருமித்து ஒற்றைக் குடும்பம்போல ஒன்றுபட்டு வாழ்ந்தனர். மற்றும் வண்ணமும், சுண்ணமும், நறுஞ்சாந்தும், பூவும், நினைத்தார்க்கு நினைத்தவற்றை விற்றுச் சுற்றித் திரியும் வாணிபர் பலர் விளங்கினர். பல்வகைப் பண்டங்களும் முட்டாமல் விற்கும் வாணிபர் பலர் குடியிருக்கும் கடைவீதிகள் அங்கே நலஞ்சிறந்து விளங்கின. பட்டாலும், கம்பளத்தாலும், பருத்தி நூலாலும், பலவகை வேலைப்பாடுகளுடன் அழகிய ஆடைகள் நெய்யும் நுண்வினைக் காருகர் இருக்கையும் சிறந்து

மருவூர்ப் பாக்கம்

விளங்கின. இன்னும், துகிர், ஆரம், அகில், பொன், மணி முதலியன விற்கும் மறுகுகளும் பல இருந்தன. "பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு எண்வகைக் கூலம் குவித்த" கூலக்கடை வீதிகள் பலவும் அங்கு உண்டு. மற்றும் வெண்கலக் கன்னார், செம்புகொட்டிகள், காழியர், கூவியர், மீன்விலைப் பரதவர் முதலாயினோரும், மரங்கொல் தச்சரும், கருங்கைக் கொல்லரும் வாழ்ந்து வந்த பல்வகை இடங்களும் இலங்கி நின்றன. குரலிலும், யாழிலும் ஏழ்வகைச் சுரங்களை நயம்பட ஒலிக்கும் திறனமைந்த பாணர்கள் வசிக்குமிடங்களும் ஆங்காங்கு விரவியிருந்தன.

பாடல்சால் சிறப்பமைந்த பட்டினப்பாக்கத்தில் அரச வீதியும், கொடித்தேர் வீதியும், பீடிகைத் தெருவும், வாணிகர் மறுகும் விளங்கி நின்றன. "பசியும், பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தும் மறையோர்" வீதிகளும் மாண்புடன் விளங்கின. மற்றும் வேளாளர்,

பட்டினப் பாக்கம்

மருத்துவர், சோதிடர், மாகதர், கூத்தர், நாழிகைக்கணக்கர் முதலாயினோர் மறுகுகளும் மாண்புற விளங்கின. யானை குதிரைகள் செலுத்துவோரும், நெடுந்தேர் ஊர்கின்றவரும், கடுங்கண் மறவரும் வாழும் வாழ்விடங்கள் பலவும் அங்குச் சிறப்புற்றிருந்தன. இவ்விரு பாக்கத்துக்கும் நடுவே ஓர் அங்காடி அணியுற அமைந்திருந்தது. அவ்விடத்தில் கொடுப்போர் ஓதையும், கொள்வோர் ஓதையும் இடையறாது ஒலித்துக்கொண்டிருந்தன.

அவ்விடத்தில் நாளங்காடிப் பூதத்தின் பீடமும், முத்துப்பந்தர், தோரணவாயில், பட்டி மண்டபம் முதலிய காட்சி நிறைந்த இடங்களும் விரவி யிருந்தன. மற்றும் நெடுங்கல் நின்ற மன்றம், பூதசதுக்கம், வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், பாவை மன்றம் என்னும் ஐவகை மன்றங்களும் சிறந்து விளங்கின. வீரர்களும், மறவர்களும், அங்கு நியமிக்கப் பெற்ற பூதத்துக்குப் பலியிட்டு வழிபட்டு வந்தனர்.

ஐவகை மன்றங்கள்

மற்றும் அந்தப் பூம்புகார், சக்கரவாளக் கோட்டம், வச்சிரக் கோட்டம் முதலிய கோட்டங் களையும் தன்னிடத்தே கொண்டிருந்தது. ஐம் பெருங் குழுவும், எண்பேராயமும், அரச குமரரும், பரத குமரரும் களிறு, தேர், புரவிகளை ஊர்ந்துவந்து திரண்டு வேந்தனை வாழ்த்தி நின்ற ஒலியும், காவிரியின் நன்னீரைப் பொற்குடங்களில் தூக்கிவருகின்றவர் ஒலியும், அறநெறிச் சொற்பொழிவுகள் செய்யும் அறவோர் ஒலியும் அங்கு மிகுந்திருந்தன.

கோட்டங்கள்

இமயமலை முதல் குமரிமுனைவரை தனது ஒப்பற்ற குடைக்கீழ் ஆண்ட கரிகால் பெருவளத் தானுக்கே, அக்காவிரிப்பூம் பட்டினம் திருமகள் புகுந்த உறைவிடமாகத் தகுந்த மேன்மை யளித்த தெனில், அந்நகரின் பெருமையையும், சோழ நாட்டின் வளப்பத்தையும் இன்னும் எங்ஙனம் அளவிட்டுக் கூறமுடியும்?

''நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல,
நாட வளந்தரு நாடு''

— திருக்குறள்

2. மணப்பந்தலில் குணச் சித்திரங்கள்

"பூம்புகார் போற்றுதும், பூம்புகார் போற்றுதும்"
என இளங்கோவடிகள் புகழும் புகார் நகரத்தில், வண்மையாலும், வாணிகத்தாலும், புகழ்பெற்று ஓங்கியது மாநாய்கன் குடும்பம். இக்குடும்பம், இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என்னும் மூவகை வணிகமரபினுள் பெருங்குடியர் இனத்தைச் சேர்ந்ததாகும். ஆகவே, பெருங்குடிமரபினுள் தோன்றிய மாநாய்கன், குடும்ப கெளரவத்துடனே, செல்வம் கொழிக்கப்பெற்று, வாணிபம் செய்து, பசித்தோர்க்குப் பசியை யாற்றி, உற்ருர் உறவினர்க்குக் களிப்பூட்டி, "தானம், தவம், கல்வி" என்னும் முப்பேறுகளும் நிரம்பப் பெற்றவனுய் வாழ்ந்து வந்தான். செல்வத்திலும் கீர்த்தியிலும் அவன் சிறந்து விளங்கினுன்.

"தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்ருமை நன்று" —திருக்குறள்

என்ற தெய்வப்புலமைத் திருவள்ளுவனாின் வாக்கின்படி, மாநாய்கன் புகழோடே பிறந்தான்; புகழோடே விளங்கினுன்; புகழோடே வாழ்ந்தான். அவன் தனக்குத் தோன்றிய பெண்மகவுக்குக் கண்ணகி எனப் பெயரிட்டான். "புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?" இவனுக்குப் பிறந்த பெண்மணி மிக்க அழகும், அழகுக்கேற்ற அறிவும், அறிவுக்கேற்ற ஆற்றலும், மனத்திட்பமாகிய கற்பும் வாய்க்கப் பெற்று வளர்ந்து வந்தாள். பொறுமை, பணிவு,

மாநாய்கன் புதல்வி கண்ணகி

இரக்கம் முதலிய நற்குணங்கள், கண்ணகி பிறந்த பொழுதே அவளுடன் பிறந்தன.

"போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறம்இவள் திறம் என்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ"
—மங்கல—26–29

அம்மங்கையின் முகத்தில் தோன்றும் பொலிவைக் கண்ட மற்ற மாந்தர்கள், "செந்தாமரைச் செல்வியோ இவள்!" என அவளைப் புகழ்ந்தார்கள். அவள் கற்பினுக்கு உவமை கூறவேண்டின், அருந்ததியைத்தான் கூறவேண்டுமெனப் புகழ்ந்தார்கள். "அங்கண் உலகின் அருந்ததி அன்னாள்" ஆகிய கண்ணகி, இளமை நலம் இனிது நிரம்பப் பெற்றவளாய்ப் பன்னீராண்டுப் பிராயமடைந்தாள்.

மாநாய்கன்போன்றே, புகார் நகரத்தில், பெருங்குடியர் மரபில் மாசாத்துவான் என ஒரு வணிகன் சிறப்புடன் வாழ்ந்திருந்தான். அவன் பெருஞ் செல்வன்.

"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்"
—திருக்குறள்

என்ற பெருந்தகை வள்ளுவர் வாக்கிற் கிணங்க, பிறர் பொருளையும் தம் பொருள்போல் பாதுகாத்து வாணிகம் செய்துவந்தான். இதனால் மாசாத்துவானின் செல்வம் ஒன்று பத்தாகப் பெருகிற்று. செல்வத்தில் சீமானான மாசாத்துவானுக்குக் கோவலன் என்னும் ஒரு மகன் பிறந்தான்.

மாசாத்துவான் மகன் கோவலன்

அக்கோவலன் தன் வயதுக் கேற்பப் பல கலைகளையும் கற்றுத் தன் மூதாதையர் தொழிலாகிய வாணிபஞ் செய்யத் தொடங்கினான். அவன் செவ்வேள் போன்ற செழுமையும் இளமையும் வாய்க்கப் பெற்று, அறிவிலும், குணத்திலும் சான்றோரால் புகழப்பட்டு விளங்கிப் பதினாறுண்டுப்பிராயம் எய்தினான்.

"மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேள் என்றிசை போக்கிக் காதலால்
கொண்டேத்தும் கிழமையான் கோவலன்"

—மங்கல—36—39

என்று இளங்கோ அடிகள் வருணிக்கும் கோவலன் மணப் பருவத்தை அடைந்தான்.

திருமணம்

இருபெரும் செல்வச் சீமான்களாகிய மாசாத்துவானும், மாநாய்கனும் ஒருங்கு கூடிக் கோவலனுக்கும், கண்ணகிக்கும் மணவினை நடத்த ஒருப்பட்டனர். அவ்வாறே திருமணத்துக்குரிய நன்னாள் ஒன்றை நியமித்து, பொற்கலனும், பூமாலைகளும் அணிந்த மாதர் சிலரைப் பட்டத்து யானையின்மீது ஏற்றித் திருமணச் செய்தியை முரசறைந்து அறிவித்தனர். அம்மங்கல நாளில் முரசங்கள் இயம்பின; சங்கங்கள் ஊதின; மங்கல வாத்தியங்கள் எங்கும் முழங்கின. அழகிய தூண்களும் நீல விதானங்களும் அமைந்த முத்துப் பந்தலிலே கோவலன் முறைப்படிக் கண்ணகியைத் திருமணம் செய்து கொண்டான். இவர்களுடைய திருமணங் காணச் சென்ற மாந்தர்கள் "மணியும் ஒளியும் போலவும்,

மலரும் மணமும் போலவும் காதலர் இருவரும் ஒருவரை யொருவர் என்றும் பிரியாது வாழ்வா ராக!'' என்று மங்கல வாழ்த்துப் பாடினர்; நறுமலர் தூவி வாழ்த்தினர். இவ்வாறு மணவினை செய்து கொண்ட மணாளர்களின் இனிய இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாக ஆரம்பித்தது.

3. இன்பம் நிறைந்த இல்வாழ்க்கை

செல்வச் சீமான் மாசாத்துவானின் புதல்வன் கோவலன் தன் காதலியுடன் இல்லறம் நடத்தத் தொடங்கினன். அவர்களது இல்வாழ்க்கை அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளின் பயனையும் முட்டின்று நல்கிற்று.

காதலர் மன மோத்த வாழ்க்கை

கோவலனும் கண்ணகியும், தங்களுக்காக மயனால் எழுப்பப் பட்டதேபோல் தோன்றும் எழுநிலை மாடத்தின் இடை நிலத்தில் நாலாந் தட்டில் வீற்றிருந்தனர். அப்பொழுது பல்வகைப் பூக்களின் நறுமணம், குளிர்ந்த தென்றற் காற்றிலே கலந்து, காதலர்மீது வீசி, அவர்கள் மனத்திற்கு இன்பம் நல்கிற்று. தமிழ்ப் பாட்டின் இன்னோசை தென்றலிலே தவழ்ந்து வந்து, காதலர் மனத்தில் புகுந்து களி யாட்டம் செய்தது. இருவரும் அன்பு கனிந்த பல பேச்சுக்களைப் பேசி, இன்பமாகப் பொழுது போக்கினர்.

இவ்வாறு இன்பமாய் வாழ்ந்த நாட்களில் கோவலன் கண்ணகியின் குலத்தையும், குண நலத்தையும் பலவாறாகப் புகழ்ந்து பாராட்டுவான்

ஆயினன்; கருத்தொரு மித்த கண்ணகியின் அழகினை விழுங்கி விடுபவன்போல் பார்த்துப் பலபடப் புகழ்ந்துரைத்தான். "கண்ணகி, உனது அழகிய சாயலைக் கண்டு வெட்கி மணிநிற மஞ்ஞைகள் காட்டுக்குச் சென்று விட்டன; மென்னடையுடைய அன்னங்கள், உனது 'பஞ்சு பட்டால் நெஞ்சு துடிக்குமோ?' என்று அவ்வளவு மென்மை பொருந்திய பாதங்களைக்கண்டு நாணித் தலைகுனிந்து, பண்ணைகளிற் சென்று மறைந்து கொண்டனபோலும்! குழலும், யாழும், அமிர்தமும் குழைத்தால் எத்தகைய இன்பம் பயக்குமோ, அத்தகைய இனிமையைக்கொண்ட உனது மென் மொழியைக் கேட்டுக் கிளிகள் தங்களுக்குள்ளே மிக்கு வருந்துகின்றன!" இங்ஙனமாகப் பலப்படக் கண்ணகியின் தோற்றத்தைப் புகழ்ந்துரைத்தான் கோவலன். மேலும், அவள் அடி முதல் முடிவரை அணிந்திருந்த அணிகளின் அழகும், பல்லிருங் கூந்தலிற் சூட்டியுள்ள நறுமலர் மாலை மணமும் அவன் மனத்தைக் கவர்ந்தன. இயற்கையழகு படைத்த அவளுடைய முகத்திலே வியர்வை துளிக்க ஆபரணம் முதலியன பூட்டிய தோழியர் களின் அறியாமையை எடுத்துக் கூறிச் சிரித்தான். பின்னர்,

கோவலன் கண்ணகியைப் புகழ்தல்

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!
மலையிடைப் பிறவா மணியே என்கோ?
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ?
யாழிடைப் பிறவா இசையே என்கோ?" -மனை-73-79

என்று கூறிக் கண்ணகியின் நலம் புனைந்துரைத் தான் கோவலன். பொன், முத்து இவை எளிதில் கிடைக்கும் பொருளா? மிக்க அருமையானதல்லவா? அவை அணிவார்க்கு எவ்வகை யின்பம் ஊட்டு கின்றன? வாசனைப் பொருள்கள், கரும்பு, தேன்: இவை மூக்கிற்கும், நாவிற்கும், பிற அவயவங்கட் கும் இன்பம் தரும் பொருள்களல்லவா? இவை போன்றே கண்ணகியும், கோவலனுடைய கண்ணை யும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்து அவனுக்கு இன்பத் தேனை நல்குகின்றுளாம்!

இங்ஙனம் கருத்தொருமித்துக் களித்து வாழும் காதலர் இருவரும், இல்லறம் என்னும் நல்லறத் தைப் புகழ்சிறக்க நடத்தி வரலாயினர். "அறவோர்க் களித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க் கெதிர்தல், விருந்தெதிர்கோடல்" ஆகிய இல்லற ஒழுக்கங்களைச் செவ்வனே நடத்த, கோவலன் நற்றுய், இளந் தம்பதி களைத் தனியாக ஒரு மாளிகையில் அறமோங்கும் வகையில் வாழ்ந்து வரச் செய்தாள். இவ்வாறு சுற்றமெலாம் மகிழக் கோவலனும் கண்ணகியும் சில ஆண்டுகள் இனிதே வாழ்ந்து வரலாயினர்.

இல்லறமும் நல்லறமும்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" —திருக்குறள்

4. அரங்கம் ஆடிய அணங்கு

காவிரிப்பூம் பட்டினத்தில் சித்திராபதி என்னும் மாது ஒருத்தி இருந்தாள். அவள் கணிகையர் வகுப்பைச் சேர்ந்தவள். பணத்தில் பேராசை யுடையவள். அவளுக்கு ஒரு பெண் மகவு பிறந்தது. அதற்கு மாதவி எனப்

மாதவி

பெயர் சூட்டி, மிக்க அன்புடன் சீராட்டித்தாலாட்டி வளர்த்து வந்தாள்.

அம்மகவிற்கு ஐந்து வயது தொடங்கியதும் ஆடல் பாடல்களைக் கற்பிக்க, அதற்கேற்ற ஆசிரியர்களை நியமித்தாள். மாதவிக்குச் சுறுசுறுப்பும் மதி நுட்பமும் இருந்தன. ஆதலின் அவள், ஆசிரியர்பால் கற்கவேண்டிய ஆடல் பாடல்களைப் பன்னிரண்டு வயதுக்குள் கற்று, அக்கலையில் மிக்க தேர்ச்சி பெற்ருள். நடனக் கலையில் நடன ராணியாக அவள் விளங்கினுள்.

அக்காலத்தில் திறமையை எடுத்து இயம்புவதற்கு அரச சபையே ஏற்றதாக இருந்தது. தாம் கற்ற கல்வியையோ, கலைகளையோ, அல்லது வேறெந்தப் பேற்றையோ, அரச சபையில் எடுத்துச் சொல்லிப் பரிசு பெறுவது முற்கால வழக்கம். அவ்வாறே, மாதவியும், தன் திறமை மிக்க ஆடல் பாடல்களை வேந்தன் சபையில் ஆடிக் காட்ட இச்சைகொண்டாள். அதற்கான பெரும் ஆயத்தம் செய்யப்பட்டது.

கலைத்திறன் காட்டல்

நடன அரங்கேற்றம் என்ருல், சாதாரணமான நிகழ்ச்சி யன்று. ஆடலைக் கற்பிப்போன், இசையாசிரியன், இயற்றமிழ்ப் புலவன், தண்ணுமை முதல்வன், குழலோன், யாழ் பயிற்றும் ஆசிரியன் ஆகிய கலை வல்லுனர் பலரும் ஒருங்கு கூடினர். சிற்பநூல் முறைப்படி இயற்றப்பட்ட அரங்கத்தில் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய இடத்தில் அமர்ந்திருந்தனர். அவ்வரங்கத்தில், விளக்குக்கள் ஏற்றியும், எழினிகள் வகுத்தும், நல்விதானம்

நடன அரங்கேற்றம்

கட்டியும், முத்துமாலை நாற்றியும், நவமணிகளால் அலங்கரித்தும் பேரழகு விளங்கச் செய்தனர்.

பட்டத்து யானையின்மீதேறி, அரசன் ஐம் பெருங் குழுவும் உடன்வர, அரங்கத்தில் புகுந்தனன். அச்சமயம் இசைக்கும் கருவிகளெல் லாம் இயம்பின; மங்கலமாகிய பாலைப் பண் பாடப் பெற்றது. மாதவி, அரங்கின்மீது வலக்காலை முன் வைத்து ஏறி, வலத்தில் பொருந்திய கவின் பெருந் தூணைப்பொருந்தி, பொன்னால் இயன்ற பூங்கொடி நடிப்பதேபோல் ஆடினாள்.

> "பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் வகுத்தென
> நாட்டிய நன்னூல் நன்குகடைப் பிடித்துக்
> காட்டினள்" —அரங்-157–159

என்று இளங்கோவடிகள் மாதவியின் நடனத்தை மிக அழகாக வருணிக்கின்றார்.

மாதவி அரங்கின்மீது ஆடும்போது, அவள் மட்டுமா ஆடினாள்? இல்லை. அங்கிருந்தோர் அனைவரும் ஆடினார்கள். அந்த நடன அரங்கமே ஆடியது. உலகமே சுழன்றது. மாதவி சற்றே தன் நாட்டியத்தை நிறுத்தினாள். அப்பொழுது தான் அங்கிருந்தார் எல்லாரும் தத்தம் சுய உணர்வு பெற்றனர். பலத்த சிரக்கம்பம் செய்தனர்.

நடனத்தின் சிறப்பு—அரசன் அன்பளிப்பு

அரசன் விழிப்படைந்தான். மெய் மறந்து நின்றவன்—மாய உலகில் சிந்தனையைச் செலுத்தியவன்—தன் சொந்த நினைவிற்கு வந்தான். தன் முன்னே அரங்கில் ஆடப்பட்ட நாட்டியத்தின் மேன்மை யைக் கண்டு சொக்கினான்; மகிழ்ந்தான். உடனே அரசன் மாதவிக்கு, ஆயிரத் தெண்மழகஞ்சுப் பொற் காசுகள் வெகுமதி கொடுத்ததோடு, தன் கழுத்தில்

இருந்த பச்சை மாலையையும் கழற்றிப் பரிசிலாக அளித்தான். சோழன் அளித்த பரிசு மாதவி இதயத்தில் கலை ஆர்வத்தை இன்னும் அதிகமாக்கிற்று. கலை ஆர்வம்கொண்ட மாதவி கலை அரசியாய்த் திகழ்ந்தாள்.

மாதவியின் நடனத்தைக் காணக் குழுமியிருந்த நகரப் பெரு மக்களில் கோவலனும் ஒருவன். கலைக்கு விளக்கங் காட்டிய மாதவியின் நடனத்தை அவனும் கண்ணுற்றான். தன் மனத்தை அவள் கலைக்கே அர்ப்பணம் செய்தான். மாதவியின்பால் தன் மனத்தைத் திருப்பினான். எப்பொழுதும் கோவலன் அக்கணிகையின் நினைவாகவே கலையைப் போற்றி வருவானாயினன். ஆயினும் அதுகாறும் நடனத்தைக் கண்டுகளித்தானே தவிர, அவளுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைக்காது தவித்தான். அணங்கின் அரங்கேற்றம், கோவலன் மனத்தில் புகையை எழுப்பி அனலாக மாறும்படி செய்தது. சிறிது காலத்தில் அவன் கொண்ட காதல் நோய் கொழுந்துவிட்டு எரியும் சுவாலையாக மாறிற்று.

கோவலன் மாதவியை நினைந்துருகல்

5. கோவலனும் மாதவியும்

அரசன் தனக்குப் பரிசளித்த பச்சை மாலையை மாதவி ஒரு கூனி கையில் கொடுத்து, "இம்மாலை ஆயிரத் தெண் கழஞ்சுப் பொன் விலை பெறுவது; இதனை வாங்குபவர் மாதவிக்கு மணமகனாதற்கு உரியர்" என்று சொல்லி, விலை கூறுமாறு நகரப் பெருந்தெருவிலே நிறுத்தினாள்.

மாதவியின் அழகிலும், இனிமையான நடனத்திலும் தன் கருத்தைப் பறிகொடுத்த கோவலன் கூனியின் சொற்களைச் செவியேற்றான். பரியமாகக் கூறிய ஆயிரத் தெண் கழஞ்சுப் பொன்னையும் கொடுத்து அந்த மாலையைக் கோவலன் பெற்றான். கூனியுடன் மாதவி மனையை அடைந்தான். மாதவியை மணந்தான். அவளை விட்டுச் சிறிதேனும் பிரிய விருப்பமில்லாதவனாகி, நடனத்தை நயந்தும், வியந்தும், கலையரசிக்குக் கலை ஆர்வத்தை யூட்டிக் காலத்தை இன்புறக் கழித்து வருவானாயினன்.

கோவலன் மாதவி நட்பு— கண்ணகி மறப்பு

"மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு
மணமனை புக்கு மாதவி தன்னொடு
அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி
விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்"

—அரங்- 170-174

என்று கோவலனின் மாறிய நிலையைக் காட்டுகிறார் கவிஞர்.

இதன் காரணமாகக் கோவலன், தன் குலப் பெருமையையும், வீட்டையும், மனைவி கண்ணகியையும் அறவே மறந்தான். சுற்றமெலாம் குற்றமெனப் போற்றும் கணிகையாம் மாதவியின் பக்கலிலே இருந்து தன் காலத்தைப் போக்கி வந்தான்.

மாதவியின் நடன மாளிகையில் மல்லிகையும் முல்லையும் மணஞ் சொரிந்து பூத்து நின்றன. "விரிகதிர் பரப்பி உலக முழுதாண்ட ஒரு தனித் திகிரியோன்" ஆகிய சூரியன் மாலையில் மேற்கிலே

மறைந்து கொண்டான். அப்பொழுது முழு நிலா, பாலாழி வெண்ணெய் உருண்டு திரண்டதுபோல், வானத்தில் உதித்தது. மற்ற விண் மீன்கள் மாமதியைக் கண்டு மயங்கி, வெட்கிக் கண்களைச் சிமிட்டிப் பதுங்கிக் கொண்டன. தண்ணீர் நிறைந்துள்ள தடாகங்களில் தாமரை மலர்கள் தங்கொழுநனைப் பிரிந்து ஒளியிழந்ததுபோல் இதழ் குவிந்து நின்றன. அங்கு நின்ற குவளையும், கழுநீர் மலரும், தங்கள் இன்னலம் யாவற்றையும் இயற்கைத் தேவிக்குச் சொரிந்து அழகு படுத்துவனபோல் விளங்கின. மந்த மாருதம் துன்புற்ற இதயத்தைப் பிணைத்து, இழுத்து, ஒரு நிலையில் இருக்கச் செய்தது. இத்தகைய மாலைக் காலத்தில் கோவலன் தன் கருத்திற்கிசைந்த காதலியாகிய மாதவியுடன் நிலா முற்றத்தில் வீற்றிருந்து, இன்பக்கடலில் ஆழ்ந்து கரை காணாது தத்தளித்துக் கொண்டிருந்தான்.

நிலாமுற்றம்

இன்பக் கடலில் அமிழ்ந்த கோவலனுக்கு நேர் மாருகக் கண்ணகி துன்பக் கடலில் கரை காணாது தத்தளித்துக் கொண்டிருந்தாள். கற்பின் பொற்பினுக்கு உதாரணமாகிய கண்ணகி, தன் காதலன் பிரிவாற்ருமல், சோகக் கடலில் மூழ்கி, அழுத கண்ணோடு அரற்றுவாளாயினள். பஞ்சினும் மென்மையான அவள் பாதங்கள் பொற் சிலம்பை அறவே மறந்து நின்றன. மதியை விஞ்சி நின்ற முகமோ, திலகத்தை இழந்து நின்றது. கண்கள் அஞ்சனத்தை மறந்தன. மையிருங் கூந்தலோ, நெய்யணி மறந்தது. மற்றும், கண்ணகி, மங்கல அணியே யன்றி மற்றைய அணிகளை அறவே

மறந்தாள். காதிற்கிடும் கொடும் குழையாகிய ஆபரணத்தையும் துறந்தாள்.

கண்ணகி உகுத்த கண்ணீர்

இளவேனிற் காலத்துக்காக இனிதாக அமைக்கப்பட்டிருந்த அழகிய நிலா முற்றத்தை அணுகாது, விலகியே நின்ருள். வீசு தென்றலும், மாலை மதியமும், மாளிகையில் புகா வண்ணம் சாளரங்களைச் செவ்வனே அடைத்தாள். மலையத்து ஆரமும், மணி முத்தாரமும் தன் மார்பகத்தில் சேராது போக்கினுள். அகில், சுண்ணம் முதலிய வாசனை யூட்டும் பொருள்களையும் வெறுத்து நின்ருள். குவளை மலரும், செங்கழுநீர் மலரும் மணிப் பூ மஞ்சத்தில் சேராது கழிந்தன. தனிப் பெருங் கொழுநனைப் பிரிந்ததால் ஏற்பட்டுள்ள துயரத்தால் விம்மி விம்மிக் கலங்கா உள்ளமும் கலங்கி வாடினுள். இது இரவோ, பகலோ என வித்தியாசம் அறியாதபடி எந்நேரமும் துயரமுற்றுச் சோகக் கடலில் ஆழ்ந்து, கண்ணீர் உகுத்து நின்ருள். மாலை மதியமும்,

> "கூடினுர் பால்நிழலாய்க் கூடார்பால் வெய்யதாய்க்
> காவலன் வெண்குடைபோல் காட்டி" —அந்தி-85-86

ஒளியைப் பரப்பி, அவரவர் மனத்துக்கேற்ப இன்பத்தையும், துன்பத்தையும் அள்ளி அள்ளி வீசிக் கொண்டிருந்தது.

6. இந்திர விழாவும் இடர்ப்பாடும்

சோழ நாட்டைத் தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் ஆண்ட காலத்து, இயற்கையன்னை வெகுண்டு, மழை வளத்தைக்

குறைத்ததன் காரணமாக, மக்கள் வறுமைப் பிணியால் அல்லலுற்றனர்கள். அக்காலத்தில் அருந் தமிழ்ச் செல்வர் அகத்திய முனிவர், நாட்டில் இந்திர விழாக் கொண்டாடினல், நலம் பலவும்சுரக்கும் என நவின்றனர். அத்தவப் புதல்வரின் சொற்களைச் சிரமேற்கொண்டு, அதன்படியே அரசன் இந்திர விழாக் கொண்டாடப் பெரு மழை பெய்தது. அதன் காரணமாக, நாடு வளமுற்றது; மக்களின் வறுமைப் பிணி நீங்கியது; உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கியது. அது முதல் ஆண்டுதோறும், இந்திரன் கருணையை வேண்டி, இந்திர விழா வென்னும் பெரியதோர் விழாவினைச் சிறப்புற நடத்தி வந்தனர்.

இந்திர விழா ஏற்படக் காரணம்

அவ்விழாவின் காரணமாக, மருவூர்ப்பாக்கம் பட்டினப்பாக்கம் என இருபெரும் பகுதிகளைக் கொண்ட காவிரிப்பூம் பட்டினம் கோலாகலத்தில் ஆழ்ந்தது. அன்று இந்திரனுக்குத் திருவிழாக் கொண்டாடும் நன்னாள். இந்திரன் ஆணையால் அனுப்பப்பட்டு, அங்காடியில் அமர்ந்த பூதத்திற்குச் சித்திரைத் திங்களில் மறவர் குலப் பெண்கள் பொங்கலிட்டுப் பூவும் புகையும் சொரிந்து, "பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரக்கென" வாழ்த்தி வணங்கினர். தம் நாடாளும் வேந்தன் நீடூழி வாழ வாழ்த்துக் கூறிக் குரவைக் கூத்தும் ஆடினர். மருவூர் மருங்கில் வசித்து வந்த மறங்கொள் வீரரும் பட்டினப்பாக்கத்தின் படை போன்ற பெருமக்களும் "யான் முன்னே, தான் முன்னே" என்று ஒருவரையொருவர் முந்திச்

விழாவின் கோலாகலம்

சென்று, "வெற்றிவேந்தன் கொற்றங்கொள்க" என அவ்வைம்பெரு மன்றங்களிலும் பலிக் கொடைப் புரிந்தார்கள். அரச வீதிகளிலுள்ள பல்வகை மன்றங்களிலும், மாளிகைகளிலும், பன்னூல் பயின்ற புலவரும், அறநெறியில் முறை திறம்பாது நின்றொழுகிய சான்றோரும் அறச் சொற்பொழி வாற்றி அனைவரது சிந்தனையும் செந்நெறியில் செல்லுமாறு நெறிப்படுத்தினர். சமயவாதிகள் வெவ்வேறு இடங்களில் பற்பல அரும்பொருள்கள் பற்றிச் சொல்லாடல் செய்து வந்தனர். நீர்த்துறைகளிலும், ஆற்றிடைக் குறை யிலும், வெண்மணல் மேட்டிலும், தேவரும் மக்களும் ஒன்றெனக் கலந்து உறைந்து வருவா ராயினர். தேவர்கள் எல்லாரும் இப்பூம்புகாரில் தங்கள் இமையா நாட்டத்தைச் செலுத்தியதால், இவ்வணி நகரே, தேவலோகம் போன்று, எழில் பெற்று விளங்கிற்று.

அரசனது ஐம்பெருங் குழுவும், எண்பேராய மும், பரதகுமரரும், இவர்பரிப் புரவியர் பலரும், களிற்றின் தொகுதியினரும் ஒருங்கு சேர்ந்து, தண்ணறுங் காவிரியின் புண்ணிய நன்னீரைப் பொற் குடத்தில் ஏந்தி,

"மண்ணகம் மருள, வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழுநீராட்டி" —இந்தி–167–168

விழாவைச் சிறப்பித்து நின்றனர். அப்பொழுது பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவபெருமான் கோயிலிலும், அறுமுகச் செவ்வேளின் அணிதிகழ் கோயிலிலும், பலதேவர் கோயிலிலும், நீலமேனி யுடைய நெடியோனாகிய கண்ணபிரான் ஆல யத்திலும், மாலை வெண்குடையுடைய இந்திரன்

கோயிலிலும், நால்வகை வேதங்கள் சொல்லும் நெறியிலே பல்வகை ஓமங்கள் செய்யப்பட்டன.

அறவோர் பள்ளியிலும், அருகர் பள்ளியிலும் ஆன்றோரின் புண்ணிய கதைகள் திறம்பட உரைக்கப்பட்டன. தோலினாலாகிய இசைக் கருவிகள் ஒருபுறம் முழங்க, பண்ணொடு பாடும் யாழ்ப் புலவர் இன்னிசை நாதம் எழுப்பினர். ஒவ்வொரு மூலை முடுக்கிலுள்ள மக்களும் கண் துயிலாது, விழாவிலேயே தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தி, இன்பம் நுகர்ந்து இந்திரனைக் கொண்டாடினார்கள். இவ்வாறு இந்திர விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

இப்பெரும் விழாவில், மாதவியும் கோவலனும் கலந்துகொண்டு சிறப்புச் செய்தனர். திருநாள் முடிந்த மறுநாள் அமாவாசை தினமாதலால், மாநகர் மக்களெல்லாம் கடலுக்குச் சென்று களித்து நீராடித் திரும்புவது வழக்கம். கோவலனும் மாதவியும் கடற்கரைக்குச் சென்றனர். அங்கே மகிழ்ச்சியுடன் நீராடிப் பொன்னுடை யணிந்து ஒரு புன்னை மர நிழலில் தங்கி யிருந்தனர். வசந்தமாலை என்னும் தோழி மாதவியுடன் யாழை எடுத்துச் சென்றிருந்தாள். காதலர் இருவரும் தனியான

கோவலனும் மாதவியும் கடற்கரை அடைதல்

இடத்தில் அமர்ந்ததும், மாதவி தன் தோழியிடமிருந்த யாழை வாங்கி, அதில்உள்ள நரம்புகளைச் செவ்வனம் முடுக்கி, அதைக் கோவலன் கையிற் கொடுத்தாள். கோவலன் யாழ் வாசிப்பதில் வல்லுநனாகையால், அவ் யாழில் அபூர்வமான நாதத்தை எழுப்பி, இன்பச் சுவை ததும்பிய பல வரிப்பாடல்களைப் பாடினான். கோவலன் பாடிய

பாட்டுக்களில் அவன் வேறொரு மங்கையிடம் விருப்பம் கொண்டுள்ளதாக அர்த்தம் தொனித்தது என மாதவி மயங்கி நின்றாள். இருப்பினும் அதை வெளிக் காட்டாமல் கோவலனிடமிருந்து யாழை வாங்கி, தன் முறையாக யாழ் மீட்ட ஆரம்பித்தாள்.

"மருங்குவண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடை அது போர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி!
கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தவெல்லாம் நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி!

—கானல்–25

பொருள் வேறுபாடும் மன வேறுபாடும்

என்று காவிரியாற்றை விளித்துப் பண் இசைத்தாள். இங்ஙனமாக அவள் பாடிய இசைப் பாடல்கள் பல. மாதவி பாடியதில் "அவள் வேறொரு ஆடவன்மீது தன் கருத்தைச் செலுத்துகிறாள்" எனப் பொருள் தொனித்ததாகக் கோவலன் தப்பெண்ணம்கொண்டு, கோபம் பொங்க எழுந்தான்;

"கானல்வரி யான்பாடத் தான்ஒன்றின்மேல் மனம் வைத்து
மாயப்பொய் பலகூட்டு மாயத்தாள் பாடினாள்"

—கானல்–52

எனத் துணிந்துவிட்டான். அந்தக்கணமே மாதவியை விட்டு அவன் பிரிந்தான். தன் ஏவலாளர் புடைசூழ, தனி வழியே சென்று மறைந்தான்.

மாதவியும் தன்னந்தனியளாய், தன் மனை புகுந்து ஆறாத்துயரத்தில் அழுந்தி நின்றாள்.

இருவரும் செய்தது விளையாட்டே; இருந்தும் விளையாட்டே வினையாய் முடிந்தது! ஊழ் வினை வந்துருத்தலை யாவரே தடுத்து நிற்கமுடியும்?

காதலர் பிரிவு

> "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
> சூழினுந் தான்முந் துறும்" —திருக்குறள்

என்பது வள்ளுவர் வாய் மொழி யன்றோ!

மாதவி தன் இல்லத்தை யடைந்ததும், தனிமையை நன்குணர்ந்தாளாயினள். மேல் மாடத்து நிலா முற்றத்தில் வீற்றிருந்து, யாழினைக் கையில் எடுத்து, அதை மீட்டும்போது, ஒரு பண்ணிற்கு மற்றொரு பண் அதில் வரக் கண்டு, தன் மனக் கலக்கத்தை உள்ளங்கை நெல்லியென அறிந்தாள். பசந்த மேனியளாகி, வசந்தமாலை என்னும் தன் தோழியைக் கூப்பிட்டு, அவளிடத்தில் தாழை மடலில் தான் படுந்துயரத்தை எழுதி, தூமலர் மாலையில், துணி பொருளெல்லாம் கோவலற்கு எடுத்துச் சொல்ல வேண்டினாள். அம் மடலைக் காதலனாகிய கோவலனிடம் கொடுத்து, அவனை விரைவில் அழைத்துவர ஆணையிட்டு அனுப்பினாள்.

மடலும் மறுப்பும்

வசந்தமாலையும், கோவலனைக் கண்டு கடிதம் சேர்த்தாள்; மாதவி யுரைத்தவாறே அவனிடம் அவள் படும் துயரைக் கல்லும் கரையும் வண்ணம் சொன்னாள். அதற்குக் கோவலன்,

> "ஆடல் மகளே ஆதலின் ஆயிழை
> பாடு பெற்றன, அப் பைந்தொடி தனக்கென"
> —வேனிற்—109–110

என்று கூறி அவள் திருமுகத்தை மறுத்தான்.

வசந்தமாலையைத் தான் வந்த வழியே போகுமாறு சொல்லிவிட்டான். அவளும் கோவலன் கூறிய வற்றை மாதவியிடம் சொல்ல, மாதவி, "கோவலன் நாளைக் காலையாவது கட்டாயம் வருவான்" என்று தன்னைத்தான் தேற்றி, பூமலர்ப் படுக்கையில் நித்திரைகொள்ளாது, "செல்லா இரவையும், சிறுகா இருளையும்" சபித்துக்கொண்டே, காலைக் கதிரவனை எதிர்நோக்கி,

"அரவம் கரந்ததோ? அச்சுமரம் இற்றுப்
புரவி கயிறுருவிப் போச்சோ?—இரவிதான்
செத்தானோ? வேறுவழிச் சென்றானோ? தோழி யெனக்கு
எத்தால் விடியும் இரா"

என்று கண் மூடாது பொழுதைக் கழித்தாள்.

7. கண்ணகி கனவும் கோவலன் வரவும்

காவிரிப்பூம் பட்டினத்தில் ஒரு வேதியனுக்கு இரு மனைவியர் இருந்தனர். மூத்தவள் பெயர் மாலதி; மகப்பேறு அற்றவள். அதன் காரணமாக அவ்வேதியன் இளையவள் ஒருத்தியை மணக்க, அவளுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. ஏதோ ஒரு நிமித்தத்தைக் கருதி, இளையவள் தன் குழந்தையைத் தனியேவிட்டுச் சிறிது வெளியே சென்று வரலானாள். அப்பொழுது அக்குழந்தை கடும் பசியால் கதறிக் கண்ணீர் சொரிந்து நின்றது. அவ்வழுகையைக் கண்டு சகிக்காமல், மாலதி என் பாள் அக்குழந்தையை எடுத்து அணைத்து அதன் பசி போக்கப் பாலூட்டினாள். ஐயகோ! பசியாறும் என்று அவள் பாலூட்ட, பால்விக்கிப் பாலகன்

உயிர் துறந்தான். என் செய்வாள் அப்பேதை! அழுதாள்; அரற்றினாள்; விம்மினாள்; வெந்துயருற்றாள். "இப்பொழுது என் மீதல்லவோ இல்லாளும் கணவனும் சேர்ந்து, பழியைச் சுமத்துவார்கள்! நானே இக்குழந்தையைக் கொன்றதாகவல்லவோ சாதிப்பார்கள்! இதற்கென்ன செய்வது?" என்று சிறிதுநேரம் யாதொன்றும் தோன்றாது ஏங்கி நின்றாள். பின்பு தன்னைத்தானே ஒருவகையில் தேற்றிக்கொண்டு, மாண்ட அம்மகவைத் தோளில் தூக்கி, வெள்யானைக் கோட்டம், உச்சிக் கிழான் கோட்டம், வேற் கோட்டம், வச்சிரக் கோட்டம், நிலாக் கோட்டம் முதலிய பல கோட்டங்களில் கோயில் கொண்டுள்ள தெய்வங்களைத் தொழுதாள்.

மாலதியும் மகவும்

"தேவிர்காள், எம்முறுநோய் தீர்மென்று"—கஞ—14

பலவாறு குறையிரந்து வேண்டி நின்றாள்.

அவ்வேண்டுகோட் கிணங்கி, எத்தெய்வமும் அவ்வணங்கின் துன்பத்தைத் தீராமையின், அவ் விடங்களினின்று நீங்கி, தொண்ணூற்றாறு வகைச் சாத்திரங்களையும் செவ்வனம் பயின்று பாசண்ட சாத்தன் உறையும் இடத்தை யடைந்து வரங் கிடந்தாள். அப்பொழுது சுடுகாட்டுக் கோட்டத்தி லிருந்த பிணந்தின்னும் இடாகினிப் பேய் ஒன்று அவள் எதிரில் தோன்றி,

"செய்தவம் இல்லோர்க்குத் தேவர் வரங்கொடார்
பொய்யுரையே யன்று பொருளுரையே" —கஞ—17–18

"ஆகையால் நீ வரங்கிடந்தும் ஒருபயனும் காண மாட்டாய்" என்று கூறி, "கையிற் படு பிணந்தா" என்று அப்பிணத்தை வெடுக்கெனப் பிடுங்கி விழுங்கிவிட்டது. இடியோசை கேட்ட மயில்

போல் நடுங்கி, பெருமூச்சுவிட்டு அம்மாது புலம்பி நின்ருள்.

மாலதியின் கடுந்துயரத்தைக் கண்ட சாத்தன் என்னும் அவ்விடத்துக்குரிய தெய்வம், மனமிரங்கி, அருள்புரிய ஆவல்கொண்டு, அவ்வணங்கின்முன் தோன்றி "அஞ்சேல்; நீ ஏங்கி அழேல்; நின்துயர் இத்துடன் ஒழிவதாக; நீ மீளுங்காலை இடை வழியில் மாண்ட மகவை மீண்டும் உயிருடன் காண்பாய்; பெற்றுச் செல்க!" என்றுரைத்துத் தானே ஒரு மாயக்குழந்தையாக உருவம்மாறி வழியில் கிடந்தது. மாலதியும் அக்குழந்தையை ஆசையோடு எடுத்துத் தாய் கைக்கொடுத்தாள்.

சாத்தனும் அவர்களிடம் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தான். நல்ல கல்வியும் கேள்வியும் உடையவனுகி விளங்கினுன். அவன் மணப்பருவம் அடையுந் தருணம், தன் தாய் தந்தையர்களை இழந்தான். அவர்களுக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களைச் செய்து முடித்து, தேவந்தி என்னும் வேதியர் குலப் பெண்ணொருத்தியை மணஞ் செய்துகொண்டு இனிது வாழ்ந்து வந்தான்.

சாத்தனும் தேவந்தியும்

ஒருநாள் தேவந்தியைப் பிரிய மனங்கொண்டு தன் கோயில் புக எண்ணிய சாத்தன், அவளை அணுகி, "நீ என் கோட்டத்து வா" எனக் கூறி மறைந்தான். தேவந்தியும் பல புண்ணியத் துறைகளாடிச் சாத்தனைத் தினமும் வழிபட்டு வருவாளாயினள்.

இளமை முதற்கொண்டு தேவந்தியானவள் கண்ணகியுடன் தோழமை பூண்டு ஒழுகினமையின்,

காதலன் பிரிவாற்ருமையால் கதறிக் கண்ணீர் விடும் கண்ணகியின் துயரை அறவே நீக்கி, அவள் கணவனுடன் கூடி வாழக் கருணை செய்யும்படி சாத்தனை வேண்டி நின்ருள். வேண்டிய பிறகு, தேவந்தி கண்ணகியின் இருப்பிடம் சென்று, அவளைக் கண்டு "நீ இனி உன் அருமை மிக்க கணவனோடு அல்லும் பகலும் வாழ்வாய்" எனக் கண்ணகியை வாழ்த்தி நின்ருள். இவ்வாறு வாழ்த்தி நின்ற வேதிய மங்கையை அன்புடன் நோக்கி, "அன்னய்! நினது அருமை வாக்கினுல் என் ஆருயிர்க் கணவனை நிச்சயம் பெறுவேன். ஆயினும் உள்ளத்துள்ளே ஓர் ஐயப்பாடு ஏற்படுகின்றது; அதை நினைக்க என் உள்ளமே நடுங்குகின்றது; சற்றுக் கேட்பாயாக" என்று தான் கண்ட கனவைப் பின்வருமாறு அவளுக்கு உரைத்தாள்:

தேவந்தியும் கண்ணகியும்

"நானும் என் அருமைக் கணவனும் இந் நகரைவிட்டு இமைப்பொழுதில் நீங்கி, மற்ருேர் புதிய நகரத்துக்குச் சென்ருேம். அந்நகர மாந்தர் எம்மீது ஒரு பெரும்பழியைப் படாத வார்த்தைகளால் சுமத்திஞர்கள். அப்பழி என் கணவனுக்கு ஒரு தீங்கை உண்டாக்கியது. அத்தீங்கை யான் கேட்டுக்கொண்டு காவலன் முன்சென்று என் வழக்கைக் கூறி நீதி வழங்குமாறு முறையிட்டேன். என் சொற்களைக் கேட்டுக் காவலன் தானும் தன் இன்னுயிரை இம்மண்ணுலகினின்று நீத்தான். செங்கோல் சிதைந்து விழுந்து, செழுமை வாய்ந்த நகரம் தீக்கிரையாயிற்று. 'தீக்கனவைப்

கண்ணகி கனத்திறம் உரைத்தல்

பிறரிடம் கூறுவது நலமல்ல' எனப் பெரியோர் புகன்றமையால், இதை விவரித்துக்கூற இயலாத நிலைமையிலுள்ளேன். இது எதைக் குறிக்குமோ அறியேன்" என்று நாக்குழறத் தீக்கனவைத் தேவந்தியிடம் சொல்லி ஆறுதல் பெற நினைத்தாள்.

தேவந்தியும் கண்ணகியின் துயரங் கனிந்த மொழிகளைக் கேட்டுப் பலவாறு அவளைத் தேற்றி, "பொன் வளையல்களை அணிந்த மெல்லியலாளே!"

"கைத் தாயுமல்லை கணவற்கொரு நோன்பு
பொய்த்தாய் பழம் பிறப்பில்" —கனு—55-56

என்று ஏதுக்காட்டி இன்னுரை பகர்ந்தாள். "முற் பிறப்பில் செய்யத் தவறிய நோன்பை ஈடு செய்ய, காவிரி நதி கடலொடு கலக்கும் இடத்தில் உள்ள சோமகுண்டம், சூரியகுண்டம் என்னும் இரு துறைகளில் மூழ்கி, அவற்றினருகேயுள்ள காமன் கோட்டத்தை வலம் வந்து துதிப்பாயாக. அப்படிச் செய்திடில்,

"....................கணவரொடு
தாமின்புறுவர் உலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியிலும் போய்ப் பிறப்பர்" —கனு—60-62

என்று சான்றோர் கூறுகின்றனர். ஆகையால் இம்மைப் பயனும், மறுமைப் பயனும் அடைந்து கணவனோடு நாம் என்றும் களித்து நிற்கலாம். நானும் உன்னுடன் துணைக்கு வருகின்றேன். இருவரும் தொழுது இன்பம் பெறுவோம்" என்று மொழிந் தாள். இவ்வுறுதி மொழிகளைக் கேட்டுக் கண்ணகி, "குலமகட்குத் தெய்வம் கொழுநனே யாதலால், எம்குலமரபிற்குக் கைப்பிடித்த கணவனையன்றிப் பிறதெய்வத்தை வழிபடுதல் இழுக்காகும்" என்று

தேவந்தியின் ஆறுதல் மொழி

நயந்து மொழிந்து, "காமன்கோட்டத்தை வழிபடல் உரியதன்று" என்று பதிலுரை பகர்ந்தாள்.

இங்ஙனம் இவ்விருவரும் பேசிக்கொண்டிருந்த பொழுது, பணிப்பெண் ஒருத்தி விரைந்து வந்து "இதோ, கோவலன் வந்துவிட்டார் அம்மா" என்று மொழிய, கோவலனும் கண்ணகி உறை விடத்துப் புக்கான். கண்ணகி அவனை இன் முகத்துடன் எதிர்கொண்டு வரவேற்றாள். கோவலன் தன் மனைவியின் வாடிய மேனியைக் கண்டு மனம் மிக வருந்தினான்.

கோவலன் வருகை

8. வாணிபஞ் செய்யக் கோவலன் வழிப்படல்

கண்ணகியின் வாடிய நிலைகண்டு வருந்திய கோவலன், கண்ணகியை விளித்து "பைந்தொடியே! பொய்யை மெய்போல் காட்டி நடக்கும் கணிகையர் வகுப்பினில் தோன்றிய மாதவியிடம் என் மதியை இழந்தேன். என் ஒழுக்கநிலை தவறியதால், என் முன்னோர் தேடிவைத்த பொருளையும் இழந்தேன். இன்று யாவரும் நகைக்கும் வண்ணம் கொடிய வறுமைநிலை யடைந்தேன். இந் நிலைமை எனக்கு மிக்க வெட்கத்தை அளிக்கிறது" என்று கோவலன் தன் செய்கைக்கு வருந்திக் கண்ணகியின் அன்பை மீண்டும் பெற விரும்பினான்.

கண்ணகியின் தோற்றமும் கோவலனின் வருத்தமும்

அவ்வாறு கூறிய கோவலன் சொற்களைக் கேட்ட கண்ணகி, நகைமுகங்காட்டி, இன்சொல் கூறி, "மாதவிக்குக் கொடுக்கப் பொருள் இல்லாமை

யால் இவ்வாறு கணவர் வருந்துகின்றார்" என்று நினைத்து, "அன்பரே! என்னிடம் சிலம்புகள் இரண்டு உள; அவைகளை யாயினும் எடுத்துச் சென்று, உம் கவலையை விட்டொழிக" எனப் பணிவுடன் கூறி நின்றாள்.

கோவலன் வாணிபம் செய்யப் புறப்படல்

இக்கருணை ததும்பும் சொற்களைக் கேட்ட கோவலன், "என் ஆருயிரே! உன் நல்லெண்ணத்தை யானறிவேன். உன்னிடமிருக்கும் இச் சிலம்பினைக் கொண்டு, மதுரை மாநகர் அடைந்து, வாணிபஞ் செய்து பெரும் பொருள் ஈட்டி வரத் துணிந்துள்ளேன். ஆதலால் நீயும் என்னுடன் வருவாயாக" என்று கண்ணகியிடம் கூறினன். ஊழ்வினை வந்து உந்த "கோதாய்! எழுக!" என்றதும், கண்ணகியும் தன் கணவன் சொற்களுக்கு உடன்பட்டு, அவனைப் பின்தொடர்ந்தாள்.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" —திருக்குறள்

9. நாட்டு வழியும் நங்கை துயரமும்

காதலர் இருவரும் காரிருள் நிறைந்த விடியற் காலத்திலேயே, யாவரும் துயிலெழு முன்னர் எழுந்து, வாழும் மனையிலிருந்து அகன்று, வழி நடந்து சென்றார்கள்.

"வான்கண் விழியா வைகறை யாமத்து
மீன்திகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்
காரிருள் நின்ற கடைநாட் கங்குல்
ஊழ்வினை கடைஇ உள்ளந் துரப்ப" —நாடுகாண்—1-4

வழிக்கொண்டனர் என்கிருர் இளங்கோவடிகள் தான் பலநாள் அன்புடன் வளர்த்து வந்த ஆட்டுக் கிடாயும், கவரிமானும், தூய சிறகினையுடைய அன்னமும், தன் வீட்டிலேயே கேட்பாரற்று விடப் பட்டன. சிறிது தூரம் சென்றதும், வழியிலிருந்த "அணி கிளர் அரவின் அறிதுயிலமர்ந்த மணிவண்ணன் கோட்டத்தை" வலஞ்செய்து சென்றனர். பின் மெய்வகை உணர்ந்த சான்ருேர் குழூமிய ஐவகையாய்ப் பரிணமித்த அருகதானத்தில் நின்ற அருகபிரானைத் தொழுது துதித்தனர். அதன் பின்னர் உலக நோன்பினர் ஒருங்கு சேர்ந்து இட்ட, ஒளிமிக்க சிலாதலத்தைத் தொழுது வலங்கொண்டு போனூர் கள். இவ்வாறு பேராறு போலக் கிடந்த பல தெருக் களைக் கடந்துபோய் நகர எல்லையைக் கடந்து, நறு மணங் கமழும் நன்மலர்ச் சோலையை அடைந்தனர்.

புறப்பாடு

அச்சோலையிலே மந்தமாருதம் சில்லென வீசியது. பன்மலரின் நன்மணம் மனத்தைப் பரவசப்படுத்தியது. அழகிய அச்சோலையையும் கடந்து, காவிரியாற்றின் வடகரை சேர்ந்தனர். அக்காவிரியாற்ருல் வளம்பெற்று வனம்போல் கிடந்த மலர்ப்பொழிலிலே ஒருகாத தூரம் மேற்றிசை கடந்து, கவுந்தியடிகள் வீற்றிருக்கும் பள்ளியையுடைய பூஞ்சோலையின் ஒரு மருங்கில் தங்கினர்.

நெடுந்தூரம் வழி நடந்த இளைப்பினுல், கண்ணகியின் மேனி துவண்டது. அவளது மலரினும் மெல்லிய பாதங்கள் நொந்தன. இருப்பினும், தன் கணவனை நோக்கிக் கண்ணகி, "மதுரை மூதூர் இன்னும் எவ்வளவு தூரம்

உள்ளது?" என வினவினாள். அதற்குக் கோவலன் "நாம் இதுகாறும் ஒருகாத தூரம் நடந்து வந்தோம். கடப்பதற்கு இன்னும் ஆறைங்காதங் கடுக உள; இனி அண்ணிதே" என்று கூறி, அவள் வருத்தத்தைப் போக்கிப் பற்பல காட்சிகளைக் காட்டி அவளுக்கு மகிழ் வூட்டினான். முப்பது காதம் என்று கூறின், ஒரு வேளை கண்ணகி மிக வருந்துவாளோ என்ற எண்ணத்தாலே, மறைமுகமாக "ஆறைங்காதம்" என்று கூறுவானானான்.

ஒருகாத தூரம் நடத்தல்

"மதுரை மூதூர் யாதென வினவ
ஆறைங் காதம் நம் அகல்நாட் டும்பர்
நாறைங் கூந்தல் நணித்தென நக்கு"

—நாடுகாண்—41-43

எனக் கோவலன் விடை பகர்ந்தானும். சற்று நேரம் இளைப்பாறிய பின், இருவரும் கவுந்திப் பள்ளியில் தவக்கோலங் கொண்டு, ஆருகத சமயத் தவமுதியவளாக விளங்கிய கவுந்தியடிகளைக் கண்டு அவர் பாதங்களைத் தொழுதெழுந்தனர்.

தம்மைத் தொழுதெழும் மக்கள் இருவரை நோக்கிக் கவுந்தியடிகள் "உயர்தகு தவமும், அருமையான உருவமும், பேரொழுக்கமும், பெருமான் திருமொழி பிறழா நோன்பும் படைத்தவர்களாகக் காணப்படும் உங்களுக்குற்ற குறையாது? வீட்டை விட்டு, நாட்டைத் துறந்து இங்ஙனம் வழி நடப்பதற்குக் காரணம் என்ன?" என்று அன்பொழுக வினவினர். அதற்குக் கோவலன், "அன்பின் பிழம்பான அடிகளாரே! பொருளீட்டும் பொருட்டு, மதுரைமா நகரம் வரை செல்கின்றோம்" என்று மறுமொழி பகர்ந்தான். அதற்குக் கவுந்தியடிகள்

"மதுரை நகர்க்கு இன்னும் நாட்டு வழியாகவும், காட்டு வழியாகவும் நெடுந்தூரம் செல்ல வேண்டும்; உன் பக்கத்திலுள்ள இவள் மென்மையான உடலைப் படைத்திருத்தலால், வழிச்செல்கை துன்பத்தைத் தருமன்றோ! கல்லும் முள்ளும் செறிந்த பாதையைக் கடந்து செல்வது இச்செல்வியால் அரிது, அரிது. மற்றும் கேட்பீராக. நானும் செந்தமிழ் ஆன்றோர் அறவுரை கேட்க ஆவல் கொண்டு, மதுரை போக எண்ணியுள்ளேன். உங்களுடன் நானும் மதுரை வருகிறேன். மூவரும் ஒருங்கே செல்வோமாக" என்று கூறினார் கவுந்தியடிகள்.

கவுந்தியடிகள்

அடிகளைக் கோவலன் கைதொழுதேத்தி "நீங்களே எம்முடன் துணைக்கு வருவீராயின், இவளைப்பற்றிய பயம் எனக்கு அறவே நீங்கும்" என்று கோவலன் மனம் மகிழ மொழியலுற்றான். கவுந்தியடிகளும் அவர்களுக்கு மதுரைமா நகர்க்குச் செல்லும் பாதையிலுள்ள வருத்தங்களை எடுத்து இயம்பினார்.

"கோவலனே! கேட்பாயாக. மதுரைக்குச் செல்லும் இடைவழியில் துன்பந்தருவனவாகிய இடங்கள் பலப்பல உண்டு. வெயிலின் ஒளியைக் கண்ணால் காணவே கூசும். இக்கண்ணகி நல்லாளொடு, இம்மருதவழியே செல்வோமாயின், சண்பகம் முதலிய நறுமணங்கமழும் பூக்கள் வீழ்ந்து மூடிய வள்ளிக்கிழங்கு தோண்டப்பெற்ற குழிகள் சமநிலம்போலத்தோன்றும். அக்குழிகளைக் கடந்துசெல்தல் அரிதே. அப்படிச் சென்றாலும், தழைத்து வளர்ந்துள்ள பழ மரங்கள், தங்கள் கிளைகளால் நம் தோள்களை முட்டுதல் செய்யும். நீர் நாய் கௌவிய நெடும்புறவாளை மீன்கள் வயல்களில்

துள்ளிப் பாயும். கரும்பிலுள்ள பெருந் தேன் சிதைந்து, அண்மையில் உள்ள பொய்கையில் பாய்ந்து, நீரைக் கலக்கி நிற்கும். தேனடைகளில் தேனீக்கள் ரீங்காரம்செய்து, இடர்ப்பாட்டினை உண்டாக்கும். இத்தகைய தடைகளையெல்லாம் எதிர்த்து, ஓருயிர்க்கும் துன்பம் உண்டாக்காமல், மனந்தளராது செல்லல்வேண்டும்" என்று கவுந்தியடிகள் எடுத்துரைத்தார். பிறகு பீலிக் கற்றையைக் கையிலேந்தி,

"மொழிப்பொருட் டெய்வம் வழித்துணை யாகென"
—நாடு. 100

அருகதேவனைத் துதி செய்துகொண்டு புறப்பட்டார். கோவலனும் கண்ணகியும் அவருடன் சென்றார்கள்.

செல்லும் வழியில் காவிரியாற்றின் தெள்ளிய நீர் வெள்ளமாகப் பெருகிக் கடல்நீரோடு கலந்து பேரொலி செய்தது. செந்நெல்லும், கரும்பும் சூழ்ந்த வயல்களும், தாமரை மலர் அடர்ந்து மலர்ந்த தடாகங்களும் இனிய காட்சிகளைப் பயந்தன. "கம்புட் கோழியும், கனைகுரல் நாரையும், செங்காலன்னமும், பைங்காற் கொக்கும், கானக் கோழியும், நீர்நிறக் காக்கையும், உள்ளும் ஊரலும், புள்ளும் புதாவும்" பேரொலி செய்தன. களை பறிப்போர் கள்ளுண்டு களித்து மது மயக்கத்தால் மகிழ்ந்து பாடும் ஒலி ஒருபுறம் ஒலித்தது. உழவினை மேற்கொண்டு வயல்களை உழும் உழவர்களின் ஓசை ஒருபுறம் ஒலித்தது. ஏர்க்களங்களிலே முகவைப் பாட்டும் குழலோசையும் முழங்கின. இவ்வாறு பற்பல இசைபோன்று இயம்பிய இவ்வோசைகளை

மூவர் புறப்பாடு

யெல்லாம் கேட்டு அனுபவித்துக்கொண்டே மூவரும் வழிநடந்தனர்.

வழியிலே அமைந்து விளங்கிய அந்தணர் இருக்கையும், வேளாளர் ஊர்களும் பலவற்றைக் கொண்ட நாட்டுப் பகுதிகளைக் கண்டு களித்துச் சென்றனர். நாடோறும் காதவழி நடந்து, அங்கங்கே தங்கி இளைப்பாறிச் சிறிது சிறிதாக வழிநடந்தனர். இவ்வாறு செல்லும் நாளில் ஒரு நாள் திருவரங்கத்தை அடுத்த ஒரு மலர்ப் பூஞ் சோலையை அணுகினர். அங்கே தருமஞ் சாற்றும் சாரணர் ஒருவர் தோன்றினர். அவரைக் கண்ணுற்ற

சாரணர் ஒருவர் எதிர்ப்படல்

கவுந்தியடிகள் அவர் பாதத்தைத் தொட்டுக் கீழே விழுந்து வணங்கி நின்றார். அப்பொழுது அச்சாரணர் கவுந்தியடிகளை நோக்கி "நல்வினையாயினும், தீவினையாயினும், அந்தந்த வினைக்கேற்ற பயனை அளிக்கத் தவறாது; உருத்துவந்து ஊட்டும் வினையானது ஒழி என்றால் ஒழிந்து போகாத நிலைமையுடையது. அது தன் செயலை ஆற்றியே செல்லும்.

"செறிவன், சினேந்திரன், சித்தன், பகவன்
தருமமுதல்வன் தலைவன் தருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்
* * * *
சங்கரன் ஈசன் சயம்பு சதுமுகன்
அங்கம் பயந்தோன் அருகன்" —நாடு. 177—

ஆகிய அந்த வேத முதல்வன் ஓதிய மெய்ப் பொருள்களை நன்குணர்ந்து, அற நூலில் கூறிய முறைப்படி அவனை வணங்கி, தரும நெறியில் நடப்பவரே பிறவிப் பெருங்கடல் கடப்பர்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்" —திருக்குறள்

என்ற வாய்மொழி வள்ளுவர் குறளேயும் நாம் மனத்தில் பதியவைக்கவேண்டும்" என்று அச் சாரணர் மொழிந்தார்.

இத்தூய நன்மொழிகளேக் கேட்ட கவுந்தி யடிகள், அவரைப் பணிந்தேத்தி, "ஆசையை ஒழித்து ஞானத்தை ஈந்த எந்தை அருகபிரான் புகழ்ச் சொற்களேத்தவிர வேறென்றையும் என் செவிகள் கேட்கா. அவனது ஆயிரத்தெட்டு நாமத்தை அல்லது வேறு பெயர்களே என் நாவானது நவிலாது; பஞ்சேந்திரியங்களே வென்ற அப்பேரருட் கழலேத் தவிர வேறெவற்றையும் என் கண்கள் காணு.

"மலர்மிசை நடந்தோன் மலரடி அல்லது என்
தலைமிசை உச்சி தானணிப் பொருஅது
இறுதியில் இன்பத்து இறைமொழிக் கல்லது
மறுதர வோதி என்மனம் புடைபெயராது"
—நாடு. 204–207

என்று பலவாறு அருகதேவனேத் துதித்து நின்ருர். இவ்வாறு இயம்பிய இசைமொழிகளேக் கேட்ட அச்சாரணர்,

"மலர்மிசை ஏகினன் மாண்அடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்" —திருக்குறள்

ஆதலால் அத்தகைய மாண் அடிகளேச் சேர, உன்னுடைய பவந்தரு பாசங் கெடுக" என வாழ்த்தி ஆகாயவழியே சென்றனர். பின்னர் காதலர் இருவரும் மாதவத்தாட்டியும் காவிரியின் தென் கரையை அடைந்தனர். அங்கிருந்த ஒரு சோலேயில் இளேப்பாறினர்.

அச்சோலை வழியாக வந்துகொண்டிருந்த ஒரு பரத்தையும், தூர்த்தனும் கவுந்தியடிகளை அணுகி, "உம்முடன் இருக்கும் காமனும் தேவியும்போலும் உள்ள இருவரும்யாவர்?" என வினவினர். அதற்குக் கவுந்தியடிகள் அவர்களை நோக்கி "இவர்கள் இரதியும் மன்மதனும் அல்லர்; இவர்கள் என் மக்கள்; வழிநடை வருத்தத்தால் மிக வருந்தியுள்ளனர்; நீங்கள் அவர்கள் பக்கலில் செல்லாது விலகிச் செல்லுங்கள்" என்று பணித்தார். அக்கூற்றினைக் கேட்ட அக்காமுகர் இருவரும், "ஒரு வயிற்றில் பிறந்தோர் கணவனும் மனைவியுமாக வாழ்தல் எங்கேனும் உண்டோ பெரியீரே?" என்று சற்று இகழ்வுடன் கொடுமொழி பகர்ந்தனர். அக் கொடு மொழிகளைக் கேட்ட கண்ணகி நடுக்கமுற்றாள். கவுந்தியடிகள் அக்காமுகர்களை நரியாகும்படி சபித்தனர்.

சோலையில் கொடுத்த சாபம்

சாபம் கொடுத்த உடனே, அவர்கள் நரிகளாக மாறி நெடுங்குரலாற் கூக்குரலிட்டனர். இதைக் கேட்டு, நிகழ்ந்தது அறிந்து கண்ணகியும் கோவலனும் நடுக்கமுற்று அவரைப் பணிந்து,

> "நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்
> அறியாமை என்று அறியல் வேண்டும்;
> செய்தவத்தீர்! நும் திருமுன் பிழைத்தோர்க்கு
> உய்திக் காலம் உரையீரோ?" —நாடு. 237–240

"பெரும்பிழையானாலும், அறியாமையால் நேர்ந்த இதற்கு ஒரு விமோசனம் தாங்களே அருள வேண்டும்" என வரம் வேண்டி நின்றனர். "அப்படியே ஓராண்டில் இந்நரியுருவிழந்து நரர்

உருவம் பெறுவீர்கள்" எனச் சாப விமோசனம் அருளினர். இந்நிகழ்ச்சிகளுக்குப் பின்பு, தவப்பெருஞ் சிறப்பின் கவுந்தியடிகளும், கோவலனும், கண்ணகியும் உறையூர்ப் பதியை அடைந்தனர்.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" —திருக்குறள்

(புகார்க் காண்டம் முற்றும்)

10. காட்டுப் பாதையும் கடுவழி கடத்தலும்

உறையூர் வெளிப்புறத்தை அடைந்த மூவரும், பூமலி அசோகின் புனைநிழ லமர்ந்த புண்ணியனைத் தொழுது அருக சாரணர் உறைந்துவந்த கந்தன் பள்ளியில் அன்று இரவைக் கழித்தனர். மறுநாள் வைகறை விடியுமுன்னரே எழுந்து, உறையூரை விட்டகன்று, தென் திசையை நோக்கிச் சென்றனர்.

அப்பொழுது இடைவழியே,

"வாழ்க எங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதோ றூழி உலகங் காக்க" —காடு–15–16

என்றும்,

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி!"
—காடு–19–22

என்றும் மாடமா மதுரையில் அரசு புரிந்து வந்த அரசனை வாழ்த்தி ஒரு மறையோன் எதிர்ப்பட்டான். அவனைக் கோவலன் "உம்முடைய ஊர் யாது? இங்கு நீர் வந்ததன் காரணமென்ன?" என்று கேட்டான். அதற்கு அம்மாமறையோன், "நான் வரும்பொருள் உரைப்பவன். ஆயிரம் தலைகளோடு

மறையோன் மொழிந்த மதுரை வழி

படம் விரித்தாடும் பாம்பணைமேல் பள்ளிகொண்டுள்ள திருவரங்க நாதனைத் தரிசிக்கவும், வீங்கு நீரருவி வேங்கடமென்னும் மலையின்மேலே, கையில் பகை

வர்களையெல்லாம் வருத்தும் சக்கரம் விளங்கவும், பாஞ்சசனியம் என்னும் பேரொலி செய்கின்ற சங்கும்கொண்டு, மணியாரத்தைத் தன் திருமார்பில் தரித்து, பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய" செங்கண் நெடியோனுன திருவேங்கட வன் நின்றவண்ணத்தைக் காணவும், இவ்வழியினைக் கடந்து செல்கின்றேன். என் ஊர்ப் பெயர் மாங்காடு என்னும் பழம் பதியாகும். தென்னவன் நாட்டுச் சிறப்பைத் தெற்றென உணர்ந்தேன்; அவன் ஆட்சியைக் கண்குளிரக் காணப்பெற்றேன். ஆதலால் கண்ணும் மனமும் குளிர, அரசனை வாழ்த்திப் புறப்பட்டேன். இதுதான் நான் இங்கு வருகைக்குக் காரணமாகும்" என்று அம்மாங்காட்டு மாமறையாளன் மொழியலுற்றான்.

அச்சொற்களைக் கேட்டு ஆனந்த பரவசமாகிக் கோவலன் அம்மறையவனை நோக்கி, மதுரையம் பதிக்குச் செல்லும் செம்மையான பாதையைக் கூறுமாறு கேட்டான். அதற்கு அம்மறையோன் பின்வருமாறு பதிலளித்தான்:

"காவல் தொழில் புரியும் மாநில வேந்தன் கொடிய அமைச்சரோடு சேர்ந்து நடத்தும் அரசியலால், குடிகள் மனம் வெந்து நொந்து, பூமியும் எதுவும் விளைவியாது கரம்பு நிலமாகப் போதல்போல, கதிரோன் தன் வெங்கதிரைப்பரப்பி, வேனிலோடு விண்ணில் காய்வதால், முல்லையும் குறிஞ்சியும் முறை திரிந்து, இயற்கைத் தன்மையை ஒருங்கேயிழந்து, காண்போர் நடுங்கு

மூன்று வழிகள்

மாறு துன்பத்தைக் கொடுக்கும் பாலை நிலத்தை யொத்த இக்கொடிய வழியைக்

கடந்து செல்லுதல் இக்காரிகைக்குத் துன்பம் தரக்கூடியதே. இவ்வரிய பாதையைக் கடந்து சென்ருல், கொடும்பாளூரில் உள்ள நெடுங்குள ஏரி தென்படும். அந்நெடுங்குளப் பெருங்கரையைத் தாண்டிச் சென்ருல், அப்பால் "பிறைமுடிக் கண்ணிப் பெரியோன்" ஏந்திய முத்தலைச் சூலாயுதத்தின் வடிவம்போல் பிரியும் மூன்று பாதைகள் உண்டு. அம்மூன்றினுள் வலப்புறத்தே உள்ள பாதை வழியாகச் சென்ருல், ஓமை மரமும், மரா மரமும், உழிஞ்சில், மூங்கில் முதலிய பலவகை மரங்களும் கரிந்து அழகு குன்றிக் காணப்படும். நீர்நிலையைத் தேடும்பொருட்டு, மானினங்கள் அங்கும் இங்கும் அலைந்து நிற்கும். இப்படிப்பட்ட வளங்குறைந்த இவ்விடங்களைக் கடந்து சிறிது தூரம் சென்ருல்,

"ஐவன வெண்ணெலும், அறைகட் கரும்பும்
கொய்பூந் தினையும் கொழும்புன வரகும்
காயமும் மஞ்சளும் ஆய்கொடிக் கவலையும்
வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும்
மாவும் பலாவும் சூழடுத் தோங்கிய" —காடு—80–84

பாண்டியனுடைய சிறுமலை திகழ்ந்து நிற்கும். அம் மலையை வலத்திட்டு இடப்பக்கத்து வழியாலே சென்ருல் மதுரைமாநகரை அடைவீர்கள்.

அவ்வழியில் செல்லாது இடப்பக்கத்தே செல்லும் பாதை வழியே சென்ருல், பண்ணெடு இசை பாடும் வண்டினங்கள் தடாகங்களிலுள்ள தாமரை மலரைச் சுற்றிவரும் ஓசையையும், தாழ்ந்த நீர் நிறைந்த வயல்களும், குளிர்ந்த காற்றை வீசும் பூஞ்சோலைகளும் கொண்ட காடு காணப்படும். அக்காட்டைக் கடந்து சென்ருல், திருமால் குன்ற

மென்னும் அழகர் மலை அணியுற விளங்கக் காண்பீர்கள். அக்குன்றத்திலே மயக்கத்தைக் கொடுக்கும் பிலம் ஒன்றுண்டு. அப்பிலத்தினுள்ளே புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி என மூன்று பொய்கைகள் காணப்படும். அம்மூன்றினுள் முதலாவதாகிய புண்ணிய சரவணத்தில் மூழ்கி எழுந்தால், விண்ணவர் கோமானான இந்திரன் விளக்கிய ஐந்திரம் என்னும் வியாகரணத்தில் பாண்டித்தியம் பெறுவர்; பவகாரணி என்னும் பொய்கையோ உங்கள் பழம்பிறப்பை உணர்த்தும்; இட்டசித்தி எய்துவிராயின் இட்டசித்திகள் அடையப்பெறுவீர். இந்தப் பிலத்தினுள் புக விரும்பினால், "மலைமிசை நின்ற மாலின் மலரடிகளை உள்ளம் கொள்ளுமின்." அப்படி மும்முறை வலம் செய்து வந்தித்தால், ஒரு தேவதை கண்முன் தோன்றி, "இம்மை மறுமை இன்பங்கள் யாவை?" எனக் கேட்கும். அக்கேள்விக்குத் தக்க பதில் அளித்தால், கதவு ஒன்றைத் திறந்து நல்ல வழியைக் காட்டும். அவ்வழியின் கடையிலுள்ள வாயில் ஒன்றில் பூங்கொடிபோன்ற ஒரு பெண் தோன்றி, "ஈறில்லாத இன்பம் யாது?" எனக் கேட்கும். அதற்குச் சரியான பதில் அளிப்பீர்களாயின், முன் கூறிய பொய்கைகள் மூன்றும் உள்ள இடத்துக்கு அழைத்துக்கொண்டு சென்று, அவைகளை உணர்த்திச் செல்லும். உத்தரம்சொல்ல இயலா விடினும், யாதொரு இன்னலும் விளைவிக்காது தம் வழிப்போக விட்டுவிடும். பின்பு திருமால் தாள்களையடைந்து மதுரை அடையலாம்.

மேற்கூறிய இரு வழிகளின் இயல்புகளையும் யான் இயம்பக் கேட்டீர்கள். ஆனால், நடுவழியே

சென்ருல் நலமுடையதாகத் தோன்றும். இனிய சோலைகளும், காடுகளும் சூழப்பட்ட ஊர்களைக் கடந்து சென்ருல், ஒரு தெய்வம் இடைவழியில் குறுக்கிட்டு நிற்கும். அதற்குத் துன்புறுத்தும் தன்மை கிடையாது. ஆனுல் மாயவினை செய்து மயக்குந் தன்மை வாய்ந்தது. அதைத் தப்பிச் சென்று விட்டால், மதுரைமா நகரத்தை மிக எளிதில் அடைந்துவிடக் கூடும்" என்று மறையோன் மொழியலுற்ருன்.

கவுந்தியடிகளும் இம்மொழிகளைச் செவியேற்று, "மூன்று வழிகளிலும் சிறந்ததான நடுநாயகமான பாதையிலே செல்வோம்" என அவ்வழியிலேயே மூவரும் சென்றனர்.

அன்றிரவை ஓர் ஊரையடைந்து அதில் தங்கிக் கழித்து, மறுநாட்காலையில் நான்மறை நவின்ற அந்தணன் கூறிய இடைப்பாதையிலேயே சென்றனர். வெயிலின் கொடுமையால் நீர் வேட்கை அதிகமாகிக் கவுந்தியடிகளும் கண்ணகியும் ஓர் மர நிழலில் இளைப்பாறினர். அதற்குள் கோவலன் இவர்கள் நீர் வேட்கையைத் தணிக்கும்பொருட்டு நீர் கொண்டுவர அப்பாலுள்ள ஒரு பொய்கைக்குச் சென்ருன். நீர் வேட்கை தணிக்கக் குளத்தினுள் இறங்கினுன். அப்பொழுது, மறையோன் கூறிய மாய வன தேவதை, மாதவியின் தோழியாகிய வசந்தமாலையின் ஒப்பற்ற உருவத்தையடைந்து,

கோவலனும் வன தேவதையும்

கோவலன் கழல்களில் பணிந்து கண்ணீர் சொரிந்து நின்றது. மற்றும் அக்கோவலனை விளித்து "நீர் பிரிந்த அன்று, உம்மிடம் மாதவி கொடுத்த தாழை மடலைக் கொணர்ந்தபோது, தாங்கள் அதனை

ஏற்காது என்னைப் பலவாறு ஏசித் திருப்பி அனுப்பி விட்டீர்கள். நீர் மறுத்துவிட்டதை நான் மாதவி யிடம் உரைத்தேன். அவள் அதற்கு, "திருமுகத்தில் யாதொரு பிழையும் காணவில்லை; நீ ஏதோ தவறுதலாக என் அன்பரிடம் மொழிந்திருக்கிறாய். நீ உரைத்த மொழிகளாலேயே அவர் மனம் மாறி, பெருந்தவறு நேர்ந்துவிட்டது; அதன் காரண மாகத்தான் பிரியாதவர் என்னைவிட்டு அறவே பிரிந்துவிட்டார்" எனக் கடிந்து பேசினாள். அக் கொடிய மொழிகளைச் செவியேற்க அஞ்சி, காணாத இடங்களையெல்லாம் தேடி, இன்று தங்களை இங்குக்கண்டேன்" என்று சொல்லிற்று.

கோவலன் இச்சொற்களைக்கேட்டு, அங்குத் தோன்றியது உண்மையிலேயே வசந்தமாலைதானோ என்று ஐயங்கொண்டு, அந்தணன் உரைத்த அரிய மந்திரமொன்றை உச்சரித்தான். அம்மந்திர மொழிகளைக் கேட்ட அவ் வனதேவதை அச்சங் கொண்டு, கோவலனை வணங்கி, தன் உண்மை நிலையை வெளியிட்டு, மன்னிப்புக் கேட்டு, "யான் செய்த இப்பிழையை உன் மனைவிக்கும் மாதவத் தாட்டியாகிய கவுந்தியடிகளுக்கும் உரையாதொழிக" என இரந்து வேண்டி, அந்த மாய வனதேவதை மறைந்து விட்டது.

பிறகு கோவலன் அப்பொய்கையினின்றும் தாமரை இலையில் தண்ணீர் கொணர்ந்து, அயர்ந்து உட்கார்ந்திருந்த அவ்விருவரின் மயக்கத்தைத் தீர்த்தான். பின்பு மூவரும் மறுபடியும் வழி நடந்து சென்றனர்.

செல்லும் வழியில், செங்கதிரோன் வெங்கதிரைப் பரப்பியதால், நெடுக நடக்க

மாட்டாமல், குரவமும், மரவமும், கோங்கமும், வேங்கையும் வளர்ந்தோங்கி வனப்புடன் விளங்கிய அடர்ந்த பொழிலின் நடுவே இலங்கிய துர்க்காதேவி கோயில் கொண்டு எழுந்தருளிய ஐயை கோட்டம் என்னும் இடத்தை யடைந்தனர்.

ஐயை கோட்டம் அடைதல்

11. ஐயை கோட்டமும் ஆவேச ஆட்டமும்

நெடுந்தூரம் நடந்து வந்ததால் நங்கை கண்ணகியின் சீறடி சிவப்பேறியது. அவ்வருத்தம் தீருமட்டும் காளி கோயிலில் தங்கி இளைப்பாற எண்ணினார்கள். அக்கோயிலினருகில் மறக்குடி மரபில் வந்த வேடர் வாழும் சிற்றூர் ஒன்றுண்டு. அவர்கள் வழக்கமாகச் செய்து வரும் பூசையை நிறுத்தி விட்டதால், வளங்குறையப் பெற்று, வறுமை நிலையை எய்தினர். அவ்வேடர் குடியில் தோன்றிய சாலினி என்னும் பெண், கையிலே வில்லேந்தி, தெய்வம் ஏறப்பெற்று, ஊர் நடுவில் ஆவேசத்தோடு ஆடத் தொடங்கினாள். அங்குக் குழுமியிருந்த தம் குடி மக்களை நோக்கி, "அன்பர்காள்! நம் குடி தாழ்வடைந்ததற்குக்காரணம் தேவிக்குக் கொடுக்கப்பட்டு வரும் முறைப்பலி தவறியதுதான். நீங்கள் முன்போல் வளம் பெருக்கி வாழ்ந்து வர நினைத்தால், தேவிக்குச் செய்யவேண்டிய கடனை உடனே கொடுத்து, மன்னிப்புக் கேட்பீராக!" என்று சொன்னாள். இச் சொற்களைக் கேட்ட அம்மறவர் குல மக்கள், தெய்வமேறிய அம்

சாலினியின் ஆவேசம்

மங்கையின் சடைமுடியை முடித்து, பன்றிக் கொம்பினைப் பிறையாகச் சேர்த்து, புலிப்பற்றாலியைக் கழுத்தில் அணிந்து, வளைந்த வில்லும், பந்தும், கழங்கும் அவள் கையிற் கொடுத்து, திரிதரு கோட்டுக் கலைமான் மீதேற்றி, கிளியும், கோழியும், நீல நிற மயிலும், வண்ணமும், சுண்ணமும், நறுஞ்சாந்தும் மகளிர் கையிலேந்தி, வழி மறிக்கும் பறையும், சூறையாடு சின்னமும், கோடும் குழலும் ஒலிகளை எழுப்ப, ஐயை கோட்டத்தையடைந்து, துர்க்காதேவியைத் துதித்து வேண்டினர்.

இவ்வாறு பற்பல வாத்தியங்கள் முழங்க, அதனால் சாலினியின் ஆவேசம் அதிகமாயிற்று. அந்த ஆவேசத்தில் கோவலன் அருகில் அமர்ந்திருந்த கண்ணகியைப் பார்த்துச் சாலினி,

> "இவளோ, கொங்கச் செல்வி, குடமலையாட்டி
> தென் தமிழ்ப் பாவை செய்ததவக் கொழுந்து
> ஒருமாமணியாய் உலகிற் கோங்கிய
> திருமாமணி" —வேட்டு-47-50

எனப் பலப்படப் புகழ்ந்து பேசினாள். இவ்வாறு சாலினி சொல்லிய மொழிகள் பேதுறவால் மொழிந்ததாக எண்ணித் தன் அரும்பெறற் கணவன் பெரும்புறத்து ஒடுங்கினாள் கண்ணகி. அக் காட்சியைக் கண்டு புன்னகை அரும்பப்பெற்று நின்றாள். சூழ இருந்தவர்கள் சாலினியை,

> "அமரி குமரி சமரி
> சூலி நீலி மாலவற் கிளங்கிளை
> ஐயை செய்யவள் வெய்யவாள் தடக்கைப்
> பாய்கலைப் பாவை பைந்தொடிப் பாவை
> ஆய்கலைப் பாவை அருங்கலப் பாவை"
> —வேட்டு-67-70

எனப் பலவாறு துதித்ததும், குமரிக்கோலத்து

அமர்ந்த இளங்குமரியான சாலினியும் அவர்களுக்கு வேண்டிய வரம் அருளினாள். சின்னாட்களில் அதன் காரணமாக நாட்டில் பல்வகை வளங்களும் பாங்குறப் பெருகின.

புலவர் நாவில் பொருந்திய தென்றல்

ஆவேசம் ஆடிமுடிந்தவுடன், அவரவர் தம்மிடம் ஏகினர். கோவலன் கவுந்தியடிகளைப் பணிந்து, "கடுமையான இவ்வெயிற் காலத்தில் நடத்தலால், கண்ணகியின் கால்கள் அவ்வெம்மையைத் தாங்காது. ஆதலின் பகலொளி தன்னினும் நிலவொளி வீசும் நீளிரவில் வழிச் செல்லுதலே நன்றெனத்தோன்றுகின்றது. வாள்வரிவேங்கையும், அரவும் சூரும் இரைதேடு முதலைகளும் உருமும் சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா; மற்றும் இது செங்கோல் மன்னனாகிய பாண்டியன் ஆளும் நாடல்லவா? பயம் இன்றி எங்கு வேண்டினும் செல்லலாம்" என்று கூறவே, அடிகளாரும் அதற்கிசைந்து, அந்நாள் நெடு நிலவினில் நடந்து சென்றனர்.

அப்பொழுது விண் மீனினங்கள் சில பிரகாசிக்கச் சந்திரன் நல்லொளி வீசிற்று, சந்தனச் சாந்தின் மெல்லியவாசமும், செங்கழு நீர் மலர்களின் இனிய மணமும்,

> "மலயத் தோங்கி மதுரையின் வளர்ந்து
> புலவர் நாவிற் பொருந்திய தென்றலொடு"
>
> —புறஞ்-25–26

கலந்து, துன்பமுற்ற உள்ளத்துக்கு நல்லின்பம் ஊட்டியது. கோவலன் கடுவழி நடந்து கண் கலங்கி நிற்கும் கண்ணகியை நோக்கி, "இங்குக் கொடும் புலிகளின் சப்தமும், பேராந்தையின் கூக்குரலும்,

கரடியின் இடியினையொத்த பெருங்குரலும் உனக்கு அச்சத்தைத் தருமாதலால், துன்பம் நேராதவாறு என் அருகிலேயே வரக் கடவாய்" என மொழிந்தான். கண்ணகியும் கோவலன் தோளினைப் பற்றிக்கொள்ள, கவுந்தியடிகள் நில வளமும், மலைவளமும் விளக்கிக் காட்ட, மூவரும், வைகறைப் பொழுதில் அந்தணர் வாழும் ஓர் அக்கிரகாரத்தை யடைந்தனர்.

கோவலன் அவர்களை ஒரு சிறந்த இடத்தில் இருக்கச்செய்து, காலைக் கடன் கழித்துவர அருகிலுள்ள குளத்திற்குச் சென்றான். தானும் தன் மனைவியும் இடர்ப்பாடுகள் பல கடக்க வேண்டியிருக்கிறதே என்று வெந்துயருற்றுப் பெருமூச் செறிந்து, தன் விதியை நொந்து நின்று கொண்டிருந்தான்.

இது இவ்வாறாக, காவிரிப்பூம் பட்டினத்தில் மாதவி, வசந்தமாலையிடம் தான் கொடுத்தனுப்பிய திருமுகத்தைக் கோவலன் திருப்பியனுப்பியதை நினைத்து வருந்தி, கௌசிகன் என்னும் பிரமசாரி ஒருவனை அழைத்தாள். தன் பிரிவின் துயரை அவனுக்குத் தெற்றென உரைத்து, அவனிடம் ஒரு திருமுகம் எழுதித் தன் கண் போன்ற அன்பர் கோவலன் கையிற் சேர்ப்பித்து அவரையும் கூடத் தன்னிருப்பிடத்துக்கு அழைத்து வருமாறு பணித்தாள். அப்பிரமசாரியும் அதற்கிசைந்து, நாடு நகரங்கள் பல கடந்து, தற்செயலாகக்கோவலன் நின்றுகொண்டிருந்த நீர் நிறைந்த குளத்தருகே வந்துசேர்ந்தான். அங்குநின்றிருந்தவன்கோவலன் தானோ என அவனுக்கு ஐயப்பாடு தோன்றியது. அதற்கு ஓர் உபாயம் செய்யக்கருதி, மாதவி

என்றழைக்கப்படும் தான் நின்று கொண்டுள்ள இடத்தில் படர்ந்து பந்தல் போல் விளங்கிய கொடியைப் பார்த்து, "கோவலன் பிரிதலால் ஏற்பட்ட கொடுந்துயரத்தால், தன் மணமாலையையும், அணிகலன்களையும் கழற்றி, ஒளியிழந்து விளங்கும் பெண் கொடியாகிய மாதவி போல், மாதவிக் கொடியே! நீயும் உன் இலைகளை எல்லாம் உதிர்த்து, காயாது பூவாது நிற்கின்றாயே! இது ஏன்? உனக்கும் மாதவி என்ற பெயர் இடப்பட்டதாலோ?" என்று உரைத்து, அதனை நோக்கி நின்றான். இவ்வுரைகளைக் கேட்ட கோவலன், "மாதவி என்னும் பெயரை மந்திரம்போல் உச்சரித்தவன் யாவன்?" எனச் சற்றுத் திரும்பினான். எதிரில் கௌசிகன் நிற்கக் கண்டு, "யாது நீ கூறியது? அதன் பொருள்தான் என்ன? சிறிது விளக்கி உரைத்திடுவாய்" என்று வேண்டினன்.

கோவலனும் கௌசிகனும்

இப்படிப் பேசுபவன் கோவலனே என உறுதியடைந்து, "அருமையான மணியை இழந்த நாகம்போல், உன்னுடைய தாய் தந்தையர் உனது பிரிவுக்காக வருந்துகின்றனர். நினது சுற்றத்தார் துயர்க் கடலில் மூழ்கினர்; ஊரின் துயரம் சொல்லுக்கடங்காது.

"அருந்திறல் பிரிந்த அயோத்திபோலப்
பெரும்பெயர் மூதூர் பெரும் பேதுற்றது"

—புறஞ்–65–66

மற்றும் வசந்தமாலை வாயிலாக நீ ஓலை மறுத்ததைக் கேட்டு, பசந்த மேனியளாகி, காலையிலாயினும் நீ வருவாய் என மாதவி எதிர்பார்த்திருந்தாள். பொழுது புலர்ந்ததும், நீயும் உன் மனைவியோடு நகர்ப்புறம் கடந்ததைக் கேட்டு, தாமரை இலை மீது

படர்ந்த நீர்த்துளிகள் போல் தத்தளித்தாள். இவ்வோலையை எழுதி "என் கண்மணியனே யார்க்குக் காட்டுக" என்று என்னிடம் கொடுத்தனுப்பினாள். யானும் அம் முடங்கலை ஏந்திப் பல விடங்களில் உன்னைத் தேடி அலைந்து, இப்பொழுது இங்குக் கண்டேன்" என்று கூறித் தான் கொண்டுவந்த ஓலையைக் கோவலன் கையிற் கொடுத்தான்.

அவ்வோலையைப் பிரித்துப் பார்த்தான் கோவலன். அதில் "குற்ற மற்ற அன்பரே! உமது அழகிய திருவடிகளைத் தொழுகின்றேன். உம்முடைய தாய் தந்தையர்க்குச் செய்யும் பணிவிடைகளையும் அறவே மறந்து, குலப் பிறப்பாட்டியோடு, இரவோடு இரவாகச் சென்றதற்கு அத்தனை பிழையை என்னதான் நான் செய்து விட்டேன்? என் பிழையை அறியாது, என் மனம் ஏங்கி வாடுகின்றது; என் குற்றத்தை மன்னித்து, கவலையைக் கடிய வேண்டுகின்றேன்" என்று எழுதியிருந்தது.

இவ்வோலையைக் கண்டானோ, மாதவியைக் கண்டானோ என்று எண்ணும்படி இருந்தது கோவலனுடைய நிலை. கோவலனது மனம் இரக்கத்தால் குழைந்து வாடியது. "அவள்மேல் குற்றமொன்றுமில்லை; தீவினை அவளுடைய தன்று; என்னுடைய தீவினையே; என் தாய் தந்தையர் தாள்களைத் தொழுதேன்; அவர்கள் வருத்தத்தைச் சற்றுத் தீர்ப்பாயாக" என்று சமாதானஞ்சொல்லி கோவலன் அவ்வந்தணனை அனுப்பிவிட்டான்.

பிறகு தனது அனுட்டானங்களை முடித்துவிட்டு,

"மாசில் கற்பின் மனைவியோ டிருந்த
ஆசில் கொள்கை அறவிபால்" —புறஞ்–102–103

கோவலன் மீண்டுவந்தான்; அங்கு வசித்த பாணர்களோடு பாங்குடன் சேர்ந்து, செங்கோட்டி யாழில் வரன் முறையாக வந்த பாடலைப் பண்ணோடு இன்னிசையாக இழைத்தான். பாட்டு முடிந்ததும், பாணரை நோக்கி, "மதுரை இன்னும் எத்தனை காததூரம் இருக்கிறது?" என்று கேட்டான். அதற்கு அவர்கள் "காழகில் குழம்பும், கத்தூரிச் சாந்தும் பூசி, சேற்றில் முளைத்த செங்கழுநீர் சண்பகத்தோடு முல்லை மலர்களை வைத்து மாலையாகப் புனைந்து அணிந்த பாண்டியனது மதுரை மூதூரினின்று வரும் இத்தென்றல், பொதியமலையினின்றும் பிறந்து, மெல்ல மெல்லத் தவழ்ந்து வீசும் தென்றற் காற்றினும் இனிமை யானது. இது புலவர்களாலும் போற்றப்படுவது. ஆகையால் திருவிளங்கப் பெற்ற மதுரை மூதூர் அண்மையிலேயே உள்ளது. இரவில் சென்றாலும் யாதொரு விதமான இடர்ப்பாடும் நேராது" என்று உரைத்தனர்.

மதுரை மூதூர் தென்படல்— புறஞ்சேரி புகுதல்

அவர்கள் உரைத்தவாறே, மூவரும் முன்போல் இராவழி நடந்தனர். நடந்து செல்கின்ற வழியில், சிவனார் திருக்கோயிலும், பெரும்பெயர் மன்னவன் பேரிசைக் கோயிலும், ஆகிய இவைகளில் முழங்கும் காலை முரசத்தின் ஒலி அவர்கள் காதிற்கு எட்டியது. அந்தணர் நான்மறை நவின்ற ஓசையும், மாதவர்களின் மந்திர ஓசையும் குழைந்து கேட்டன. முரசொலியும், போரில் வெற்றி கொண்ட யானையின் பிளிறலும், வயக்கரி

முழக்கமும் எழுந்தன ஒருபுறம். குரவமும், வகுளமும், கோங்கமும், வேங்கையும், அடர்ந்து வளர்ந்த இடத்தில், மல்லிகையும், சண்பகமும், முல்லையும் கூடிய பன்மலர் வாசனை கலந்து வீசிற்று. இவற்றினிடையே சென்று, "புனலாறன்று; இது பூவாறே" என்று எண்ணும்படியாக ஓடிய வையைக் கரையை அடைந்தனர்.

"புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி
வையை என்ற பொய்யாக் குலக்கொடி—புறஞ்–169–170

என்கிறார் இளங்கோ. வையைநதியினைத் தெப்பத்தின் மூலமாக மூவரும் கடந்து மதுரையை அடைந்தனர். மதுரைக் கீழ்த்திசை வாயிலின் புறத்தே யமைந்திருந்த

"புள்ளணி கழனியும் பொழிலும் பொருந்தி
வெள்ளநீர்ப் பண்ணையும் விரிநீ ரேரியும்
காய்க்குலைத் தெங்கும் வாழையும் கமுகும்"
—புறஞ்–191–193

விளங்கப்பெற்ற அருந்தவம் புரியும் சான்றோர்கள் வாழும் புறஞ்சேரியில் புகுந்தனர்.

12. மதுரை மூதூரும் மாதரி அன்பும்

மூவரும் மதுரைமா நகரின் புறஞ்சேரியை அடைந்தகாலை, கீழ்வானம் வெளுத்து, இளஞ் சூரியன் எழுந்தான். பொய்கையிலுள்ள தாமரைகள், கணவர் வருகையைக் கண்டு களிப்பதுபோல, தங்கள் மொட்டுகளை விரித்து மலர்ந்தன. புட்கள் பல சிலம்பின. அறவோர் பள்ளியிலும், அரசன் மாளிகையிலும், செவ்வேள் கோட்டத்

வைகறைப் போதில் வயங்கிய மாநகர்

[library stamp]

திலும், இந்திரன் கோட்டத்திலும் முரசங்கள் இயம்பின; சங்கங்கள் தத்தமக்குரிய நாதங்களை எழுப்பி நின்றன.

கோவலன் கவுந்தியடிகளை வணங்கிக் கை தொழுது நின்று, "செய்தவத்தீர்! நெறிமுறையி னின்று நீங்கி, மலரினும் மெல்லிய தன்மைவாய்ந்த இக்கண்ணகியோடு, பல இடுக்கண்களைக் கடந்து, அறியாத் தேசமாகிய இம்மதுரையை அடைந் தேன். இனி, யான் தொன்னகர் மருங்கில் வாழும் வணிகர் பெருமக்களையடைந்து, அவரிடம் என் கருத்தைத் தெரிவித்து வருமட்டும், இவளுக்கு ஏதும் இடையூறு நேராதவண்ணம் காத்தருள் செய்க; இதுகாறும் இவளைக் காத்ததும் தாங்களே என்பதை அறிவேன். தங்களிடமே இவளை விட்டுச் செல்கின்றேன்; சீக்கிரமே திரும்பி விடுவேன்; விடை தருக" என்று வேண்டினன்.

அதற்குக் கவுந்தியடிகள் கோவலனை நோக்கி, "முற்பிறவியில் நீ நல் வினையும், தீவினையும் மாறி மாறிச் செய்ததால், இப்பிறப்பிலும் அதன் வினை தொடர்ந்து வந்து, மூதாதையர் பொருள் இழந்து, வறியனாகிக் கண்ணகியோடும் துன்பங்கள் பல அனுபவித்தாய்.

கவுந்தியடிகளின் அறவுரை

"வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" —திருக்குறள்

எனத் தமிழ்மறை கூறுவதால், நல்வினையும், தீவினையும், தாம் தாம் அமையும் பான்மை யுடையது. ஆதலால் கற்றுணர் அறிவோர், வினைப்பயன் கண்டு மனப்பயம் கொள்ளார். பேதையர் அவ்வினைப்பயனைப் பெரிதாகக்கொண்டு

மனந்தடுமாறி மாய்ந்துபோவர். பிரிவினால் ஏற்படும் துன்பமும், பல்வகை இன்பமும், எம்போன்ற துறந்தாரை எம்மட்டும் பாதிக்காது.

"தாதை ஏவலின் மாதுடன்போகிக்
காதலி நீங்கக் கடுந்துய ருழந்தோன்" —ஊர்-47-48

இராமபிரான். திருமாலின் அவதாரமாகிய அப் பெருமானுக்கே அக்கதி நேர்ந்ததை நீ யறிய வில்லையா? மற்றும், புட்கரனோடு சூதாடிப் பொருளையும், புகழையும் இழந்து, காரிருளில் மண்டபத்தினின்றும் தன் காதலியைப் பிரிந்த நளனும் அவ்வினைக்கு ஆளானானன்றோ? வெவ்வினை யாரை விட்டது? அரசனும் ஆண்டியும் அதற்கு ஒன்றே. ஆயினும், அவர்களைப் போல் தாரம் பிரிந்து நீ ஏகவில்லை; உன்னுடனே கண்ணினுமினிய உன் தாரம் கூடவே இருப்பது, நீ செய்திருக்கும் சிறிது நல்வினைப் பயனாலன்றோ? ஆதலால் சிறிதும் வருந்தாது ஏகி, மன்னவன் மதுரையை யடைந்து, செய்யவேண்டியதைச் செய்து முடித்து மீண்டும் திரும்புவாயாக" என்று கோவலனுக்கு நல்லறிவுறுத்தி, வாழ்த்தி விடை கொடுத்தனுப்பினர்.

அடிகளது அரிய மொழிகளால் அல்லலுற்ற மனம் ஆறுதலடையப் பெற்று, மதுரை நகரைப் பார்த்துவரக் கோவலன் புறப்பட்டான். அம் மதுரையின் வானத்தை முட்டும் மாமதில்களைக் கடந்து, நிறைந்த வளங்களைக் கண்டு மகிழ்ந்தான். அரண்மனைகளில் ஆடல் பாடல்களின் ஒலி ஆர்பரித்தது. தங்காதலர்களோடு, வையை நதியில், களியாட்டம் செய்து மக்கள் நீராடிக் களித்தனர். மற்றும் அந்தணர் வீதியும், அரசர் வீதியும்,

வைசியர் மருங்கும், வேளாளர் வீதியும், அரசரும் விரும்பும் அங்காடி வீதியும், கம்பளம் நெய்வோர் வீதியும், பல்வித நவமணிகள் விற்கும் இரத்தினக் கடை வீதிகளும், சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் எனப்படும் நால்வகைப் பொன் பொலிகின்ற கடை வீதிகளும் கண்டு களித்தான்.

கோவலன் கண்ட மதுரைச் சிறப்பு

> "கூலங் குவித்த கூல வீதியும்
> பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவும்
> அந்தியுஞ் சதுக்கமும், ஆவண வீதியும்
> மன்றமும் கவலையும் மறுகும்" —வரி-211-14

ஆகிய இவற்றின் வனப்புக்களை எல்லாம் கண்டு, புறஞ்சேரியை மீண்டும் அடைந்து, கவுந்தியடிகளுக்குத் தான் கண்ட பெருங்காட்சிகளை விளக்கிக்கொண்டிருந்தான்.

இப்படிப் பேசிக்கொண்டிருந்தபொழுது, பொன்னி நாட்டுப் புகார்ப்பதிக் கருகிலுள்ள தலைச் செங்காட்டில் வாழ்ந்து வந்த, நான்மறையும் ஆறங்கமும் நன்குணர்ந்தோதிய அந்தணனாகிய மாடலன் என்பான், மாதவமுனிவன் மலையான பொதிய மலையை வலஞ்செய்து, குமரியாடி, பல இடங்கள் சென்று, மீண்டு வருங்காலை, மதுரை நகர்ப் புறஞ்சேரியில் தங்கியிருந்த கவுந்தியடிகளைக் கண்டு அவ்விடம் வந்தான். கோவலனுக்கு அவ்வந்தணனை ஏற்கெனவே தெரியுமாதலால், கோவலன் அம்மாடலனைக் கண்டதும், நேரே சென்று அவனடியிற் பணிந்து வணங்கி நின்றான்.

மாடலன் கோவலனது வாடிய முகத்தையும், வருந்தும் உள்ளத்தையும் குறிப்பால் உணர்ந்து, "மாதவி மகட்கு மணிமேகலை எனப் பெயரிட்டு

வாழ்த்தித் தானம் பல தரும்போது, அதைப் பெற வந்த முதுமறையாளன் ஒருவனை மதயானை கைப்பற்ற, அவ்வானையி னின்றும் அம்மறையவனைப் பிரித்து, ஆனை மேலேறி, மதத்தினை ஒடுக்கிய பெரும் ஆற்றல் வாய்ந்த கோவலனே! நீ வாழ்வாயாக! உன் செயல்களெல்லாம் இப்பிறவியில் நல்ல தாகவே காணப்படுகின்றன; ஆயினும் மெல்லியல் கண்ணகியுடன் நீ கொடுந்துயரடைந்து வருவது, முற்பிறவியில் செய்த தீவினைப் பயன் தொடர்ந்து வருவதாலேயோ?" என்று வருந்தி ஆருத் துயரடைந்தான்.

கோவலனும் மாடலனும்

மாடலன் ஆறுதல் மொழிகளைக் கேட்ட கோவலன் "ஐயனே! இன்று வைகறை யாமத்தில் ஒரு தீக்கனவு கண்டேன். இம்மதுராபுரியில் என் காதலி கண்ணகி கொடுந்துயரடைந்தது போலவும், என் ஆடையைப் பிறர் கவர்ந்துகொண்டது போலவும், கூரிய கொம்புகளையுடைய காட்டெருமைமீது சவாரி செய்வது போலவும், அதன்பின் என் கண்ணகியோடு, 'பிணிப்பறுத்தோர் பெற்றி'யாகிய விண்ணகம் எய்துவது போலவும், மாதவி தன் மகள் மணிமேகலையை 'அணிதிகழ்போதி அறவோன்' ஆகிய புத்தர் பொன்னடிபோற்றித் துறவறம் மேற்கொள்ளும்படி செய்தது போலவும் கனவுகள் பல கண்டேன். விடியற் காலை கண்ட கனவாதலால், கண்டவுடனே பலித்துவிடும் அல்லவா!" என்று உளங்கனிய மொழிந்தான்.

வைகறைக் கனவு

கோவலன் கூறிய சொற்களை மாடலனும், கவுந்தியடிகளும் கேட்டனர். "இத்தீய கனவினால்

யாது நேருமோ?" என்று ஐயுற்றவண்ணமாய், கோவலனை நோக்கி, "இது தவத்தோர் வதியும் இடம்; ஆகவே நீங்கள் இல்லறத்தார் உறையும் மதுரையின் அகநகர் மருங்கு சென்று வாழ்தலே தக்கதாம்" என்று கவுந்தியடிகள் பணித்தனர்.

அடைக்கலம் பெற்ற மாதரி

இதைக் கூறி முடித்ததும், அறம்புரியும் அற வோர் வாழும் புறஞ்சேரியில் கோயில் கொண்ட இயக்கி தேவதைக்குப் பால்மடை கொடுத்துத் தமது இல்லம் திரும்பும் ஆயர்குல முதுமகள் மாதரி என்பவள் அங்கு வந்து சேர்ந்தாள். கவுந்தி அடிகளைக் கண்டதும் அடி பணிந்தெழுந்தாள். அடிகள் அவள் நற்பண்புகளை நோக்கி, "பசுவைக் காத்தோம்பி, அதன் நற்பயன் யாவற்றையும் மாந்தர்க்கு அளித்திடும் இவ்வாயர் குலத்தாருடைய வாழ்க்கையில் யாதொரு தீங்கும் இல்லை; இவள் தீதிலள்; முதுமகள்; செவ்வியள்; அன்புடன் நேசிப்பவள். ஆகவே இவளிடம் கண்ணகியை அடைக்கலமாக இருத்துவதால், யாதொரு இழுக்கும் வாராது" என்று தனக்குள்ளே தீர ஆராய்ந்து, எதிரில் நின்ற மாதரியைப் பார்த்து "மாதர்போற்றும் மாதரி! நான் சொல்வதைச் சற்று கேட்பாயாக! இக்கண்ணகியின் கணவனுடைய தந்தையின் பெயராகிய மாசாத்துவான் பெயரைக் கேட்டாலே, மதுரை வாணிகப் பெருமக்கள், இவனையும் இவன் மனைவியையும் எதிர்கொண் டழைத்து, தத்தம் இல்லத்திற் கொண்டு காப்பாற்று வார்கள்; அத்தகைய பெருஞ் செல்வர் மனையினிற் புகுமளவும் இப்பெண்மணியை உன்னிடத்தில் அடைக்கலமாகவிட்டு வைக்கிறேன். 'இவளை

உன்னுடன் அழைத்துப் போந்து, நன்னீராட்டி, செங்கயல் நெடுங் கண்களுக்கு, அஞ்சனம் தீட்டி, மென்மைக் கூந்தலுக்குப் பன்மலர் தொடுத்து வைத்து, தூய ஆடை உடுத்தி, அவளுக்கு வேண்டுவன செய்'

> "ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத்
> தாயும் நீயே யாகித் தாங்கு" —அடை—135-136

எனத் தாய்போலக் காப்பாற்றவேண்டும்" என்று உரைத்தார் கவுந்தியடிகள்.

இன்னும் மாதரியிடம்,

> "..................................இங்கு
> என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
> வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்"
> —அடை—137-139

என்றும்,

> "இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்
> கற்புக்கடம் பூண்ட இத் தெய்வ மல்லது
> பொற்புடைத் தெய்வம்யாங் கண்டிலமால்"
> —அடை—142-144

என்றும் கவுந்தியடிகள் கண்ணகியின் கற்பு மேம்பாட்டைப் புகழ்ந்துரைத்தார். "பத்தினிப் பெண்டிர் வாழும் நாட்டில் வானம் பொய்க்காது; வளம் பிழைப்பறியாது; நீணில வேந்தர் கொற்றம் சிதையாது; இத்தகைய நற்சொற்களை அறியாயோ நீ? மேலும், தவமுடையோரால் கொடுக்கப்படும் அடைக்கலப்பொருள் சிறிதாயினும் மிகப் பேரின்பம் தருவதாகும். எட்டிப் பட்டம் பெற்ற சாயலன் என்பான் தன் மனையாளுடன், ஒரு சிறு குரங்கிற்குத் தகுந்த நேரத்தில் அடைக்கலம் கொடுத்ததற்காக என்றுமழியாப் பேரின்பம் எய்தின கதை உனக்குத் தெரிந்ததுதானே! ஆகையால் நீயும்

இக்கற்பரசியை உனது இல்லங்கொண்டு, உபசாரங்கள் செய்வாயாக!” என்று கவுந்தியடிகள் கூறினர். இம்மூதுரையைக் கேட்ட மாதரி, கண்ணகியை அடைக்கலப் பொருளாக ஏற்றுக் கொண்டு, கதிரவன் பொழுது சாயுந்தருணத்தில் தன் இல்லத்தையடைந்தாள்.

ஆயர்பாடியில் மாதரி தன் மனையின் ஒரு பாகத்தில் வேலி சூழ்ந்த காவலையும், குளிர்ந்த பூம்பந்தலையும் கொண்ட செம்மண் பூசப்பெற்ற இடத்தில் கண்ணகியை அமர்த்தினள். மற்றைநாட் காலையில் சுற்றிலுமுள்ள ஆய்ச்சியர் பலரையும் அழைத்து, அவளுக்குத் தூய நீரில் ஸ்நாநம் செய்வித்தாள். தன் மகள் ஐயையைப் பணிப் பெண்ணாக நியமித்துக் கண்ணகியை நோக்கி, “பொன்னைப் போலும் உன்னைக் காப்பாற்றுவேன்; என்னிடம் சிறிதும் சங்கோசமின்றி வாழக்கடவாய்; இடையில் நேர்ந்த இடர்ப்பாடுகளை யெல்லாம் நீக்கி, ஏதம் சிறிதுமில்லா இவ்விடத்தை அடையச் செய்த உன் திருக்கணவனுக்கு ஒருவித குறையும் வரமாட்டாது; கவலையற்று இருப்பாயாக” என்று புண்பட்ட மனதுக்குப் பண்பட்ட பல சொற்களைச் சொல்லித் தேற்றினள். பிறகு அடிசிலாக்குதற் குரிய நற்கலங்களை அனுப்பிவைத்தாள்.

மாதரியின் தேற்றம்

புதுப் பாண்டங்களையும், காய்கறி வகைகளையும், செந்நெல்லரிசியையும் பெற்றுக் கண்ணகி, தன் தோழி ஐயையின் உதவியால் சமையல் செய்யத் தொடங்கினள். கண்ணகியின் கைவிரல் சிவப் பேறியது. திருமுகம் வியர்த்தது. செங்கண் நீரைப்

கண்ணகியின் சமையல்

பெருக்கிற்று. தம் கணவர்க்கு இன்னமுதம் போன்ற இனிய உணவைத் தயாரித்தாள்.

பின் கோவலனை அழைத்து, ஆசனத்தமர்த்தி, செந்நெல்லரிசியால் சமைத்த அமுதையும், நறு நெய்யும், மாவின் கனியோடு வாழைத் தீங்கனியும் பலவகையாகக் குருத்திலையில் பரிமாறினாள். கோவலன் உணவு உண்பதை மாதரியும், அவள் மகள் ஐயையும் மறைந்து பார்த்து, உவகையிலாழ்ந் தனர். அவர்கள், "இங்கு நல்லமுதுண்ணும் நம்பி, ஆயர்பாடியில் யசோதை நங்கை பெற்ற புதுமலர்க் கண்ணன் தானோ? அருகில் நிற்கும் மாது, நீல மணி வண்ணனது நெடுந்துயர் களைந்த பின்னைப் பிராட்டிதானோ?" என்று வியந்து பாராட்டினார்கள். கோவலன் அமுதுண்டு அங்கு ஓரிடத்தில் உட்கார்ந்தான். கண்ணகி அவனுக்கு வெற்றிலைச் சுருளையும், அடைக்காயையும் அளித்து அருகில் நின்றாள்.

அப்பொழுது கோவலன் தன் காதலியை வருக என அழைத்து, "கல்லும், முள்ளும், வெம்மையும் நிறைந்த கானகத்தில் நாம் வழி நடந்ததை அறிந்து நம் தாய்தந்தையர் என்ன மனத்துயரம் அடைகிறார்களோ? இது மாயங் கொல்லோ அல்லது வல்வினை கொல்லோ? என அறியாமல் அலைவுறு கின்றேன் வறுமொழியாளரொடும், வம்பை வளர்த்திடும் பரத்தையரொடும் சேர்ந்து, நல்லொழுக்கத்தை அறவே மறந்து ஒழுகிய எனக்கு நல்ல நெறி சிறிதாயினும் கிடைக்கப்பெறுமோ? பெற்ற தாய் தந்தையர்க்கும் பிழை செய்தேன்; அன்பும் பண்பும் கொண்ட உனக்கும் குறையை

கோவலனது கழிவிரக்கம்

உண்டாக்கினேன்; சிறுமை செய்தேன். இவை யெல்லாம் குற்றமுடையன எனச் சிறிதும் எண்ணு தொழிந்தேன். இருப்பினும், மாநகர் மருங்கு இங்கு என்னுடன் வாவென்றிசைத்ததும், மறு சொல் சொல்லாது நீ என்னுடன் நடந்தாய்!

"எழுகென எழுந்தாய்! என் செய்தனை?"—கொலை-70

ஐயகோ! என்ன காரியம் செய்துவிட்டாய்? மாட்டேன் என்று ஒரு சொல் சொல்லியிருக்கக் கூடாதா? இவ்வளவு இன்னல்களையும் நீ தவிர்த் திருக்கலாம் அல்லவோ?" என்று பலவாறு தன் நிலைக்கு வருந்தி, கண்ணகியிடம் துயரத்தை விளக்கி, ஆறுதல் பெற முயன்றான்.

கோவலன் அன்பொழுகக் கூறியதைக் கேட்ட கண்ணகி, "அன்பரே! இல்லற தருமமாகிய

"அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்" —கொலை-71-73

ஆகிய கடமைகளை எல்லாம் இழந்தேனாயினும், உமது ஆணையின்படி வழுவாது ஒழுகக் கடமைப் பட்டேனாதலால், உம்மோடு இன்பமாக வந்தேன்" என்றாள். கோவலன், அங்ஙனம் உரைத்த கண்ணகியைத் தழுவி, "சுற்றமும் ஆயமும் அறவே நீக்கி, நாணமுடன் நல்லோர் ஏத்தும் பேணிய கற்பினைப் பெருந்துணையாகக்கொண்டு, என்னோடு போந்து, இங்கு என் துயர்களைந்த,

"பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்!
நாணின் பாவாய்! நீணில விளக்கே!
கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!"
—கொலை-89-91

யான் உன்னை எங்ஙனம் புகழ்வேன்! எங்ஙனம் என் இதயத்தை உனக்குத் திறந்து காட்டுவேன்!

என் இதய தீபத்தை ஏற்றிவைத்த குலவிளக்கல்லவா நீ! நான் உன் காற்சிலம்பு ஒன்றைக் கொண்டுபோய் விற்றுப் பொருள் ஆக்கி வருவேன். அது வரையில் நீ தனிமையால் மயங்காதிருப்பாயாக" என்று மறுபடியும் அவளைத் தழுவிக் கண்களில் நீர்ப்பெருக, உளம் வெதும்பி, கண்ணகியை மீண்டும் காணப் பெருதவனுய், கண்களை நீர் மறைக்க, கோவலன் வீட்டைவிட்டு வெளியே சென்றுன். சென்றவன் சென்றவன்தான்! மீளாப் பெருவழி நடந்துவிட்டான். கண்ணகி அவனை மறுபடியும் உயிரோடு கண்டாள் இல்லை. பிரிக்காத காற்சிலம்பைப் பிரித்துக் கொடுத்தாள்; அப் பிரிவிலே, கோவலன் உயிரையும் பறிகொடுத்தே விட்டாள்! இதை விதியின் விளையாட்டு என்றழைக்காமல் வேறெவ்வாறு அழைப்பது?

அன்பும் பிரிவும்

13. சிலம்பால் விளைந்த துன்பம்

கோவலன் தன் வீட்டைவிட்டுச் சரேலென அகன்றுனல்லவா? வெளியே புறப்படும்போது, ஒரு திமிலைக்கொண்ட எருது இவனை எதிர்த்து நெருங்கி வந்தது. அதை இழுக்காக நினைத்தான் இல்லை. ஆயர்பாடி மக்களுக்கோ அது தீய சகுனமென்பது தெரியும்; ஆனுல் கோவலன் அதைத் தீய நிமித்தம் எனக் கருதினுனில்லை. காரியத்தின் மீதே கண்ணுகி வெளியேறினுன்.

தீய சகுனம்

கோவலன் பல வீதிகளையும் கடந்து, கடைவீதி வழியாகப் பார்த்துக்கொண்டு செல்லும்போது,

உருக்குத் தட்டாரும், பணித் தட்டாருமாகிய "நுண்வினைக் கொல்லர் நூற்றுவர்" பின்தொடர, அரசனிடம் பெற்ற வரிசையோடு, யானை போன்ற நடையை உடையவனுகிக் கையில் கோல் ஒன்றைத் தாங்கி வரும் தலைமைக் கொல்லனைக் கண்ணுற்ருன். அவனே தனது சிலம்பை விலைமதிக்கத் தகுதியானவன் என நினைத்து,

பொன்செய் கொல்லன்

"காவலன் தேவிக் காவதோர் காற்கணி
நீவிலை யிடுதற் காதியோ?" —கொலை—111-112

என அவனைக் கேட்டான். அதற்கு அப்பொற் கொல்லன் "மடந்தையர் காலிலணியும் சிலம்பின் விலையை மதிப்பிட என்ருல் இயலாத காரியம்; யான் வேந்தர் முடிமுதற்கலன்கள் அழகுற அமைப்பவன்" எனச் சாதுரியமாகப் பகர்ந்தான். அம்மொழிகளைக் கேட்ட கோவலன் அக் கொல்லனிடம் தன் சிலம்பைப் பையினின்றும் அவிழ்த்துக் காட்டினுன்.

பொற்கொல்லன், அச்சித்திரச் சிலம்பின் வேலைப்பாட்டை உணர்ந்து, தான் முன்பு அரண்மனையில் களவாடிய கோப்பெருந்தேவியின் சிலம்போடு, இது ஒப்புமை உடைத்தாதலின், "இதுவே களவுபோன சிலம்பு என, என் களவை அரசன் அறியுமுன்னரே உறுதிப்படுத்தல் அவசியம்" என்று பலவாறு சிந்தித்தான். அவன் கோவலனை நோக்கி, "கோப்பெருந்தேவிக் கல்லது மற்றையோர்க்கு இச்சிலம்பு ஏற்காது; இதோ, நான் சென்று அரசனுக்கு அறிவித்து உடன்திரும்பி வருவேன்; அதுகாறும் இச்சிறு குடிசையில் தங்கியிருப்பாயாக"

தட்டானும் சிலம்பும்

என்றுரைத்து, கோவலன் அக்குடிசைக்குப்போக, தான் அரண்மனையை நோக்கி நடந்தான். ஏகும் தருணம் "என்னுடைய நற்காலமே இவனை என்னிடம் கொணர்ந்தது. காலணி களவாடிய என் செய்கை வெளிப்படுமுன்னரே, மன்னற்கு இவனைத் திருடன் என்று எண்ணும்படி செய்து விடல் வேண்டும்" என்று பலவாறு சிந்தித்துக் கொண்டு, அரண்மனையை யடைந்தான்.

பொன்செய் கொல்லன் அரண்மனையை அடைவதற்கும், பாண்டிய அரசன், தன் தேவியின் ஊடலைத் தீர்க்கும் பொருட்டு, அந்தப்புரத்தை நோக்கி விரைந்து செல்வதற்கும் சரியாக இருந்தது. வேகமாய்ச் சென்றுகொண்டிருந்த வேந்தனை அடிதொழுது பலவாறு துதிசெய்து, "வேந்த! கன்னக்கோல் இன்றி, கவைக்கோல் இன்றி, துயிலில் ஆழ்த்தும் மந்திரத்தையே துணையாகக் கொண்டு, வாயிற்காப்போரை மயக்கி, கோப்பெருந் தேவியின் சிலம்பைக்கவர்ந்த கள்வன் என் சில்லைச் சிறு குடிலில் அமர்ந்திருக்கிறான்" என்று சொன்னான். இச்சொற்களைக் கேட்டு வேந்தன், மாதர் மயக்கத்தாலும், வினைவிளை காலத்தாலும் உந்தப்பட்டிருத்தலால், தீரயோசியாது, அரண்மனைக் காவலாளரைக் கூவி அழைத்தான். கூப்பிட்டு,

அரசனது ஆணை

" . . . . ஈங்கென்
தாழ்பூங்கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கையதாகில்
கொன்று அச்சிலம்பு கொணர்க"—கொலை—150-153

என்று ஆணையிட்டு, அவர்களை முந்திப்போகுமாறு ஏவினான். கூற்றமன்ன கொல்லனும் தன் கருத்து

இனிது முடியப் பெற்றதென மகிழ்ந்து, காவலாள ருடன், தீவினைப்பாற்பட்டிருந்த கோவலன் இருக்கு மிடத்தை யடைந்தான். அவ்வாறு அடைந்த அக் கொல்லன் அவனை நோக்கி "வலம்படுதானை மன்னவன் ஏவலால், சிலம்புகாண, இதோ இவர்கள் வந்திருக்கிறார்கள்" என்று கூறி, செய்வினைச் சிலம்பின் அருமை பெருமைகளை அவர்கள் நம்புமாறு எடுத்தோதி, அச்சிலம்பே அரண்மனைச் சிலம்பு என்று பொருள்படுமாறு பேசினான்.

இச் சொற்களைக் கேட்டுக் கோவலனது முக இலக்கணத்தை நோக்கி, "இவன் அத்தகைய கள வினைச் செய்யத் தகுந்தவன் அல்லன்; குற்றம் செய்த வனைப்போல் முகவிகாரம் காட்ட வில்லையாதலால், இவனைக் கொல்வது நீதியன்று" என்று காவலாளர்கள் பொன்செய் கொல்லனிடம் கூறினார்கள். இவர்கள் சொல்லியதைக் கேட்டு, இகழ்ச்சி தோன்ற நகைத்துப் பின்வருமாறு கூறினான்:

காவலாளரின் ஐயப்பாடு

"கள்வர்கள் மந்திரம், தெய்வம், மருந்து, நிமித்தம், தந்திரம், இடம், காலம், கருவி என்ற எட்டையும் தமக்குத் துணையாகக் கொண்டு திரிவார்கள். இவனுடைய மாயமருந்தில் மயங்கி, இவனை விட்டுவிட்டீர்களானால் அரசனாற் பெருந் தண்டனைக்குள்ளாவீர்கள்; இது உறுதி. மற்றும் இக்கள்வர்போன்ற கயவர், தாங்கள் இதற்கென்றே கற்ற மந்திரத்தை யோதினால், தேவர்களைப்போல் மாயமாய் மறைந்து உறைவர்; மருந்தினால் நம்மை மயக்குவாராயின், இருக்கும் இடத்தைவிட்டுப் பெயர முடியாமல், நிலையாக நின்றுவிடுவோம். அரும்பொருள் கிடைப்பதாயினும், நன்னிமித்தம்

கண்டாலன்றிக் களவாடச் செல்லார். அக்களவு நுண்மையினாலே,

"தந்திர காரணம் எண்ணுவராயின்
இந்திரன் மார்பத்தாரமும் எய்துவர்"
—கொலை—180-181

இந்திர பதக்கமும் இமைப்பொழுதில் எய்துவர்; காலங்கருதி, ஒரு பொருளைக் கைப்பற்றுவாரானால், மேலோராயினும் விலக்கல் செய்யமுடியாது; அக்கள்வர்க்கு இரவு பகல் என்ற பேதமே கிடையாது. இவர்கள் கற்றுத் தேர்ந்த களவுநூலைக் கேட்குமிடத்து, நமக்கு ஓடி ஒளிக்கச் சிறிதும் இடமே இல்லை.

கோல்லன் கட்டுரை

மற்றும் கேளுங்கள். நெடுநாட்களுக்கு முன்னர் ஒரு கள்வன், அரசன் வாயிலில் தூதுவன் போன்று நடித்து, பொழுது சாய்ந்ததும், பெண்வேடம் தரித்து, யாவரும் மயங்காவண்ணம், அரண்மனைப் பள்ளி யறையை யண்டி, அங்கு யாருமில்லா திருத்தலைக் கண்டு, அதனுள்ளே புகுந்தான். அவ்வமளியில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த அரசனது மார்பிலிருந்த நவரத்தினம் பதித்த ஒளிமிக்க பதக்கத்தைக் கழற்றி எடுக்கும்போது, அரசன் சற்றே கண்விழித்தான். உடனே தன் உடைவாளைக் கீழே வைத்திருந்த உறையிலிருந்து நீக்கினான். அக்கள்வன் தானும், அவ்வுறையைத் தன் கையில் எடுத்துக்கொண்டான். அரசன் தன் உடைவாளை வீசி, எதிரில் நிற்கின்றவனின் உடலில் செலுத்தும் போதெல்லாம், கள்வன் தன் கையிலிருந்த உறையின் உதவியால் அவ்வாளை அதனுள் செலுத்திக் கலக்கத்தை உண்டாக்கினான். பிறகு அரசன்

அவனுடன் மற்போர் தொடங்கினன். அக்கள்வன் அவ்விடத்தில் நின்ற ஒரு தூணைக்காட்டி, ஒரு மந்திர வித்தையால் மறைந்து, சிறிது நேரத்தில் வெளியேறி விட்டான்.

இச்சொற்களைக் கேட்டுக்கொண்டிருந்த காவலாளர்களில் மற்றொருவனும் கள்வர்களைப் பற்றிக் கூறத் தொடங்கினன்: "ஒருசமயம் என் முன்னர் ஒரு கள்வன் என் பொருளை அபகரிக்க வந்து நின்றான். என்னிடம் வாள் இருந்ததை முன்னர் அவன் அறிந்தானில்லை. என் வாளை நான் உருவினேன். அவ்வாளை எம்மாயத்தாலோ அக்கள்வன் கவர்ந்தான். கவர்ந்த வாளுடன் போனவன் போனவனே! திரும்பி வரவே இல்லை. ஆகையால் இக்கள்வர்களை நாம் விட்டுவிடுதல் கூடாது. அரசன் ஆணையிட்டிருக்கின்றான். அவன் ஆணையின்படி, நீங்கள் செய்யவேண்டுவதைத் துணிக. இல்லையேல், அரச கோபத்துக்கும், தண்டனைக்கும் நீங்கள் உட்படுவது உறுதி" என்று கூற்றினும் கொடிய அம்மறவன் அவர்களைப் பயமுறுத்தினன்.

இவ்வுரைகளைக் கேட்ட காவலாளர்களிலே கல்லாக் களிமகனொருவன், தன் வாளைக் கோவலன் உடம்பில் செலுத்தவே, அவ்வுடல் இருதுண்டாகக் கீழே விழுந்தது. வெட்டுண்ட உடலினின்றும் குருதி ஆறாகப் பரந்தது. நிலமகளும் இக்கொடுஞ் செயலைக் காணப்பெறாது, கண்ணீர் வடித்து நின்றாள். கோவலன் தன் ஊழ்வினையினால் ஏற்பட்ட முடிவினை ஏற்று, மண்ணிலே மடிந்தழிந்தான். அக்கொடிய கொலை

கோலைக்களம்

காரணமாகப் பாண்டிய நாட்டில், மன்னனது வளையாத செங்கோலும் வளைந்தது.

"மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை; அஃதின்றேல்
மன்னுவாம் மன்னர்க்கு ஒளி." —திருக்குறள்

14. குரவைக் கூத்தும் கண்ணகி துயரமும்

கயற்கொடி இமயத்தில் நாட்டியவனும், மற்றைய முடிமன்னர்களும், ஏனைய குறுநிலச் சிற்றரசர்களும் தன்னடி வணங்கி ஏவல் கேட்கப்பெற்ற மாலை வெண்குடை தாங்கிய பாரரசாண்ட பாண்டியன் அரண்மனையில் காலை முரசம் முழங்கியது.

காலை முரசம் அதிர்தல்

இப்பேரொலி முழக்கத்தைக் கேட்டு எழுந்து, தன் வேலைகளை முடித்துக் கொண்டு, அன்று அரண்மனைக்கு நெய் அளந்து கொடுக்கும் முறையாதலால், தன் மகள் ஐயையுடன், தயிர் கடையும் மத்தும் கயிறும் கொண்டு, வெண்ணெய் எடுக்க ஆயத்தமானாள் மாதரி என்ற ஆயர்குல நங்கை.

தயிர்த்தாழியைத் திறந்தாள். அதில் பிரையிட்ட பால் உறையாதிருந்தது. தொழுவத்திற் சென்று பார்க்க, கன்றுகள் கண்களிலிருந்து நீர் சொரிந்த வண்ணம் நின்று கொண்டிருந்தன. பசுக்களின் கழுத்தில் கட்டியிருந்த மணிகள் அறுந்து விழுந்தன. ஆவினங்கள் பயத்தால் நடுங்குவது போல் மெய்சிலிர்த்து நின்றன; ஆட்டுக்குட்டிகள் ஆடாமல் ஒரே நிலையில் கிடந்தன. முதனாள் எடுத்த வெண்ணெயையாவது நெய்யாக்கித் தருவோம் என்று அதை அடுப்பில் வைக்க, அது உருகாமல்

உற்பாதங்கள்

அப்படியே கெட்டியாக இருந்தது. இவற்றை யெல்லாம் கண்ணுற்ற முதுமாமகள் மாதரி, ஏதோ ஒருபெருந்துன்பம் நேரப்போகிறதென்று சொல்லி, மகளை நோக்கி, "நீ உள்ளங் கலங்காதே; மனத்தில் மயக்கங் கொள்ளாதே; இந்நில மாதர்க் கணியாக விளங்கும் கண்ணகி தானும் காணுமாறு, கண்ணனும், பலராமனும், நப்பின்னையும், அன்று ஏருமன்றத்தின்கண் விளையாடிய குரவைக்கூத்தை இன்று ஆடுவோமாக! இதனால் பசுக்களும் கன்றுகளும் துன்பம் ஒழியப் பெற்றன வாகும்" என்று ஆய்ச்சியரைக் குரவைக்கு ஆயத்தமாகுமாறு கூறினாள்.

குரவைக் கூத்து

அவ்வாயர் பாடியில் இருந்த மாதர்களெல்லாம் ஒருங்குகூடி ஐயை தலைமை வகிக்க, ஆய்ச்சியர் குரவைக் கூத்தாடினார்கள். தங்கள் வழிபடு தெய்வமாகிய திருமாலை வணங்கி, குழுவில் நின்ற எழுவரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு ஏழு இசைகளின் பெயராகிய குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என மாதரி பெயரிட்டு இசை பாடும்படி ஏவினாள். அவர்களும்

"மூவுலகும் ஈரடியால் முறை நிரம்பா வகைமுடியத்
தாவிய சேவடி சேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவி என்ன செவியே!
திருமால் சீர் கேளாத செவி என்ன செவியே!"

"பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே!"

"மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரண முழங்கப் பஞ்சவர்க்குத்தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராயணா வென்னா நாவென்ன நாவே!"

—ஆய்ச்சி-படர்க்கைப் பரவல்

என்று பலவாறு இன்னிசையோடு ஆடிப்பாடித் தெய்வத்தை வழிபடுவாராயினர். ஆவினங்கள் பெருக என்றும், மன்னன் முரசம் என்றும் வெற்றியுடன் ஒலிப்பதாக என்றும் தெய்வத்தை வேண்டிக் குரவைக் கூத்தை முடித்தனர்.

கண்ணகி கவலை

கூத்து முடிந்ததும், மாதரி, கையில் பூவும் புகையும், புனைசாந்தும் கண்ணியுங் கொண்டு, வையைக் கரையில் வீற்றிருந்த திருமாலை வழிபட, ஆற்றில் நீராடப் போனாள். அத்துறையில் நெஞ்சு திடுக்கிடும் ஒரு பயங்கரச் செய்தி நீராடும் மாந்தர் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டாள். இதயம் துடிக்க, கண்ணகியிருந்த இருப்பிடத்துக்கு விரைந்து வந்து, அவளிடம் ஒன்றும் சொல்ல நாவெழாது, ஏதும் சொல்ல அறியாது நின்றாள். பிறகு புறத்தே ஒருசிறிது ஒதுங்கி, அங்கு நின்றிருந்த தோழியிடம் கண்ணகியைக் குறிப்பால் காட்டி, நடந்த செய்தியையும், கோவலன் கொலையுண்டதையும் உணர்த்தினாள். இஃது கண்ணகிக்கு ஐயப்பாட்டை உண்டாக்கியதால், அத்தோழியை நோக்கி, "இன்னும் மதுரைக்குச் சென்ற என் காதலன் திரும்பி வரவில்லை; என் நெஞ்சினின்று ஊதுகின்ற துருத்திவாயிலும் விரைவாகப் பெரு மூச்சு வருகிறது. அவள் உன்னிடத்தில் என் கணவனைப் பற்றி யாதாயினும் கூறினளோ?

"தஞ்சமோ தோழீ தலைவன்வரக் காணேன்
வஞ்சமோ உண்டு மயங்கும் என் நெஞ்சன்றே;
வஞ்சமோ உண்டு மயங்கும் என் நெஞ்சாயின்
எஞ்சலார் சொன்ன தெவன் வாழியோ தோழி"
—துன்ப-20-23

இதில் ஏதோ வஞ்சம் நடந்திருக்கிறது; என் நெஞ்சம் நிலை தடுமாறுகிறது! என் தோழி! இவள் குறிப்பிட்டது யாதோ எனக்கு உரைக்கமாட்டாயா?" என்று கண்ணகி பலவாறு கேட்டாள்.

கண்ணகி அவ்வாறு இரங்கி கேட்டதைக் கண்ட அத்தோழி,

"அரசுறை கோயில் அணியார் ஞெகிழம்
கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே
கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே
குரைகழல் மாக்கள் கொலை குறித்தனரே"
—துன்ப-25-28

என்று கோவலன் மதுரையில் சிலம்பு காரணமாகக் கொலையுண்ட செய்தியைச் சிறிது சிறிதாகத் தெரிவித்தாள். அந்தோ! கண்ணகி இத்துக்கச் செய்தியை எங்ஙனம் சகிப்பாள்!

கோவலன் வெட்டுண்டதைக் கண்ணகி அறிதல்

பொங்கி எழுந்தாள்; விழுந்தாள்; செங்கண் சிவந்தாள்; அலறி அழுதாள்; தங்கணவன் எங்கே எங்கே என்று ஏங்கி மாழ்கினாள்; கையால் முகத்தில் அறைந்துகொண்டாள்! "என் கணவன் செய்த குற்றம்தான் யாது? மன்னவன்பால் ஏதோ தவறு நிகழ்ந்துள்ளது; தவறிழைத்தவன்—பிழை செய்தவன்—மன்னவனே!"

"தம்முறு பெருங்கணவன் தழலெரி யகமூழ்கக்
கைம்மை கூர் துறை மூழ்குங் கவலைய மகளிரைப் போல்
செம்மையின் இகந்தகோல் தென்னவன் தவறிழைப்ப
இம்மையும் இசையொரீஇ இனைந்தேங்கி அழிவலோ"
—துன்ப-42-45

என்று பலவாறு மனம் வெதும்பி, அங்குக் கூடியிருந்த ஆய்ச்சியர்களைப் பார்த்து, "ஏ! ஆயர் குல மக்களே! நீங்களே சொல்லுங்கள்! ஏ! ஆழிசூழ் உலகத்தில் நடப்பதெல்லாம் காணவல்ல கடுங் கதிரைப் பரப்பி நிற்குங் கதிரவனே! நீயே சொல்!"

"காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என்கணவன்?"
—துன்ப–51

என்று கேட்டு அழுதாள்.

உடனே ஒரு அசரீரி கேட்டது.

"கள்வனோ அல்லன் கருங் கயற்கண் மாதராய்
ஒள்ளெரி யுண்ணுமிவ் வூர் என்றது ஒருகுரல்"
—துன்ப–52–53

அசரீரி வாக்கு

"நின் கணவன் கள்வன் அல்லன்; கள்வன் என்று கூறிய இவ்வூர் எரியால் அழிந்துபடும்" என்ற அக்குரல் யாவரும் கேட்க ஒலித்தது.

15. கண்ணகி புறப்பாடு

கணவனைக் காணப் புறப்பாடு

"நின்கணவன் கள்வன் அல்லன்" என்று அசரீரி கூறியதைக் கேட்ட கண்ணகி மனந் தெளியப் பெற்று, தன் காலில் அணிந்த மற்றொரு சிலம்பைக் கையிலேந்தி, மதுரையின் அகநகரை நோக்கி விரைந்தாள்.

செல்லும்பொழுது அந்நகர் மகளிரை விளித்து, "முறையில்லாத அரசன் ஆளும் ஊரில் வாழ்கின்ற பத்தினிப் பெண்டிர்காள்! படாத துயரத்தை நான் அடைந்தேன்! என் கணவன் கள்வன் அல்லன்; காற்சிலம்பை விற்கச் சென்ற என் கணவனைக் கொன்று விட்டார்களே இம்மதுரை வாசிகள்!

என் காதல் கணவனைக் காண்பேனோ இனி? அவன் வாயிற்சொல் ஏதானும் கேட்பனோ? எவ்வாறாயினும், என் காதல் கணவனை உயிரோடு காண்பேன்; அவன் கனிந்த சொற்களை என் காதால் கேட்பேன்"; அவ்விதம்

கண்ணகி வஞ்சினம் உரைத்தல்

"தீதறு நல்லுரை கேளா தொழிவேனேல்
நோதக்க செய்தாள்என்று எம் எள்ளல்"
—ஊர்சூழ்–13–14

என்று வஞ்சினம் கூறி அலறினாள்.

இவ்வாறு அல்லலுற்று ஆற்றாது அழுத கண்ணகியைக் கண்டு, மதுரைவாசிகள் எல்லாரும் மனமிரங்கி, என்ன தீங்கு நேரப்போகிறதோ என்று பயந்து நடுங்கினார்கள். அவர்களில் சிலர், கண்ணகியை உடன் அழைத்துச் சென்று அவள் கணவன் கோவலன் இறந்துகிடந்த இடத்தைக் காட்டினார்கள்.

உடம்பிலிருந்து உதிரம் ஆறாகப்பெருக, பூமியில் கிடக்கும் தன் கணவனைக் கண்டாள் கண்ணகி. தான் அவனைக் கண்டும், தன்னை அவன் இன்னாள் எனப் புரிந்துகொள்ளாத நிலைமையைக் குறித்து அழுதாள்; கண்ணீர் பெருக்கினாள்; பூங்கொடிபோலத் துவண்டு நின்றாள். துன்பம் மிகுந்த இக்காட்சியைக் காணப் பொறாத ஆதவனும் மேற்கில் மறைந்துகொண்டான். "கண்ணின் மணியனையீர்! இந்தக் கோலங் காண்பதற்காகத் தானோ புகார் நகரிலிருந்து உம்முடன் இங்குப் புறப்பட்டேன்? ஐயோ! உம்முடைய அருமையான உடல் இப்படிப் புழுதியில் கிடக்கக் காணும்படியான துன்பம் எனக்கு ஏன் வந்ததோ? அறியேனே!"

கணவனைக் கண்ட கண்ணகி புலம்பல்

"பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்
கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறாஉம்
பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்?"

"சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்
ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறாஉம்
சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்?"

"தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல்
வைவாளில் தப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல்?"

—ஊர்சூழ்—51–59

என்று பலவாறு கூறி அழுதவண்ணமாக அவன் பெரும் மார்பைத் தழுவிக்கொண்டாள். உடனே கோவலன் உயிர் பெற்றெழுந்தான். "நிறைமதி போன்ற நின் திருமுகம் கன்றியதே" எனக் கண்ணீரைக் கைகளால் துடைக்கக் கண்ணகியும், அவன் பாதங்களைத் தன் துணைக்கரங்களால் பிடித்துத் தொழுதாள். இவ்வுலகைவிட்டு நீங்கித் துறக்கம் புக எண்ணி எழுந்தவன், கண்ணகியை விளித்து, "அழகிய மலர்போலும் மைபூசிய கண்களையுடையவளே! நீ இங்கிருக்க" என்று சொல்லித் தான் தெய்வ உலகத்தை யடைந்தான்.

"ஐயகோ! இது மாயந்தானோ? மருளோ? அல்லது தெய்வமோ? நான் இனி எங்குப் போய் அலைவேன்?"

"காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்
தீ வேந்தன் தனைக்கண்டித் திறங்கேட்பல் யான்"

—ஊர்சூழ்—70–71

என்று கூறி நின்றாள்; நினைந்தாள்; நெடுங்கண்கள் நீர்சோர அலறினாள். அங்ஙனம் அழுத கண்ணீருடனே, கணவனை இழந்த கண்ணகி, அரசன் அரண்மனைவாயிலை நோக்கி நடந்தாள்.

16. மன்னனிடம் வழக்குரைத்த கண்ணகி

கோப் பெருந்தேவியின் தீக் கனவு

கண்ணகி, தன் ஒற்றைக் காற்சிலம்பைக் கையிலேந்தி, அரசன் மாளிகையை நோக்கி விரைந்து செல்லும் தருணம், அரசனது அரண்மனையில், கோப்பெருந்தேவி ஒரு பெருந் தீக்கனவைக் கண்டாள். அரசனது செங்கோலும், வெண்குடையும், செறிநிலத்து முறிந்து **வீழ்வது** போலவும், கோமான் மாளிகையின் வாயிலில் கட்டிய அசையா மணி, நடுங்கி, ஊரார் உள்ளத்தையே நடுங்கச் செய்ததுபோலவும், வானம் முழுவதிலும் பகலிலேயே விண்மீன்கள் உதிர்வனபோலவும் பல தீய கனவுகள் கண்டாள். அத்தீய கனவால் பெருந்துன்பம் நேரிடும் என்று கோப்பெருந்தேவி உறுதியாக நினைத்தாள். அரசனிடம் சென்று தான் கண்ட கனவை உரைத்துவரத் தோழியருடன் புறப்பட்டாள். அப்பொழுது அரசியைச் சூழ்ந்த தோழியர்,

“ஆடி யேந்தினர் கலனேந்தினர்
அவிர்ந்து விளங்கும் அணியிழையினர்
கோடி யேந்தினர் பட்டேந்தினர்
கொழுந் திரையலின் செப்பேந்தினர்”
“வண்ணமேந்தினர், சுண்ணமேந்தினர்
மான் மதத்தின் சாந்தேந்தினர்
கண்ணியேந்தினர் பிணையலேந்தினர்
கவரியேந்தினர் தூபமேந்தினர்” —வழக்கு–13–16

இங்ஙனமாகப் பற்பல மங்கலப் பொருள்களை ஏந்தினராகி, "பாண்டியன் பெருந்தேவி வாழ்க!" என்று வாழ்த்துரைகூறிச் சென்றனர். அரசன் தேவி சிங்காதனத்தருகிற் சென்று அமர்ந்து, தான் கண்ட கனவுபற்றிச் சொல்லிக்கொண்டிருந்தாள். அச்சமயம் அரசனும் தன் தேவி சொல்வதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான்.

கண்ணகி தன் வருகையை அறிவித்தல்

இஃது இவ்வாறிருக்க, அரண்மனைவாயிலில் கற்புடை மங்கை கண்ணகி நின்று, வாயில் காப் போனை நோக்கி,

"திருவீழ் மார்பின் தென்னவன் வாயில் காப்போனே! இறைமுறை பிழைத்தோன் வாயில் காப்போனே!

"இணையரிச் சிலம்பொன்று ஏந்தியகையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளே"

—வழக்கு–27–28

சீக்கிரம் சென்று அறிவிப்பாய் நீ!" என்று கதறி நின்றாள்.

இவ்வாறு கூறிநின்ற கண்ணகியின் தோற்றம் கண்டு நடுங்கிய காவலாளன் அரசன் திருமுன் சென்று, "வேந்த! நெடுங்காலம் வாழ்வாயாக! செழிய வாழி! தென்னவா வாழி!" எனப் பலவாறு முறைமை யாகப் பாண்டியனை வாழ்த்தி, கற்புடையாள் வரவைக் காவலனுக்கு அறிவித்தான்.

அரசனும் அச்செய்தி அறிந்து, "அவள் இங்கே வரட்டும்" என உத்தரவிட்டான். மறு

அரசன் கேட்ட வினா

கணத்தில் அரசன் எதிரே கற்பெனும் ஓர் உருவம் கடுநெருப்புண்டு எரிப் பதுபோல் சீற்றம் பொங்கவந்து நின்றது. அவ்வுருவத்தின் மெய் முழுவதும்

தூசி படிந்து, மாசுற்றிருந்தது; கையிலே ஒற்றைச் சிலம்பு காணப்பட்டது; தலைவிரிகோலமாகி, கூந்தல் இரத்தத்திலே தோயப்பெற்றிருந்தது; கண்களினின்றும் அருவி நீர்போலக் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது. இக்கொடிய கோலத்தைக் கண்டு உள்ளம் வருந்தி, அவ்வுருவத்தை நோக்கி, அரசன்,

"யாரையோ நீ மடக் கொடி யோய்?" —வழக்கு-49

"நீ யாரம்மா" என்று கேட்டான்.

அதற்குக் கண்ணகி, "தேராமன்ன! யான் சொல்வதைக் கேட்பாயாக! எள்ளுக்காய் பிளந்தாற் போல் நடுநிலைமையில் நின்று, புருவுக்கு அபயம் கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியும், கன்றை யிழந்து கதறிய பசுவின் கதறலைப் பொறுக்க மாட்டாது, அறத்தையே பெரிதாக மதித்து, தன் ஒரே மைந்தனென்பதையும் பாராமல், அவன்மீது தேர்ச்சக்கரத்தைச் செலுத்திய மனுச் சோழனும் ஆண்ட புகழ் பெற்ற புகார்ப் பதியே என் ஊராகும்.

கண்ணகி கொடுத்த பதில்

"வாயிற் கடை மணி நடுநா நடுங்க
ஆவின் கடை மணி உகுநீர் நெஞ்சு சுடத்தான் தன்
அரும் பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப் புகாரென்பதியே" —வழக்கு-53-56

அவ்வூரில், ஏசாச் சிறப்பின் இசை விளங்கு பெருங்குடியில் தோன்றிய மாசாத்துவானுக்கு மகனாய்த் தோன்றி, வாழ்க்கையை மேலிட்டு, பொற் சிலம்பை விற்றுவர, ஊழ்வினைப் பயனால் உன் நகர் வந்து, இங்குக் கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி நான். கண்ணகி என்பது என் பெயர்" என்று கூறினாள்.

இதைக் கேட்ட அரசன், "பெண் அணங்கே! கள்வனைக் கொல்வது கொடுங்கோலன்று; அது நீதியின் பாற்பட்ட தருமநெறியேயாகும்" என்றான். இச்சொற்கள் தீயிலிட்ட நெய்போல், கண்ணகியின் கோபத்தை இன்னும் அதிகமாக்கிற்று. "அரசே! என் கணவன் கள்வன் அல்லன் என்பதைச் சாட்சியோடு காட்டவே இங்கு வந்தேன். என் சிலம்பின் உள்ளே பதிந்திருக்கும் மணி மாணிக்கமே" என்றாள்.

கண்ணகி தன் சிலம்பை உடைத்தல்

அரசன், தன் தேவியின் சிலம்பில் பதித்திருந்தது முத்து என்று கூறி, கோவலன் கையினின்றும் எடுத்து வந்த சிலம்பைக் கண்ணகியின் முன்னே கை நடுங்க வைத்தான். வைத்ததும் அக்காற்சிலம்பைக் கண்ணகி உடைத்தாள். உடைத்தவுடன், அதனுள் பொதிந்து கிடந்த மாணிக்கப் பரல் மன்னவன் வாயில் தெறித்தது. மன்னவன் அம்மாணிக்கத்தைக் கண்டான். கண்ட அப்பொழுதே அவன் வெண் குடை தாழ்ந்தது; செங்கோல் தளர்ந்தது.

"தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது; கெடுகஎன் ஆயுள்"
—வழக்கு–73–77

மன்னன் மாளுதல்

"ஐயகோ! ஒரு பொன்செய் தட்டானின் சொல்லைக் கேட்டு, ஆராயாது கொலை செய்யுமாறு ஏவிய நானோ அரசன்? கோவலன் கள்வன் அல்லன்; நானே அவன் உயிரைக் கவர்ந்த கள்வன்! இது காறும் நீதி தவறாத என் நாட்டில், இன்று என்னால்

நீதி தவறி விட்டது; என் ஆயுள் இதோடு முடிந்துபோகட்டும்" என்று சொல்லி, அரசுமுறை தவறிய மன்னன் அரியாசனத்தி லிருந்து மயங்கிக் கீழே விழுந்து உயிரைவிட்டான்.

மன்னன் தேவியும் உயிர் நீத்தல்

அரசன் ஆருயிர் நீத்ததைக் கண்ட கோப்பெருந்தேவி குடல் நடுக்கமுற்று, "தாய் தந்தையரை இழந்தவர்க்கு அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டுதல்கூடும்; ஆயின் கணவனை இழந்தவர்க்கு அங்ஙனம் சொல்லிக் காட்டக் கூடியவர் எவரு மில்லை" என்று தன் கணவன் பாதங்களைக் கைகளால் பற்றிக்கொண்டு, வணங்கித் தானும் தன் கணவனைப் பின்பற்றி, உடன் உயிர் நீத்தாள்.

17. வஞ்சின மாலையும் மதுரை அழிவும்

அவையில் நடுங்கி வீழ்ந்த கோவேந்தன் தேவியை நோக்கிக் கண்ணகி, "யான் ஒன்றுந் தெரிந்திலேன். ஆயினும்,

> "முற்பகல் செய்தான் பிறன் கேடு தன்கேடு
> பிற்பகற் காண்குறூஉம் பெற்றிய காண்"
>
> —வஞ்சின—2—3

'முற்பகல் செய்யின், பிற்பகல் விளையும்' என்னும் மூதுரை பொய்க்குமோ?

> "பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா
> பிற்பகல் தாமே வரும்"
>
> —திருக்குறள்

என்ற வள்ளுவர் வாய்மொழியும் வெற்றுரை யாமோ? யானோ கற்பிற் சிறந்த பலர் பிறந்து வாழ்ந்து வரும் காவிரிப்பூம் பட்டினத்துப் பெண்மணி. என்

நாட்டுக் கற்புடை. மாந்தரைப்பற்றிச் சொல்கிறேன் சிறிது கேட்பாயாக!" என்று சில செய்திகளைக் கூறத் தொடங்கினாள்.

கண்ணகியின் கட்டுரை

"வன்னிமரமும், மடைப்பள்ளியுஞ் சான்ருக முன் நிறுத்திக் காட்டினள் ஒருத்தி. மன்னன் கரிகால் வளவன் மகள் ஆதிமந்தி என்பவள், ஆற்ரோடு போய தன் கணவன் பின்னே ஓடி, அவனைத் தன் கற்பின் ஆற்றலால் தன்னிடத்தே திரும்பவரப் பெற்ருள். இன்னும், மாண்ட கணவனை மீண்டும் தன் இருப்பிடம் அழைத்து மாண் பெய்திய மங்கை இன்னொருத்தி. திரவியம் தேடக் கடல்மீது சென்ற தன் காதலன் வருமளவும் கல்லாய்ச் சமைந்து நின்ற கற்புடைக் காரிகை மற்ருெருத்தி. தன் சக்களத்தி மகன் கிணற்றில் விழுவதைக் கண்ட ஒரு பெண், தன் மகனையும் கிணற்றில் விழவிட்டு, கிணற்றிலிருந்து இரு குழந்தைகளையும் உயிருடன் வரப்பெற்றவள் இன்னுமொருத்தி.

பத்தினிப் பெண்டிர் சிலர் வரலாறு

"இதைப்போன்ற கற்பிற் சிறந்த பெண் அணங்குகள் பலர் என் நாட்டில் வாழ்ந்ததுண்டு. அத்தகைய சிறப்புற்ற பத்தினிப் பெண்டிரொடு ஒத்த கற்புடையாள் யானுகில், இவ்வரசனேடு அல்லாது, இம்மாட மாமதுரையும் தீயினல் அழியச் செய்வேனுக!"

கண்ணகி கூறிய வஞ்சினம்

"மட்டார் குழலார் பிறந்த பதிப் பிறந்தேன்
பட்டாங்கி யானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையும்"

—வஞ்சின–35–37

என்று வஞ்சினம் உரைத்துக்கொண்டே வெளியேறினாள் கண்ணகி.

மற்றும், "நான் மாடக் கூடலில் வாழும் கற்புடை மகளிரே! மைந்தர்களே! வானக் கடவுளர்களே! மாதவத்தோர்களே! கேட்பீர்களாக! யான் ஒரு சிறிதும் தவறில்லாதவள். இவ்வாறிருக்க, என் காதலன் தன்னைக் கள்வன் என்று கூறிய இம் மதுரை மாநகர் நெருப்பில் எரிந்திடுக!" என்று தனது இடது மார்பைத் திருகி விண்ணகத்தே எறிந்தாள்.

அப்பொழுது அக்கினித் தெய்வம் அப் பத்தினித் தெய்வத்தின் முன்தோன்றி, "உனக்குத் தீங்கிழைத்த நாளில் இவ்வூரைத் தீயால் அழிக்க முன்னமே யான் ஓர் ஏவல் பெற்றுளேன்; நான் அவ்வாறு அழிக்கும் போது, காப்பாற்றப்பட வேண்டியவர் எவரேனும் நுங்கருத்துக்கு இசைந்தனர் உளரோ? இருப்பின் தெரிவிப்பாயாக" என்று சொல்லி, வணங்கி நின்றது.

அக்கினிக்கும் ஓர் ஆணை

அதற்குக் கற்புத்தெய்வமாகிய கண்ணகி,

"பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர்,
மூத்தோர், குழவி எனும் இவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தோர் பக்கமே சேர்க" —வஞ்சின—53–55

என்று அக்கினி தேவதைக்கு ஆணையிட்டு அகன்றாள்.

இவ்வாறு கூறிமுடித்த தருணமே மதுரைமாநகர் எங்கும் புகைமண்டலம் சூழ்ந்தது. மதுரையைக் காக்கிற வருணபூதங்கள் நான்கும், அரசன் செங்கோல் தளரும் என்ற செய்தியை

முன்னமே அறிந்தன வாகலின், அவைகள் அந் நகரை விட்டகன்றன. அமைச்சர்கள் யாவரும் சித்திரத்து ஓவியம்போல் அசைவற்று நின்றனர். நால்வகை வருணத்தாரும் நடுக்கமுற்றுக் கலங்கினர். கண்ணகியின் ஆணைப்படியே தீயானது அறவோர் வாழிடங்களை அழிக்காமல், தீயோர் வாழிடங் களையே பற்றிப் பெரும்புகை கக்கியது. கூல வாணிகர் வீதியும், கொடித்தேர் படர்ந்த வீதியும், கொடுமையுற்று அழிந்தன. மதவெங்களிறும், மடப்பிடி நிரைகளும், விரைந்தோடும் குதிரைகளும் மதில் புறத்துக்கப்பால் ஓடலாயின. மைத்தடங் கண்களைக்கொண்ட பெண்டிர், தங்கணவர்களோடும், குழந்தைகளோடும் நிலைதடுமாறி நின்றனர். பத்தினிப் பெண்டிர் தத்தம் மனம் மகிழ்ந்தனர். பெருமனைக்கிழத்தியர் வெளியே வந்து, "தன் மார்பில் ஆரத்தை யணிந்த கணவனையிழந்து, தெளிந்தறியுந் தன்மையிலாப் பாண்டியனைச் சிலம்பால் வென்று, நாம் இருக்கும் இந்நகரையும் கொடுந்தீயால் அழித்து நிற்கும் இம்மங்கை, யார் மகளோ?"

மதுரைநகர் எரியால் அழிதல்

"எந்நாட் டாள் கொல்? யார் மகள் கொல்லோ?"

—அழற்–143

என்று புகழ்ந்து வியக்கலுற்றனர்.

இத்தீ விபத்தால், திருக்கோயில்களில் ஏற்றப் பட்ட திருவிளக்குகள் தங்கள் இயற்கை ஒளியை இழந்தன. திருவிழாக்களும் ஒழிந்தன. வேத மோதுதல் தவிர்ந்தது; மனைகளிலும் விளக்குகள் எரிய வில்லை. முரசிேெலியும் முடங்கியது. எங்கும் அந்தகாரம்! இருள்! சீவனற்ற தோற்றம்

ஆ! கொடுமை! கொடுமை! அம்மதுரைமா நகரம் அடைந்த நிலை நினைக்குந்தரமன்று! மதுராபுரி அடியோடு அழிந்தே விட்டது!

நகரின்கண் காதலனை இழந்த வீரபத்தினி துன்பத்துடன் உள்ளம் வெந்து, பெருமூச் செறிந்து, மறுகுகள் தோறும் சுற்றி வரலானாள்.

வீரபத்தினியின் நிலை

சிலபோது கவலையில் தோய்ந்து நிற்பாள்; சிலபோது இயங்குவாள்; சிலபோது மயங்குவாள். இத்தகைய வீரபத்தினி முன்னர், கொடும் தழலின் வெம்மையைப் பொறுக்கமாட்டாமல், மதுராபதி என்னும் தெய்வமங்கை வந்து தோன்றினாள்.

18. மதுரை மாதெய்வமும் வீரபத்தினியும்

வீரபத்தினி முன்னர் வந்து தோன்றிய மதுராபுரித் தெய்வம் கண்ணகியை நோக்கி, "வீரபத்தினியே! உனக்கு ஒன்று கூறுவதற்கு ஆவலுள்ளவளா யிருக்கின்றேன்" என்றது. கண்ணகி அத் தெய்வத்தை நோக்கி, "நீ யார்? என் பின்னே நிழலைப்போல் தொடர்ந்து வருவதன் காரணம் என்ன? எனக்கு நேர்ந்த கொடுந்துயரினை நீ யறிவாயோ?" என்று கேட்டாள்.

வீரபத்தினிக்கு மதுராபதி மன்னர் திறம் உரைத்தல்

அத்தெய்வம் வீரமா பத்தினிக்குப் பின் வருமாறு பதிலுரைத்தது.

"நின் அருமைக் கணவன் இறந்ததைக்குறித்து மிகுந்த கவலையடைகின்றேன். மதுராபதி என்பது என் பெயர். இந்நகர் மன்னர்கள் இதுகாறும்

மறைநாவோசை அல்லது மணிநாவோசை கேட்டதில்லை. பாண்டியர்கள் செங்கோல் வழு வாதவர்களே. முன்பு ஒருநாள் கீரந்தை என்னும் மறையோன் 'அரசன் செங்கோல் தன் மனைவியைக் காக்கும்' என்று அவளுக்குச் சொல்லி வெளியூர் சென்றுவிட்டான். அரசனும் அவன் மனைவிக்கு யாதொரு துன்பமும் நேராத வண்ணம் பாதுகாத்து வந்தான். சிறிது நாள் சென்றதும் மறையவன் தன் சொந்த நாட்டையடைந்தான். அன்றிரவு அரசன் நகர சோதனையின் பொருட்டு அத்தெருவில் வர, அவ்வீட்டில் பேசும் ஒலி கேட்கவே, அரசன் கதவைத் தட்டினான். உள்ளிருந்த மறையோன் 'யார் அது?' எனக் கேட்டான். அரசன் அப்படிக் கேட்டவன் மறையவனே என்று உறுதியடைந்து அகன்றான். ஆயினும், அவன் தன்மீது தப் பெண்ணம் கொள்ளாதவாறு அத்தெருவிலுள்ள வீடுகள் எல்லாவற்றின் கதவையும் தட்டிக் கொண்டே சென்றான். இதைக் காலையில் நகரமாந் தர்கள் மன்னனிடம் தெரிவித்தனர். "யாரோ என் வீட்டின் கதவை இரவில் தட்டிவிட்டுப் போனார்' என்று ஒவ்வொருவரும் சொல்லவே, 'அப்படித் தட்டிய கை இதுவே' என்று, தன் கையை வாளால் வெட்டி வீழ்த்தினான். இத்தகைய நெறி தவறா வேந்தர்களாவர் இப்பாண்டியர்.

மற்றுங் கேட்பாயாக: முன்னாள் சிங்கபுரம் என்னும் நகரத்தை வசு என்னும் ஓர் அரசன் ஆண்டுவந்தான். கபிலபுரத்தை ஆண்டுவந்த குமரனுக்கும், இந்த வசு மன்னனுக்கும் மன வேறுபாடு ஏற்பட்டு, அதன் காரணமாக ஒருவரை யொருவர் வெல்லக் கருதியும், கொல்லக் கருதியும்

இருந்தனர். அப்பொழுது சிங்கபுரத்துக் கடைத் தெருவில் வாணிகம் செய்ய நினைத்து உலாவிக் கொண்டிருந்த சங்கமன் என்பவனை ஊர்க் காவலனாகிய பரதன் என்பவன் ஒற்றன் எனப் பிடித்துச் சென்று அரசன் முன் நிறுத்தினான். அரசனும் தீரயோசியாது, அவனை வெட்டும்படி உத்திரவிட்டான். அப்பொழுது அச்சங்கமனுடைய மனைவி நீலி என்பவள் பதினான்கு நாள் ஊர்ஊராய் அலைந்து திரிந்து கடைசியில் ஒரு மலைமீது ஏறி, அதன் உச்சியினின்று தன் உயிரை மாய்த்துக்கொள்ள எண்ணினாள். மலையேறித் தன் இனிய உயிரை விடுமுன்னர், 'எனக்கும் என் கணவர்க்கும் இவ்வித இடுக்கண்களை விளைவித்தவர், மறுபிறப்பில் எம்மைப்போன்ற துயர் எய்துவார்களாக!' என்று கடுஞ் சாபமிட்டு, மலைமீதிருந்து உருண்டு விழுந்து, தன் உயிரை மாய்த்துக்கொண்டாள். அப்பரதனே இப்பிறப்பில் கோவலனாகப் பிறந்தான். தான் செய்த கொடுவினைக்கு இப்பிறப்பில் தன்னையே பலியாக்கிக் கொண்டான்.

தீவினை நேர்ந்த காரணம்

"உம்மை வினைவந்து உருத்த காலைச்
செம்மையி லோர்க்குச் செய்தவம் உதவாது"

—கட்டுரை-171-172

என்பது ஆன்றோர் வாக்கன்றோ? வீரபத்தினியாகிய நீயும் இன்றையிலிருந்து பதினான்காம் நாள் பகலவன் மறையும் வேளையில் தெய்வ வடிவம் பெற்று விளங்கும் நின் கணவனொடு தேவர்கள் எதிர் கொள்ள வானுலகம் புகுவாய்" என்று உரைத்து அத்தெய்வம் மறைந்துவிட்டது.

வீரபத்தினியும்,

"கருத்துறு கணவர் கண்டபின் அல்லது
இருத்தலும் இல்லேன் நிற்றலும் இலனென"
—கட்டுரை–179–180

ஓரிடத்திலும் நில்லாதவளாகி, கொற்றவை கோயிலை யடைந்து, தன் வளைகளைக் கழற்றி, உடைத்தெறிந்து விட்டு,

"கீழ்த்திசை வாயிற் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கென"
—கட்டுரை–182–183

என்று கூறிக்கொண்டே, மதுரைமாநகரின் மேற்றிசைவாயில் வழியாக வெளியேறி, வையை யாற்றின் கரை வழியாகவே, நெடுகச் சென்றாள்.

வீரபத்தினி தன் கணவனுடன் விண்ணுலகம் அடைதல்

ஊண் உறக்கம் இன்றிப் பதினான்கு நாட்கள் கழித்தாள். அப்பதினான்காம் நாள் மாலைக் காலத்தில் சேர நாட்டில் விளங்கிய திருச்செங்குன்றம் என்னும் மலைமீது ஏறி, அதன் உச்சியில் உள்ள ஒரு வேங்கை மர நிழலில் தன் கணவன் வருகையை எதிர் பார்த்திருந்தாள். அப்பொழுது,

"வாடாமாமலர் மாரி பெய்தாங்கு
அமரர்க் கரசன் தமர்வந் தேத்த"
—கட்டுரை–196–197

கற்பரசியாம் கண்ணகி, ஆகாயத்தினின்றும் இறங்கிய விமானத்தில் இருந்த கோவலன் தன்னோடு, விண்ணுலக மடைந்தாள்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" —திருக்குறள்

என்பது பொய்யா மொழிப்புலவரின் பொன்மொழி யல்லவா!

(மதுரைக் காண்டம் முற்றும்)

19. குன்றக்குறவரும் வஞ்சிமாநகரும்

குன்றக்குறவர் வீரபத்தினியைக் காணல்

திருச்செங்குன்றத்தில் வேங்கைமர நிழலில் வள்ளிபோன்ற வனப்பமைந்த அணங்கு ஒருத்தி நிற்பதைக் குறவர் பலர் கண்டனர். அவள் மனம் ஒரு நிலையில் இல்லாமல், நடுங்கித் துயருற்று இருந்தது. அவ்வருத்த முற்ற அணங்கையணுகி, அக்குன்றக் குறவர்கள் "இப்படி அல்லலுற்று நிற்கும் அணங்கு நீவிர் யாரோ?" என்று கேட்டார்கள். அவர் கேள்விக்கு, அங்கு நின்ற வீரபத்தினி,

> "மண மதுரையொடு அரசு கேடுற
> வல்வினை வந்துருத்த காலைக்
> கணவனை அங்கு இழந்து போந்த
> கடுவினையேன் யான்"
>
> —குன்ற–5–6

என்று பதில் இறுத்தாள். இப்பதிலைக் கேட்ட குறவர்கள், அவ்வணங்கை வணங்கித் தங்கள் இரு கைகளையும் கூப்பி நின்றனர். அப்பொழுது வானவர் மலர் மாரி பெய்ய, குன்றக் குறவர் கண்டு நிற்ப, அவ்வீரபத்தினி அவள் கணவன் கோவலனோடு விமானத்திலேறி விண்ணகம் சென்றாள்.

இப்புதுமைக் காட்சியினைக்கண்ட குன்றக் குறவர்கள், "இவள்போலும் நம் குலத்துக்கு ஒரு தெய்வமும் இருந்ததில்லை; ஆகையால், சிறு குடியீரே! சிறு குடியீரே! உங்களுக்கு ஒரு நல்ல

தெய்வம் வாய்த்திருக்கிறது! ஏற்றுக்கொள்ளுங்கள்!" என்று கூறி, அவ்வேங்கை மரத்து நிழலிலே ஒரு தெய்வம் அமைத்து, சிறுபறையறைவித்துக் கோடுவைத்து ஊதி, கொடுமணி அடித்துக் குறிஞ்சிப்பாக்கள் பல பாடி, பூமாரி பொழிந்து, நறுமலர் நன்கு தொடுத்து, தெய்வத்தை வணங்கி, "பெருமலை துஞ்சாது வளஞ் 'சுரக்குமாக!" என்று வீரபத்தினியை வாயார வாழ்த்தி நின்றனர்.

கண்ணகியைத் தெய்வமாகக் கொண்டாடல்

'சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே;
பாரிரும் பௌவத்தி னுள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே!" —குன்ற-8

என்று முருகனுக்குப் பாமாலை புனைந்து "வெறியாடல் தான் விரும்பு வேலன் வருக!" என்றழைத்துப் பொங்கலிட்டனர். குரவைக் கூத்து முடிந்ததும், அவர்கள் தங்கள் நாட்டு அரசனிடம் தாம் கண்ட புதுமையைப் புகலப் புறப்பட்டனர்.

சேரநாட்டு அரசனாகிய செங்குட்டுவன், மலைவளங் காணவிரும்பி, வேட்டைக்குரிய பல பொருள்களுடன் பரிவாரங்கள் சூழ, இளங்கோ வேண்மாள் என்றழைக்கப்படும் தன் பத்தினியுடன் வஞ்சிமா நகரினின்றும் புறப்பட்டான். பேராற்றங் கரையில் காணப்பட்ட மணற் குன்றிடைத் தங்கிச் சிறிது இளைப்பாறினான். அப்பொழுது குன்றக் குறவர்கள் ஆடிய ஆடலின் ஓசையும், பறையறையும் ஓசையும், யானைப் பாகரோசையும் கலந்து மன்னனுக்கு இன்பம் விளைத்தன. குன்றக் குறவர்கள், "யானை வெண்கோடும், அகிலின் தூபமும், மான்மயிர்க் கவரியும், மதுக்குடங்களும்,

தாம் கண்ட புதுமையை அரசனுக்கு அறிவித்தல்

சந்தனக்கட்டைகளும், சிந்துரக்கட்டிகளும், தெங்கின் பழமும், தேமாங் கனியும், பைங்கொடிப் படலையும், பலவின் பழங்களும், காயமும், கரும்பும், பூமலி கொடியும், அரியின் குருளையும், குரங்கின் குட்டியும், கானக் கோழியும், மடமான் மறியும், பீலி மஞ்ஞையும், தேன் மொழிக் கிள்ளைகளும்" தம் தலைமேல் தாங்கி,

"ஏழ்பிறப் படியேம் வாழ்கநின் கொற்றம்!" —காட்சி–56

என்று அரசனை வாழ்த்தி, தாங்கள் கொண்டுவந்த திறைப் பொருள்களை அரசன்முன் கொண்டு வைத்து வணங்கி நின்றனர்.

பிறகு அரசனை நோக்கி, "பேரரசே! கானக வேங்கை மரத்து நிழலில், காரிகை யொருத்தி கடுந் துயருழந்து நின்றிருந்தாள். அவள், வானவர் போற்றத் தன் கணவனோடு வானகம் சென்றதை இக்கண்களால்கண்டோம்! அவள்எந்நாட்டவளோ? யார் மகள் கொல்லோ? அறியமாட்டாதவர்கள் ஆனோம்; நின் தேசத்து மக்களாகிய நாங்கள் இத்தகைய புதுமையை இதுவரை கண்டதில்லை; கேட்டதுமில்லை" என்று அக்குன்றக் குறவர் தெரிவித்தனர்.

அவர்கள் இவ்வாறு கூறும்போது, சேரன் செங்குட்டுவன் அருகில் இருந்த சாத்தனார் என்னும் தண்டமிழாசான், அரசனைப் பார்த்து, "திண் திறல் வேந்தே! யான் சொல்கிறேன், கேட்பாயாக!" என்று, தீவினைச் சிலம்பு காரணமாக, அணங்கு போன்ற கண்ணகியின் கணவன் கொலையுண்டதும், வலம்படுதானை மன்னவன் முன்னர் சிலம்போடு சென்று கண்ணகி வழக் குரைத்ததும், பிறகு

புதுமை உரைத்த சாத்தனார்

மன்னனையும் மதுரையையும் அழித்ததும், மன்னவன் தேவி உயிர் துறந்ததும் ஆகிய பல செய்திகளையும் ஒன்றன் பின் ஒன்றாகக் கோவைப் படுத்திச் சொன்னார்.

சாத்தனார் உரைத்த செய்திகளைக் கவனமாகக் கேட்டு, அரசன்

> "வல்வினை வளைத்த கோலை மன்னவன்
> செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது"
>
> —காட்சி–98–99

என்று கூறி ஒருவாறு ஆறுதலடைந்தான். சாத்தனார்க்கு நாடு புரக்கும் தொழிலால் உண்டாகும் துன்பங்களை இயம்பி, அன்புடன் அளவளாவிப் பின் அப்புலவர் பெருமானுக்குச் சிறந்த பல பரிசில்கள் கொடுத்துப் பலவாறு உபசரித்துப் போற்றினான்.

தன் அருகில் வீற்றிருந்த தேவியைப் பார்த்து, "நாயகனுடன் உயிர்விட்ட பாண்டிமாதேவியின் கற்பையும், செயிருடன் வந்த இச்சேயிழையாகிய கண்ணகியின் கற்பையும் சீர்தூக்கி இவரில் சிறந்தோர் யாவர்?" என்று கூறுமாறு அரசன் கேட்டான். அதற்கு அரசி, "இக் கேள்விக்கு விடைபகர்வது சங்கட மான நிலைமைதான். காதலன் துன்பம் காணமாட்டாமல்—அவன் உயிர் நீத்ததும் தான் உயிர்வாழ விரும்பாமல்—தானும் உடனே இவ்வுலக வாழ்க்கையை நீத்த பாண்டியன் பெருந்தேவி பேரின்பம் அடைந்து வாழ்வாராக! ஆயினும் நம் அகல் நாடு அடைந்த இப்பத்தினிக் கடவுளைத் தகுந்தவாறு நாம் போற்றி வழிபட

கற்புத் தெய்வத்துக்கு கோவில் அமைத்தல்

வேண்டும்" என்று தன் கணவனுக்கு நயம்பட உரைத்தாள்.

அரசி இவ்வாறு உரைக்க, அரசன் தன் பக்கல் இருந்த நூலறி புலவர்களை நோக்கி, அவர்களுக்குத் தன் எண்ணத்தைக் குறிப்பால் உணர்த்தினான். அரசனது உயர்ந்த கருத்தை, கற்புத் தெய்வத்துக்கு அழியாத ஆலயம் ஏற்படுத்தும் எண்ணத்தை அறிந்து, "கற்புத் தெய்வமாம் கண்ணகிக்கு இமயத்திலாயினும், பொதியமலையிலாயினும் கற்கால் எடுக்கலாம். இமயத்தில் எடுத்த கற்காலைக் கங்கையிலும், பொதியிலில்எடுத்த கற்காலைக் காவிரிப் புனலிலும் நீராட்டல் தகுதி" என உரைத்தனர். இதைக்கேட்ட அரசன், "நல்லது, பெரும் புலவீர்! பேராற்றல் மிக்க எம்மனோர்க்குப் பொதிய மலையிலிருந்து கல் எடுத்துக் காவிரி யாற்றில் நீராட்டித் தெய்வமாக்குதல் அத்துணை சிறந்ததன்று. மறையோரும், முனிவரும் வாழும் இடமாகிய இமயமலைக்குச்சென்று கற்கால் எடுப்பதே சிறந்தது. அப்படி அவ்வரசன், கண்ணகி தெய்வத்துக்குக் கல் ஒன்று தாரானாகில், பாண்டியனை வென்று பொதியமலையில் கல்பெறுவோம்" என்று சொன்னான்.

இமயத்தில் கற்சிலை எடுத்துவர எண்ணுதல்

வில்லவன் கோதை என்னும் அமைச்சன் எழுந்து, "வேந்த! கொங்கர் செங்களத்தில் சோழனும் பாண்டியனும் தோல்வியடைந்து நீ வெற்றிமாலை பூண்டபொழுது, உலகமே உன் செயலைக்கண்டு அதிசயமுற்றது. மற்றும்,

"கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்
பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்"

—காட்சி–157–158

ஆகிய பல்வேறு நாட்டு அரசர்கள் ஆயிரம் பேர்கள் வட ஆரியரோடு சேர்ந்து தென் தமிழ் நாட்டுச் சேனையை எதிர்த்த காலத்தில், உன் திறமை யால் நீ ஒருவனுக நின்று பட்டத்து யானையைச் செலுத்திய திறமை இன்னும் என் கண்களை விட்டகல வில்லை. இத்தகைய பேராற்றல் வாய்ந்த நீ—இமிழ்கடல் வேலியைத் தமிழ் நாடாக்கிய நீ—வட நாட்டின்மீது இமயம் வரைக்கும் செல்வது பொருத்தமானதே! உன்னை எதிர்க்க வல்லவர் யாவர்? ஆதலின், அவ்வட நாட்டரசர்க் கெல்லாம் உனது விற்கொடி போட்ட ஓலைகள் அனுப்பி, நம் வரவை முன்னரே அறிவிக்க வேண்டுவது அவசியம்" என்ருன்.

வில்லவன் கோதை வேந்தன் செயலை வியத்தல்

அழும்பில் வேல் என்னும் அமைச்சன் எழுந்து, "எழுத்து மூலமாகவோ, தூதுவர் மூல மாகவோ, வட நாட்டவருக்கு நம் வரவை அறிவித்தல் அவசியமின்று. நம் வஞ்சிமா நகரில் அந்நாட்டு ஒற்றரெல்லாம் நிறைந்துள்ளார்க ளாதலால், நகர வீதிகளில் பறை யறைவிக்கச் செய்வீர்களாக" என்று சொன்ஞன்.

ஆய்ந்து தேர்ந்து, அரசன் இச்சொற்களை ஏற்று பறை யறைவிக்க உத்தரவிட்டான். அந்நகர மெங்கும், "எங்கோ வாழ்வாராக! இமய மலையில் சிலை எடுப்பதற்காக எம் மன்னன் வட நாட்டுக்குப் பெயர்கின்ருன். ஆகையால், அந்நாட்டில் வாழும் மன்னர் யாவரும் இடுதிறை எதிர் கொண்டு எம் மன்னரைக் காண வருவார்களாக! அப்படிக் காண வாரீராயின், கடலுட் புகுந்தும், மலைமீது சென்றும்,

பறை யறைவித்தல்

உமது வாழ்வைத் தொடங்குவீர்களாக! இச் சொற்களைக் கேட்காவிட்டால், துறவறம் பூண்டு வாழ்வீர்களாக!" என்று பறை யறைந்த ஓசை எங்கும் பரவியது.

பறையறைந்தபின்னர், அரசன் தன் அரியாசனத்தில் அரிபோல் அமர்ந்தான். அரசனைச் சுற்றி அமைச்சர்களும், ஆசானும், கணித நூல் வல்லார் பலரும் இனிது அமர்ந்திருந்தனர். "மன்னர் மன்னன் வாழ்க" என அன்பர்கள் வாழ்த்தினார்கள். அரசன் அவர்களை நோக்கி "வடநாட்டிலுள்ள ஆரிய மன்னராகிய கனகனும் விசயனும் தமிழரசரது போர்த் திறமையைப் புறக்கணித்து, இகழ்ச்சி தோன்றப் பேசியதாக, இங்குப் போந்த முனிவர் பலரால் அறிந்தேன். அவ்விகழ்ச்சிச் சொற்களைக் கேட்டு வாளாவிருத்தல் எம்மனோரின் புகழுக்கு ஓர் இழுக்காகும் அன்றோ? வீர பத்தினி கண்ணகிக்குக் கல் எடுத்து, அக்கல்லை அந்நாட்டு அரசர்கள் தலையில் ஏற்றி, எந்தமிழ் நாட்டுக்குக் கொண்டுவாரேனாயின், குடிகளை வெறுத்து வருந்தச் செய்யும் கொடுங்கோலனாகக் கடவேன். இது முக்காலும் உறுதி" என்று சேரன் செங்குட்டுவன் வஞ்சினம் கூறினான்.

சேரவேந்தன் வஞ்சினம் கூறல்

இவ்வாறு கூறிய அரசனை நோக்கி ஆசான் என்பவன், "நின் ஆற்றலை அவர்கள் குறை கூறவில்லை; பாண்டியனையும் சோழனையுமல்லவோ குறை கூறினதாகத் தெரிவித்தனர்! ஆதலால் சீற்றந் தணிக" எனக் கூறி அமர்ந்தான். உடனே, ஆறிரு

நல்ல முழுத்தம் இதுவே

மதியினும் கிரகநிலையுணர்த்தும் கணித நூல் பயின்று, ஐந்திரம் என்னும் வியாகரணத்தில் வல்லோனாகிய காலக்கணிதன் எழுந்திருந்தான். "வேந்த! வட நாட்டின்மீது போர் தொடுத்து, இமய மலைக்குச் செல்ல இதுவே நல்ல முழுத்தம் ஆகும்; இம் முழுத்தத்தில் புறப்பட்டால், வட நாட்டார் தம் முடியை உன் அடியில் புதைத்து நிற்பார்கள்! ஆதலால் வடதிசை இப்பொழுதே பெயர்க" எனப் போருக்கு ஆயத்தமாகிப் புறப்படும்படி கூறினான்.

> "ஞாலங் கருதினுங் கைகூடும் காலங்
> கருதி இடத்தாற் செயின்" —திருக்குறள்

என்பது வள்ளுவரின் வாய் மொழி அன்றோ? அதன்படி காலத்தையும், மேற் செல்லவேண்டிய இடத்தையும், நன்கறிந்து வேந்தன் புறப்பட ஆயத்தமானான். அரண்மனை முரசங்கள் பேரொலி செய்தன. ஐம்பெருங் குழுவும், எண்பேராயமும் கரும வினைஞரும், கணக்கியல் வினைஞரும், தரும வினைஞரும், தந்திர வினைஞரும் "மண்டிணி ஞாலம் ஆள்வோன் வாழ்க!" என்று வாழ்த்திப் பட்டத்து யானையின்மீது வாளும் வெண்குடையும் ஏற்றிப் புறநிலைக் கோட்டத்தில் பெயர்த்து வைத்து, யாவரும் அரச சபையை அடைந்தனர். அரசன் தன் தலையில் வஞ்சி மாலையைச் சூடி, சிவபெருமானைத் தன் முடிமேல் படும்படி வணங்கித் தொழுது, தன் யானைமீது யாத்திரை செல்ல ஏறினான். அப்பொழுது மாலை யணிந்து வேலை யொத்த கண்களையுடைய நாடக மகளிர் பலரும் நலம்பெற வாழ்த்தினர். இவ்வாறு, நானிலம் புகழும்

சேரன் புறப்பாடும் நீலகிரி அடைதலும்

மன்னவன் வஞ்சி நகரினின்றும் போந்து, நீலகிரி என்னும் இடத்தை அடைந்தான்.

அந்நீலகிரி மலையில் சில முனிவர்கள் இச் சேரனைக் கண்டு,

"அருமறை அந்தணர் ஆங்குளர் வாழ்வோர்
பெருநில மன்ன பேணல் நின்கடன்"

—கால்கோட்-102-103

என்று வாழ்த்திச் சென்றனர்.

அதற்குப் பிறகு தன் யாத்திரையில், கொங்கணரும், கொடுங் கருநாடரும் தங் குலத்துக் கேற்ற அணிமணிகளுடன் அரசனைக் கண்டு வணங்கிச் சென்றனர். குடகு நாட்டவரும், கருங்கயல் நெடுங்கண் காரிகையாருடன், அரசன் முன் வந்து யாழ் இயம்ப,

குடகரின் குரவைப் பாடல்

"காரோ வந்தது காதல ரேறிய
தேரோ வந்தது செய்வினை முடித்தென"

—கால்கோட்-118-119

என்னும் குரவைப் பாட்டை இசையுடன் பாடி அரசனைக் களிப்பில் ஆழ்த்தினர். வேந்தனும் அவர்களுக்குச் சிறந்த முறையில் பரிசளித்து அனுப்பினான்.

வாயில் காப்போன் சேர வேந்தனிடம் வந்து, "வேந்த! நாடக மகளிர் ஐம்பத்திருவரோடும், இசையாளர் இருநூற்றெண்மரும், நகை வேழம்பர் நூற்றுவரும், யானையும், குதிரைகளும் நூற்றுக் கணக்காகப் பின்தொடர, தூதுவர் தலைவனாகிய சஞ்சயன், நம் பாசறை வாயிலில் நின்னைக் காணக் காத்திருக்கின்றான்," என்றுசொன்னான். அரசனும் அச்சஞ்சயனை உள்ளேவிட உத்தரவிட்டான். எதிரே வந்து நின்ற சஞ்சயனை நோக்கி அரசன்,

"என்ன செய்தி கொணர்ந்தாய்?" என வினவினன். அதற்கு அச்சஞ்சயன், "வேந்தர் பெருமானே!

சஞ்சயன் சொன்ன செய்தி

வேற்றுமையின்றி, உம்முடன் உற்ற நட்புக் கொண்ட நூற்றுவர் கன்னர், உமக்கு ஒரு செய்தி சொல்லி அனுப்பியுள்ளார். இமயமலையில் ஒரு கல் எடுத்தற் பொருட்டுத் தாங்கள் வருவதாயின், அச் சிறிய காரியத்தின் பொருட்டுத் தாங்கள் வழி நடந்து வரவேண்டாம். எம் அரசரே அக்கல்லை இமய மலையினின்று எடுத்து, கங்கையில் நீராட்டித் தங்களிடம் பத்திரமாகச் சேர்ப்பிப்பார்கள். இதை உம்பால் சொல்ல என்னைத் தூதனுப்பினர்" என்று சொன்னன்.

இதைக் கேட்ட அரசன் "நல்லது, சஞ்சயனே! வட நாட்டிலுள்ள கனகனும், விசயனும் தமிழ் மன்னரின் பேராற்றலைப் பழித்துப் பலர் முன்னர் உளறியதாகக் கேள்விப்பட்டேன். அவர்கள் வாய்ப் பிதற்றலை அடக்கவே வட நாட்டுக்குப் போகின்றோம். நம் நண்பராகிய நூற்றுவர் கன்னரிடம் கங்கை யாற்றங்கரையில் நூறு படகுகள் சித்தம்செய்து வைக்கும்படி சொல்வாயாக" என்று சொல்லித் தூதுவனைச் சேரன் அனுப்பிவிட்டான்.

சேரன் தன் பரிவாரங்களுடன் கங்கைக் கரையை அடைந்து, கன்னர் தயாரித்து வைத்திருந்த படகுகளில் ஏறி, அதன் வடகரையை அடைந்தான். அங்கே நூற்றுவர் கன்னர் சேரனை

சேரனது வடநாட்டு வெற்றி

அன்போடு வரவேற்று உபசரித்தனர். அதன் பின்னர்த் தன் பகைவர் நாட்டில் புகுந்து பாசறையில் இருந்த பொழுது,

*"உத்தரன் விசித்திரன் உருத்திரன் பைரவன்
சித்திரன் சிங்கன் தனுத்திரன் சிவேதன்"*

—கால்கோட்—182-183

ஆகிய வடதிசை மருங்கில் வாழ்ந்த மன்னர் எல்லாரும் "தென் தமிழ் ஆற்றல் காண்போமாக!" என்று திரண்டனர். கனகன், விசயன் இருவரும் போருக்கு வந்தனர்.

இவ்வாறு குழுமிய வடநாட்டு வேந்தர்களின் சேனையைப் பதினெட்டு நாழிகையில் தென் தமிழ் நாட்டுச் சேனை முறியடித்து, வெற்றிக்கொடியை நாட்டிற்று. வெற்றிகொண்ட சேரன் செங்குட்டுவன் வாகை மாலை சூடினன். போரில் தோற்ற வடவேந்தரும், மற்றும் அனைவரும், எங்கும்நிற்காத வண்ணம் நொடிப்பொழுதில் பறந்தோடி மறைந்தனர். வணங்காமுடி மன்னராய் வாழ்ந்து வந்த கனகனும், விசயனும் தங்கள் அரசுமுடி இழந்து சேரன் செங்குட்டுவனால் சிறைப் பிடிக்கப்பட்டனர்.

கடும்போர் புரிந்து வெற்றிமாலை சூடிய சேரன் செங்குட்டுவன் தனது அமைச்சனாகிய வில்லவன் கோதையுடன், பல வீரர்களை அனுப்பி, இமயமலை உச்சியினின்றும் தெய்வப் படிவம் சமைத்தற்குரிய கல்லெடுத்து வந்து, அக்கல்லைக் கனக விசயர் தம் முடிமீது தாங்கி வர, கங்கையாற்றில் புனித நீராட்டினன். பின்னர், கங்கையாற்றுத் தென் கரையை யடைந்து, போரிலே வீரங் காட்டித் துறக்க முற்றோரின் மைந்தர்களுக்கும், வெற்றிகொண்ட வீரர்களுக்கும் பொன்னால் செய்த வாகைப்பூத் தோடாக்களை அளித்து அவர்களைச் சிறப்பித்தான்.

இமயமலையில் எடுத்த சற்கால்

20. செங்குட்டுவனும் கண்ணகி கோட்டமும்

வீரமக்களுக்குப் பொன் தோடாக்கள் பரிசளித்து, இன்புற்று வீற்றிருக்கையில், மாடலன் என்ற மறையவன், கங்கையில் நீராடி, அரசன் இருக்கையை அடைந்தான். அடைந்து, சேர மன்னனை வாழ்த்தி,

> "வாழ்க எங்கோ! மாதவி மடந்தை
> கானற் பாணி கனக விசயர்தம்
> முடித்தலை நெரித்தது" —நீர்ப்படை—49-51

என்று குறிப்பால் சில செய்திகளை உணர்த்தினன். இவைகளைக் கேட்டு அரசன் "இங்குள்ள பகையரசர்கள் பலர் அறிந்து கொள்ளாதவாறு குறிப்புரையால் சில சொற்கள் சொன்னாய்; அவைகளின் பொருள் யாதோ?" என்று வினவ, மாடலன் பின்வருமாறு கூறலுற்றான்:

கங்கைக் கரையில் மாடலன் தோற்றம்

"சேர வேந்த! கடற்கரைக்கு நீராடி விளையாடச் சென்ற மாதவியும் கோவலனும் யாழ் மீட்ட இசைந்து, மாதவி கானல்வரி என்னும் பாட்டை இசைத்தாள். ஊடல் காலத்து ஊழ்வினை வந்துருத்ததாகலின் கோவலன் மாதவியை விட்டு நீங்கினன். தன் குலக்கொடியாகிய கண்ணகியுடன் மதுரை மூதூர் புக்கான். அங்குக் கொலைக்களத்துப் பட்ட, கோவலன் மனைவி, உன் நாடு புகுந்து, வடதிசை மன்னர் மணிமுடி ஏறினள்" என்று

விரித்துரைத்தான். பின்பும் சொல்லத்தொடங்கினான்.

"மன்னர் மன்ன! இன்னமும் கேட்பாயாக! நான் பொதிய மலையை வலங்கொண்டு, குமரித் துறையில் நீராடி வந்தேன். மீளுந்தருணம் ஊழ் வினைப் பயனால் தென்னவன் மதுரைக்குள் புகுந்தேன். அங்குக் கண்ணகிக்கு அடைக்கலம் கொடுத்த மாதரி, 'கோவலன் தீதிலன்; கோமகன் பிழை செய்தான்' என்று அழுது, இடையிருள் யாமத்து எரியில் புகுந்து உயிர் துறந்தாள். கவுந்தியடிகள் 'என் வினையும் ஒருவேளை இவர்களைத் தாக்கிற்றோ?' என்று நினைத்து, உண்ணா நோன்பை மேற்கொண்டு ஆருயிர் நீத்தார். இந் நிகழ்ச்சிகள் யாவையும் கண்ணுற்று, என் பதியாகிய புகார் நகரத்துக்கே சென்று விட்டேன். அங்குக் கோவலனது தந்தை, தன் மைந்தனுக்கு உற்ற கதியை நினைந்து ஏங்கி, தன்னிடமிருந்த பொருள்கள் யாவற்றையும் தானமாக வழங்கி, இந்திர விகாரம் சென்று துறவறம் பூண்டான். அவன் மனைவி, மகன் இறந்துபட்ட செய்திக்கு ஆற்றாளாய் உயிர் துறந்தாள். கண்ணகியின் தந்தையும் ஆசீவகர்க்குப் புண்ணிய தானம் புரிந்து துறவறம் கொண்டான். கண்ணகியின் தாயாரும் தன் மகள் எய்திய கொடு நிலைக்கிரங்கி மாண்டாள். பொது மகளாம் மாதவியும் தன் செல்வம் எல்லாவற்றையும் தக்கோர்க்குத் தானம்செய்து, துறவறம் பூண்டாள். தன் மகள் மணிமேகலையையும், உலக இச்சைகளில் ஈடுபடா வண்ணம், துறவறத்தின் நன்னிலையை உணர்த்தி, அவளையும் துறவறம் மேற்கொள்ளுமாறு செய்தாள்.

மாடலன் கூறிய வரலாறு

இத்தீச் செயல்கள் எல்லாம் கேட்ட என் உடல் புனிதமாகும்பொருட்டு, இக்கங்கையின் நன்னீரில் நீராடப் போந்தேன்,'' என்று மொழிந்தான்.

இதைக் கேட்டு விசனமுற்ற வேந்தன் "நல்லது, மாடலரே! தென்னவன் பாண்டியன் இறந்தபின், அவன் நாடு எந்நிலை யடைந்தது? சிறிது சொல்வாயாக" என்று பணித்தான். அதற்கு மாடலன், "வேந்த! கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன், பத்தினித் தெய்வத்தின் கடுஞ்சினத்தை ஆற்றி, பாண்டிமண்டல ஆட்சியை மேற்கொண்டு, இப்பொழுது மதுரைமா நகரை அரசாண்டு வருகிறான்,'' என்று நவின்றான்.

இவ்வாறு, மாடலனும் அரசனும் உரையாடிக் களித்து நிற்க, வானத்தில் அந்திச் செக்கர் வெண் பிறை தோன்றியது. காலக் கணிதன் எழுந்து, "அரசே! நாம் நம் வஞ்சிமா நகரத்தை விட்டு இங்கு வந்து இன்றுடன் முப்பத்திரண்டு மாதங்கள் ஆகின்றன. மண்ணாளும் வேந்தனே! நீ நீடூழி வாழ்வாயாக!" என்று சேரனுக்கு வஞ்சி நகரை நெஞ்சில் நினைவுபடுத்தி நின்றான்.

அப்பொழுது சேரன் மாடலனை நோக்கி, "சோழநாடு எத்தகைய நிலையில் உள்ளது?" என்று வினவினான். அதற்கு மாடலன்,

> "குறுநடைப் புறவின் நெடுந்துயர் தீர
> எறிதரு பருந்தின் இடும்பை நீங்க
> அரிந்துடம் பிட்டோன் அறந்தரு கோலும்
> திரிந்து வேறாகுங் காலமு முண்டோ?"
>
> —நீர்ப்படை—166–169

என்று பதிலுரைத்தான். இவற்றை யெல்லாம் கவனமாக் கேட்டு வந்த அரசன் மாடலனுக்குத்

தன்னிறையுள்ள பொன்னைப் பரிசாகக் கொடுத்து, இன்பமுற்றிருந்தான்.

அதன்பின்னர் வட நாட்டரசர் நூற்றுவர் தத்தம் நாட்டுக்கேக அனுமதி யளித்தான். நீலன் என்னும் ஒற்றனைக் கனக விசய மன்னர்களுடன் ஏவி, சோழ பாண்டிய அரசர்களுக்கு அவர்களைக் காண்பிக்கச் செய்தான்.

வஞ்சி மாநகர் திரும்புதல்

பிறகு வட நாட்டினின்றும் புறப்பட்டு, வலம்புரிச் சங்கங்கள் முழங்க, அரசமா தேவியின் மனங்குளிர, மக்கள் திரண்டு அரசனை எதிர்கொண்டழைக்க, வாகை மாலை சூடிய சேரன் செங்குட்டுவன் தன் தலை நகராகிய வஞ்சிமா நகரினுட் புகுந்தான். தன் மனைவியின் ஊடலைத் தீர்த்து அரசியலை இனிது நடத்தி வந்தான்.

அப்பொழுது மாடல மறையவனோடு நீலன் அரச அவையில் தோன்றினான். நீலன் அரசனை நோக்கி, "வேந்த! சோழனும் பாண்டியனும், காவி தரித்துக் கமண்டலம் ஏந்தி ஓடி ஒளித்த அரசர் களைத் தாங்கள் சிறைபிடித்து வந்தது பெருமை தருவதாகாது என்று மொழிந்தனர்" எனச் சொன்னான். அவ்வுரையைக் கேட்ட சேரவேந்தன் அரவம்போல் சீறி வெகுண்டெழுந்தான்.

இக் கடுங் கோபத்தைக் கண்ட மாடலன் "மன்னர் மன்ன! சீற்றம் தணிக! தாங்கள் இந்த நாட்டை ஆளத்தொடங்கி இன்றுடன் ஐம்பது ஆண்டுகள் கழிந்தன. ஆயினும் இதுகாறும்,

"அறக்கள வேள்வி செய்யா தியாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோ யாயினை" —நடுகற்-131-132

நீ அறத்தினை மறந்து, மறத்தை மேற்கொண்டு

போரிலேயே உன் காலத்தைக் கழித்துவிட்டாய். உனக்குமுன் ஆண்ட அரசர்கள் எல்லாரும் இப்பொழுது எவ்விடத்து இருக்கின்றார்கள்? இவ்வுடல் என்றும் இருக்காது என்பதை நீ யறிந்ததே. இம்மல்லன் மா ஞாலத்தில் செல்வம் ஒருவரிடத்தே நில்லாதென்பது உன்னிடம் தோல்வியுற்ற வட நாட்டு அரசர் அடைந்த கதியிலிருந்து இதுகாறும் தெரிந்து கொண்டிருப்பாய். இப்பிறப்பில் இருக்கும் உயிர் அடுத்த பிறவியில் விலங்காக மாறினும் மாறும்; அல்லது வேறுவித வடிவத்திலும் இயங்கி நிற்கும். ஆக ஒரு வழியாக நில்லாமல், வினையின் வழியே உயிர் செல்லும் என்பது சான்றோர் ஒப்புக்கொண்ட சிறந்த கொள்கை. ஆதலால் யாவரும் பிறந்து இறக்கும் ஒரே தொழிலில் நிற்காமல், நற்பேற்றை யளிக்கும் வீட்டின்பத்தைப் பெற முயல்வாயாக! அதற்காக ஒரு வேள்வியைச் செய்து முடிப்பாயாக! நாளைச் செய்குவம் என்றிருந்தால், அந்த உயிர் இன்றே நீங்கினும் நீங்கும். ஆதலால், இன்றே அவ்வேள்வியைக் காலந்தாழ்த்தாது தொடங்குக!"

மாடலன் உரைத்த நீதியுரை

"ஊழியோ டூழி உலகங் காத்து
நீடு வாழியரோ நெடுந்தகை!" —நடுகற்–185–186

என்று அரசனை வாழ்த்தி நின்றான்.

அரசனும் மாடலன் உரைத்த நீதி மொழிகளைக் கேட்டு, அவன் உரைத்தவாறே வேள்விக்கு ஏற்பாடு செய்யும்படி தன் அமைச்சனுக்கு உத்தரவிட்டான். தான் சிறைப்பிடித்து வந்த வட நாட்டு மன்னர்களை விடுவித்து, தன் வேள்வி

முடிவுற்றதும், அவர்களைத் தங்கள் சொந்த நாட்டுக்குச் செல்ல அனுமதி யளித்தான்.

பின்னர் கண்ணகி கோட்டத்தில் திருவிழா நடத்தச் சிறப்பாக ஏற்பாடுகள் செய்தான். அதற்காக,

"அறக்களத்து அந்தணர், ஆசான், பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடும் சென்று"

—நடுகற்–222–23

பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்துத் தெய்வப் படிமத்தின் மீது, அணிகலன்கள் பூட்டி, பூப்பலி செய்து, காப்புக்கடை நிறுத்தி, வேள்வியும் விழாவும், சிறப்புறச் செய்தான். "அக்கடவுள் மங்கலம் விளைவிப்பதாக!" என்று வேண்டிச் சிறப்பித்து நின்றான். கற்புடைக் கண்ணகி கோட்டம் எல்லா அழகுகளும் பொலிய கண் கொள்ளாக் காட்சியாக விளங்கியது.

கண்ணகி கோட்டத்தில் திருவிழா

கண்ணகியைப் பிரதிட்டை செய்த காலத்தில் அவள் தோழியர் சிலர் அங்கு வந்தனர். கோவலன் மதுரையில் கொலையுண்டதையும், கண்ணகி வழக்குரைத்து மதுரை மாநகரைத் தீயால் எரித்ததையும் மாடலன் சொல்லக் கேட்டவர்களில் தேவந்தி என்பாளும், மற்றும் சில தோழியர்களும், காவிரிப்பூம் பட்டினத்தினின்றும் நீங்கிக் கண்ணகியைக் காண மதுரைமா நகரம் சென்றனர். மதுரையில் கண்ணகிக்கு அடைக்கலம் ஈந்த மாதரியின் மகள் ஐயை என்பவளால் சில செய்திகள் அவர்களுக்குத் தெரிய வந்தன. அவளையும் துணையாகக் கூட்டிக்கொண்டு, வையையாற்றின் கரைவழியாக மேற்கே சென்று, திருச்

கண்ணகியின் தோழியர் கோட்டங் காண வருதல்

செங்குன்றத்தை யடைந்து, கண்ணகி கோயில் கொண்டுள்ள இடத்தை யடைந்தனர். அங்கு வழிபட்டு நின்ற சேரன் செங்குட்டுவனுக்குத் தாங்கள் இன்னாரெனத் தெரிவித்து, யாவரும் கண்ணகியின் பழைய கால உறவினை நினைந்து வருந்தினார்கள்.

அப்பொழுது வீர பத்தினி,

"பொன்னஞ் சிலம்பிற் புனைமே கலைவளைக்கை
நல்வயிரப் பொற்றோட்டு நாவலம்பொன்னிழை சேர்
மின்னுக் கொடி யொன்று" —வாழ்த்து-9-(2-4)

வானில் பெருஞ்சோதியாய்த் தோன்றிற்று. இக் காட்சியைக் கண்டு யாவரும் அதிசயமுற்று நின்றனர்.

அப்பொழுது விண்ணினின்று,

"தென்னவன் தீதிலன்; தேவர் கோன் தன் கோயில்
நல்விருந் தாயினான்; நானவன் றன்மகள்;
வென்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்
என்னோடுந் தோழிமீ ரெல்லீரும் வம்மெல்லாம்"
—வாழ்த்து—10

என்று கண்ணகி கூறியமொழிகள் கணீரென்று கேட்டது. அங்குக் கூடியிருந்த வஞ்சி மகளிரெல்லாரும், "தென்னவன் தன் மகளைப் பாடுவோம்; பைந்தொடிப் பாவையைப் பாடுவோம்; பாண்டியன் தன் மகளைப் பாடுவோம்" என்று மூவேந்தரையும் வாழ்த்தினர். அம்மானை பாடினர்; கந்துக வரியால் பந்தடித்து நின்று வாழ்த்தினர்; ஊசல் பாடி ஆடினர்; வள்ளைப் பாட்டுக்கள் பாடினர். எல்லாம் முடிந்ததும் வீர பத்தினி கண்ணகியும், அரசன்,

வானொலி செய்த கண்ணகி

"செங்குட்டுவன் நீடுழி வாழ்க!"

என்று விண்ணினின்று வாழ்த்தினாள்.

கண்ணகி வழிபாடு முடிந்ததும், சேரன் செங்குட்டுவன் தேவந்தியைப் பார்த்து, மாதவி மகளாகிய மணிமேகலை இவ்வுலக வாழ்க்கையில் பற்றற்றுத் துறவறம் பூண்டதன் காரணத்தை வினவினான். கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேட்டதும் மாதவி துறவறம் பூண்டதாகவும், தன் மகள் மணிமேகலையையும் காமன் கணைக்கு இலக்காகாமல் இருக்கும் பொருட்டுத் துறவறம் மேற்கொள்ளச் செய்ததாகவும் கூறினாள்.

இவ்வாறு கூறி முடியுந்தருணம், தேவந்தி மீது தெய்வ ஆவேசம் வந்தது. அவளுடைய செருகி யிருந்த கூந்தல் அவிழ்ந்து விழுந்தது. சிவந்தவாய் மடிந்தது. திருமுகம் வியர்த்தது. அவள் மீது பாசண்ட சாத்தன் ஆவேசமாகி, மாடலனை நோக்கி, "இச்செங் குன்றில் ஓர் அருஞ்சுனையுண்டு. அச்சுனையில் நீராடியவர்கள் தங்கள் பழப்பிறப்பை உணர்வார்கள். அந்நீர் இப்பொழுது உன் கைக் கமண்டலத்திலுள்ளது. அதனை இதோ நிற்கின்ற இம்மூன்று பெண்கள் மீதும் தெளிப்பாயாக" என்று சுட்டிக் காட்டி உரைத்தாள். அவனும் தன்கையில் அச்சுனை நீரை எடுத்து அங்கிருந்த மூன்று பெண்கள் மீதும் தெளித்தான். தெளித்த அளவில், அம்மூவரும் தத்தம் பழம் பிறப்பை உணர்ந்தார்கள். அம்மூவரும் கண்ணகியை நினைந்து வருந்தும்போது, கண்ணகியின் தாயும், கோவலன் தாயும், மாதரியின் உருவமுமாக இருக்கக் கண்டு யாவரும் ஆச்சரியமடைந்தனர். நற்றவம் செய்து நானிலம் புரக்கும் மன்னன் முற்பிறப்பில்

தேவந்தியின் ஆவேசமும் பழம்பிறப்பு உணர்தலும்

நிகழ்ந்த செய்திகளை நேரே உணர்ந்ததற்கு அவன் நோற்ற நோன்பே காரணமாகும். அரசனை நீடூழி வாழுமாறு வாழ்த்தித் தெய்வம் மறைந்துவிட்டது.

இது முடிந்ததும், வீர பத்தினிக் கோட்டத்துக்குத் திருவிழா எடுக்குமாறு தேவந்தியிடம் சொல்லிச் சேர மன்னவன் கண்ணகிப் படிவத்தை மும்முறை வலம் வந்து வணங்கி நின்றான். அவ்வண்ணம் நின்றபொழுது, அருஞ்சிறை நீங்கிய வடநாட்டு மன்னரும், பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும், குடகக் கொங்கரும், மாளுவவேந்தரும், கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் தங்கள் தங்கள் நாட்டிற்கு எழுந்தருளி, அருள் புரியும்படி கண்ணகியை வேண்டி நின்றனர். அப்பொழுது வானத்தே ஒரு குரல் கேட்டது.

கயவாகு மன்னன் கண்ணகியை வேண்டல்

"தந்தேன் வரம் என்றெழுந்தது ஒருகுரல்"

—வரந்-164

ஒவ்வொருவரும் அச்சொற்களைக் கேட்டுப் பேரின்பம் அடைந்தவர் போல் களித்தனர். இதன் பிறகு சேரமன்னன் மாடல மறையோனுடன் வேள்விச்சாலைச் சென்றான்.

ஆசிரியர் இளங்கோ அடிகளும் அவர்களுடன் சென்றார். தேவந்திகை மீது வீரபத்தினி தெய்வம் வந்துற்றது. இளங்கோ அடிகளைப் பார்த்து "வஞ்சிமா நகரில் மணிமண்டபத்தில் உன்னுடைய தாய்தந்தையருடன் இருந்தாய். அப்பொழுது அங்கு ஒரு நிமித்தகன் வந்து, உன்னை நோக்கி, உனக்கு

'அரைசு வீற்றிருக்கும் திருப்பொறியுண்டு" —வரந்-175

என்று சோதிடம் சொன்னான். உனக்கு அண்ணன் சேரன் செங்குட்டுவன் ஒருவனிருக்க, உன்னை நோக்கி அவன் அங்ஙனம் கூறியது சரியல்ல என்று முனிந்து, உன்னால் உன் அண்ணனுக்கு யாதொரு தீங்கும் நேராதிருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், அப்பொழுதே குணவாயில் கோட்டத்துச் சென்று துறவு பூண்டாய். அந்தமில் இன்பத்து அரசாள் வேந்தனாய் விளங்குகின்றாய்" என்று அத்தெய்வம் கூறி மறைந்தது.

இளங்கோ வழங்கிய நல்லுரை

உலகமெல்லாம் ஒன்றுபட்டு இன்பமாக வாழ வேண்டும் என்று அவ்வீரபத்தினிக்குச் சிறந்ததோர் ஆலயம் எடுத்து, மனம், வாக்கு, காயம் ஆகிய இம் மூன்றும் ஒன்றிய வழிபாட்டினைச் செய்து, தமிழ் மக்கள் அனைவரும் இணையிலாப் பேரின்பக் கடலில் திளைக்குமாறு செய்தான் சேரன் செங்குட்டுவன். சேர நாடு செழிப்புற்றது; குடியின் செல்வம் பெருக்கெடுத்தது; அறங்கள் நிரம்பப்பெற்றன. எங்கும் சுபிட்சம் நிலவி, ஆனந்த ஒளி வீசி நின்றது!

"அறத்தான் வருவதே இன்பம்; மற்றெல்லாம்
புறத்த புகழு மில."
—திருக்குறள்

என்று வாழ்விற்கு வழி காட்டுகிறார் திருவள்ளுவப் பெருந்தகையார். சிலம்பின் கதையைச் செவ்வனம் கூறிய இளங்கோ அடிகளார் இக்கதையின் முடிவில் கூறிய அறவுரைகளை அறிந்து, அதன்படி நடந்து நல்வாழ்வு வாழ்வோமாக!

இளங்கோவடிகள் வழங்கிய நல்லுரை:

"பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வந் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய்யுரை அஞ்சுமின்; புறஞ்சொற் போற்றுமின்;
ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானஞ் செய்மின்; தவம்பல தாங்குமின்;
செய்நன்றி கொல்லன்மின்; தீநட் பிகழ்மின்;
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்;
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர்மனை அஞ்சுமின்; பிழைஉயிர் ஓம்புமின்;
அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளுங் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்;
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா;
உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது;
செல்லுந் தேயத்துக் குறுதுணை தேடுமின்!
மல்லன் மாஞாலத்து வாழ்வீர்! ஈங்கென்!"

—வரந்.—186–202

(வஞ்சிக் காண்டம் முற்றும்)

———

கட்டுரைப் பயிற்சி

1. சிலப்பதிகாரத்தின் சிறப்புக்களைத் தொகுத்து எழுதுக.
2. காவிரிப்பூம் பட்டினத்தின் சிறப்புக்களை இருபது வரிகளில் எழுதுக.
3. கண்ணகி-கோவலன் இருவரது இன்பம் நிறைந்த இல்வாழ்க்கையை இருபது வரிகளில் எழுதுக.
4. மாதவியின் கலைச்சிறப்பும் நடன அரங்கேற்றமும் பற்றிப் பதினைந்து வரிகளில் எழுதுக.
5. "இந்திர விழா" பற்றி ஒரு கட்டுரை வரைக.
6. கோவலன் பிரிந்தபின், மாதவியின் நிலைமையை விவரித்து ஒரு கட்டுரை எழுதுக.
7. தேவந்தியின் வரலாற்றைப் பதினைந்து வரிகளில் எழுதுக.
8. கவுந்தியடிகள் கூறிய மதுரை வழியை வருணித்து எழுதுக.
9. காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து கோவலன் கண்ணகியுடன் உறையூர்ப்பதியை அடைந்தது வரையில் நிகழ்ந்த பிரயாண நிகழ்ச்சிகளைக் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.
10. மாங்காட்டு மறையோன் மொழிந்த மதுரை வழியை வர்ணிக்க.
11. கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் மதுரை சென்றபோது காட்டு வழியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.
12. சாலினி ஆடிய ஆவேசம்—பத்து வரிகளில் எழுதுக.
13. கோவலன் கண்ட மதுரைச் சிறப்பினைக் குறித்துக் கட்டுரை எழுதுக.

14. மாடலனுக்கும் கோவலனுக்கும் நிகழ்ந்த உரையாடல்களை உரையாடல் முறையில் அமைத்து ஒரு கட்டுரை அமைக்க.

15. ஆயர்பாடியில் கோவலன் கண்ணகி தங்கிய காலத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் குறித்துக் கட்டுரை ஒன்று எழுதுக.

16. கோவலனது கழிவிரக்கம்—பத்து வரிகளில் எழுதுக.

17. பொன்செய் கொல்லன் கூறிய கட்டுரைபற்றி கட்டுரை எழுதுக.

18. கண்ணகி அரசனிடம் வழக்குரைத்த வகைபற்றி உரையாடல் முறையில் ஒரு கட்டுரை எழுதுக.

19. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை எடுத்து வழிபட்ட வரலாறுபற்றிக் கட்டுரை எழுதுக.

20. இளங்கோவடிகள் தமது காவியத்தின் வாயிலாக நமக்கு வழங்கும் நல்லுரைகளைத் தொகுத்து இரண்டு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

* * * *

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
யாரம் படைத்த தமிழ் நாடு."

* * * *

"வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித் திருநாடு!" —பாரதியார்

OTHER IMPORTANT TAMIL BOOKS
FOR

HIGH SCHOOL PUPILS

		ரூ.	அ.
சொப்பனக்காரன் அல்லது தேவதாஸ் By I. R. Vedanayagam	...	0	12
உத்தம புருஷன் (*Approved for Class use*) By J. John Dorairaj	...	0	8
தழைத்த மல்லிகை By Mary Masilamani	...	1	8
அமலா By T. B. Nithiyanandam	...	1	0
பெனிசிலின் By Capt. N. Seshadrinathan	...	1	4
விஞ்ஞான வெளிப்பாட்டு வழி By C. T. Philip	...	2	0

Write for C. L. S. Educational Catalogue for
Library and School Books in
TAMIL. TELUGU AND ENGLISH

SENTHAMIZH SILAMBU

BY

V. S. V. RAGHAVAN

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
P. B. 501, Park Town, Madras-3.
விலை ரூபாய் 1